விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 25 ஞாயிற்றுக்கிழமை (11.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 327

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## யாழை சேர்ந்த பல்கலை மாணவர்கள் இரத்தினபுரியில் நீரில் மூழ்கி உயிரிழப்பு



சாரங்கன் கோபிசன் திசாந்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி - பலாங்கொடை, பான் குடா ஓயாவில் நீராட சென்ற சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களே உயரிழந்துள்ளனர்.

நீரில் மூழ்கிய மாணவர்களை

16 ஆம் பக்கம் பார்க்க....

## பாராளுமன்றத்தை கலைத்த ஜனாதிபதியின் செயற்பாடுகளை நீதிமன்றில் முறையிடுவோம்!

### ஐ.தே.க மற்றும் ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பை மீறி ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தைக் கலைத்தமைக்கு எதிராக அடுத்த வாரம் நீதிமன்றத்தில் முறையிடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் தமக்கு உண்டு எனவும், அடுத்தவாரம் இதனை நிரூபித்துக் காட்டுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

16 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் நடவடிக்கையை நீதிமன்றில் வினவுங்கள்

### பப்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியின் நடவடிக்கை தொடர்பில் இரு கருத்துக்கள் நாட்டில் நிலவுவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு அவசியம் நீதிமன்றத்திடம் விளக்கம் கோர வேண்டும் எனவும் தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பப்ரல் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அதிரடியாக பாராளுமன்றத்தைக் கலைத்தமை அரசியல் யாப்புக்கு முரணானது அல்லவெனவும், புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது எனவும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

தேர்தலை நடத்த முன்னர் இது

16 ஆம் பக்கம் பார்க்க....

## பாராளுமன்றம் கலைப்பு

# உதவிகளை நிறுத்துவோம்

## அமெரிக்கா கடும் எச்சரிக்கை

**(வாஷிங்டன்) பாராளுமன்றத்தை கலைத்த ஜனாதிபதியின் செயலானது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலான செயல் என சுட்டிக் காட்டிய அமெரிக்கத் தூதரகம், அமெரிக்கா மூலம் இலங்கைக்கு கிடைக்கும் உதவிகளை நிறுத்த வேண்டிவரும் எனவும் கடுமையான எச்சரிக்கையும் விடுத்துள்ளது.**

ஜனாதிபதி . தனது நடவடிக்கைகளின் மூலம் அமெரிக்க உதவிகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றார் என அமெரிக்காவின் சனப்பிரதிநிதிகள் சபையின் வெளிவிவகார குழுவின் தலைவராக பதவிவகிக்கவுள்ள எலியட் ஏஞ்சல் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் எலியட் ஏஞ்சல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

16 ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் தேவையில்லை

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஆலோசனை பெற வேண்டிய தேவை இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர்

16 ஆம் பக்கம் பார்க்க....

## குழிக்குள் விழுந்த இரு சிறுவர்கள் மன்னாரில் பலி



(மன்னார்)

மன்னாரில் நீர் நிறைந்த குழிக்குள் விழுந்து இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

16 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலமைப்பை மீறியே ஜனாதிபதி செயற்படுகின்றார்

### மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பம் முதலே அரசியலமைப்பை மீறி செயற்பட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அந்த கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும்

16 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் சமூகத்தை ஒன்றிணைத்து அரசியலை முன்னெடுப்பதற்கு விக்னேஸ்வரனே பொருத்தம்

### யாழ்ப்பாணத்தில் தொல். திருமாவளவன்

(யாழ்ப்பாணம்)

ஈழ அரசியல் களத்தில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது, சிதறிக்கிடக்கும் தமிழ் சமூகத்தை ஒன்றிணைப்பதற்கு ஜனநாயக

15 ஆம் பக்கம் பார்க்க....



## தமிழரின் ஒற்றுமையே கூட்டமைப்பின் பலம்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களின் ஒற்றுமையும், ஒருமித்த செயற்பாடுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலமாக அமைந்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.

15 ஆம் பக்கம் பார்க்க....

## பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்மானம் எடுக்கவில்லை

### சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து ஆறுதலாக அறிவிக்கிறேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் வடக்கு மாகாண சபை முதல்வருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று சங்கிலியன் பூங்காவில்

16 ஆம் பக்கம் பார்க்க....

## அலரி மாளிகையில் இருந்து ரணில் வெளியேறமாட்டார்

(கொழும்பு)

இலங்கையின் பிரதமர் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க தான் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையிலேயே ரணில் விக்கிரமசிங்க தங்கியிருப்பார் என

16 ஆம் பக்கம் பார்க்க....

# மண்டேலாவாக எதிர்பார்க்கப்பட்ட மைத்திரி முகாபேயாக மாறிவிட்டார்

## •மங்கள சமரவீர கவலை

நெல்சன் மண்டேலாவாக இருப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரி, ரொபர்ட் முகாபேயாக மாறிவிட்டாரென ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஜனாதிபதியின் சர்வாதிகார செயற்பாடுகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி, தனது அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்ட தலைவராக வரலாற்றில் இடம்பிடித்த மைத்திரி, தாம் கொண்டுவந்த அரசமைப்புக்கு எதிராக செயற்பட்ட அரச தலைவராகவும் மாறிவிட்டார்.

ஜனாதிபதியின் விருப்பத்துக்கு இணங்கவே இந்த அரசமைப்பை நாம் அன்று கொண்டு வந்தோம். 4 வருடங்களும் 6 மாதங்களும் கடந்த பின்னரே நாடாளுமன்றை கலைக்க முடியும் என அரசமைப்பிலும் உள்ளது. அதற்கு இணங்க 2020 பெப்ரவரிக்கு பிறகே நாடாளும்மன்றத்தைக் கலைக்க முடியும்.

ஆனால், இன்று தமது தரப்பினருக்கு பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் அரசமைப்புக்கு முரணாக ஒரு சர்வாதிகாரி போன்று நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். நாம் தேர்தலை சந்திக்க என்றும் அஞ்சியதில்லை. அரசமைப்புக்கு மீறி செயற்பட்ட காரணத்தினால்தான் உச்சநீதிமன்றத்தையும் நாடவுள்ளோம்.

ஆபிரிக்க நாடுகளில்கூட இல்லாத அளவிற்கு இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை காணப்படுகிறது.

நெல்சன் மண்டேலா போன்ற தலைவரைக் கொண்டுவருவோம் என்றே நாம் 2015ஆம் ஆண்டு வாக்களித்திருந்தோம். எனினும் தற்போது முகாபே போன்ற ஒரு பைத்தியக்கார தலைவரே நாட்டுக்குக் கிடைத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு பொதுத்தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்ற தேவை இருந்தால், எம்முடன கலந்து ஆலோசித்திருக்கலாம். நாமும ஒத்துழைப்புக்களை வழங்கியிருப்போம். அதனை விடுத்து இவ்வாறு செயற்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார். (ம)

# தேர்தலை எதிர்கொள்ள ஐ.தே.க தயார்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

2019ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதி மற்றும் அவரது சட்டவிரோத அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப தயாராக உள்ள தாகவும் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கையொப்பத்துடனான விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

இது சட்டவிரோதமான ஒன்று என ஐக்கிய தேசிய கட்சி தெரி வித்து வந்த நிலையில், அலரி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

அத்தோடு நாடாளுமன்றத்தை கலைத்தமைக்காக உச்ச நீதிமன்றம் செல்வதாக கூறிய ஐ.தே.க. தற்போது தேர்தலுக்கு தயார் என கூறியுள்ளது. (ம)


**பதவி வெற்றிடம்**

**கணினி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்கவடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்) தேவை**

**முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்**

**070 220 2206**


# அடுத்த 48 மணிநேரத்தில் வங்கக்கடலில் கஜா புயல்

வங்கக் கடலில் உருவாக உள்ள புயலுக்கு கஜா என்று பெயரிடப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் அடுத்த 48 மணி நேரத்தில் உருவாக உள்ள புயலுக்கு தாய்லாந்து சார்பில் வழங்கப்பட்ட கஜா என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. வர்தா புயல் போன்ற தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய புயல் என கஜா புயல் எதிர்பார்க்கப்படுகிறது.

தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் புயலாக மாறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ம)

# பழைய முறையிலேயே தேர்தல் நடத்த வேண்டியேற்படும்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் சுயாதீனமாக செயற்படாமையின் காரணமாகவே, நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை நேற்று சந்தித்ததன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் அரசியலமைப்புக்கு உட்பட்டு செயற்படாமல், தன்னிச்சையாக செயற்பட்ட காரணத்தினால் ஜனாதிபதியினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதே தமது தனிப்பட்ட நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட விடயத்தில் சட்டவிரோதமாக எந்தவொரு செயற்பாடும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில், பழைய முறைமைக்கு அமைய விருப்பு வாக்கு முறைமையிலேயே பொதுத் தேர்தலை நடத்தவேண்டியேற்படும் எனறும் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (ம)

# நாடாளுமன்றம் கலைப்பு வருத்தப்பட வேண்டிய விடயம்

## கனேடிய அரசு தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை வருத்தமளிப்பதாக கனேடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கனடாவின் வெளிவிவகார அமைச்சின் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான முடிவால் கனடா மிகவும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

இந்த அரசியல் நிச்சயமற்ற தன்மை இலங்கையின் ஜனநாயக எதிர்காலத்திற்கு. நல்லிணக்கம் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றின் மீதான அதன் கடப்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தொடர்ச்சியாக அதிருப்தி வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


**உடன் தேவை**

கொள்கலன் (Container)
உடன் தேவை
வைத்திருப்பவர்கள்
தொடர்பு கொள்ளவும்

தொ.பே
**070 220 2206**

அலுவலக
**வேலைவாய்ப்பு**

தனியார் நிறுவனம் ஒன்றில்
பணிபுரிவதற்கு பெண் ஊழியர் தேவை

(6409) **076 835 1932**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**காரைநகர்**
**கிழவன்காடு கலாமன்றம்**
**யாழ்கிளை**

**இடமாற்றம்**

எமது கலாமன்ற யாழ்கிளையானது இன்று தொடக்கம் இல. 428, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன் கோவில் அருகில்) எனும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

பதிவாளர்
கிழவன்காடு கலாமன்றம்
யாழ்கிளை

இல.428,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(C-4386)

**கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி**



05.10.2018 அன்று ஜேர்மன் தூதரகத்தினால் நடைபெற்ற A1 பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்று எமது கல்வி நிறுவனத்துக்கு பெருமை சேர்த்து தந்த மாணவர்களை புகைப்படத்தில் காணலாம்.

- கோணேஸ்வரனின் வழிகாட்டலில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- ஒவ்வொரு பரீட்சையிலும் அதிகூடிய மாணவர்கள் சித்தியடைகின்றார்கள்.

**கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**
077 970 7322

(6360)

### “மூடிய அறைக்குள் முதியவர்கள் தீர்மானம்”

# ஜனநாயகத்திற்கு சத்தியசோதனை

## இலங்கை நிலவரம் குறித்து ஐ.நா.தூதுவர் விசனம்

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியானது, ஆசியாவின் பழைமைவாய்ந்த ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள சத்திய சோதனை என ஐக்கிய நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்கான தூதுவர் ஜயத்மா விக்கிரமநாயக்க விமர்சித்துள்ளார்.**




அத்தோடு, இலங்கையின் தலையெழுத்தை, மூடிய அறைக்குள் சில முதியவர்கள் இணைந்து தீர்மானிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில், நாட்டின் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து அரசியல் தலைவர்கள் செயற்படுவது அவசியமென ஐ.நா. தூதுவர் ஜயத்மா வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கு அனைவரும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றம் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கலைக்கப்பட்டது.

அத்தோடு, எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படுமென அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாடாளுமன்றம் கலைப்பு அமெரிக்கா ஆழ்ந்த கவலை

(வோஷிங்டன்)

நாடாளுமன்றம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திடீரென கலைக்கப்பட்டமை தொடர்பாக அமெரிக்கா வருத்தம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு வெள்ளிக்கிழமை திடீரென நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை குறித்து, சட்டவல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் அமெரிக்கா இதனை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதுடன், அரசியல் நெருக்கடியை மேலும் ஆழமாக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒரு உறுதியான பங்காளியாக, ஜனநாயக சமூக அமைப்புகள் மற்றும் செயல்கள், நிலைத்தன்மை 'மற்றும் செழிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமரை மாற்றியதன் விளைவாக நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

இந்நிலையில், இரண்டு வருடங்கள் மீதமிருக்கின்றபோது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஜனவரி 5 ஆம் திகதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சட்டபூர்வமான ஏற்பாடுகளுக்கு ஐ.தே.க.ஆதரவளிக்கும் -ஹாசீம்

(கொழும்பு)

“கட்சி வெகு விரைவில் தேர்தல் ஆணையாளரை சந்தித்து தேர்தல் தொடர்பாக கலந்தாலோசிக்கும்” என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கபீர் ஹாசீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கு சட்டபூர்வமான வழிமுறைகள் உள்ளன. அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கும் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவளிக்கும் எனத் தெரிவித்தார். (இ-7)

### “தற்கொலை செய்யும் சுபாவமுடைய தமிழ்த் தலைவர்கள்”

## ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தது சரியான நடவடிக்கை


## சுப்பிரமணியன் சுவாமி வரவேற்பு

(டில்லி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தை கலைத்தது சரியான நடவடிக்கை என குறிப்பிட்டுள்ள பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்திருந்தால் இந்த நிலையேற்பட்டிராது என தெரிவித்துள்ளார்.

கட்சி தாவுபவர்களை அடிப்படையாகக் கொண்ட பெரும்பான்மை என்பது அரசமைப்பிற்கு உகந்ததாகயிருந்தாலும் ஜனநாயகத்தில் தார்மீகம், வாக்காளர்களே தீர்மானிக்கவேண்டும் என தெரிவிக்கின்றது எனவும் சு.சுவாமி குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளித்திருந்தால் அது சிறந்த விடயமாக அமைந்திருக்கும் எனவும் ஆனால் தமிழ்த் தலைவர்கள் தற்கொலை செய்யும் சுபாவத்தை



உடையவர்கள் எனவும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். (இ-7)

## நான் சொன்னதைப் போலவே அரசைக் கவிழ்த்து விட்டேன்

### பிரதமர் மகிந்த பூரிப்பு

(கொழும்பு)

தான் கூறியது போலவே பௌர்ணமி தினத்திற்கு முன்னதாகவே அரசாங்கத்தை கவிழ்த்து விட்டதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது தீர்மானம் சரியானதா என நாடாளுமன்றத்தில் அல்ல, மக்களிடமே வினவ வேண்டும். “ஏன் உங்களுக்கு 8 அல்லது 6 மாதங்கள் பொறுமையாக இருக்க முடியவில்லை என வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலர் என்னிடம் கேட்டனர்.



எனினும், பொறுமையாக இருந்திருந்தால் 8 மாதங்களில் இலங்கையில் மீதமாவது என்ன என்பது தொடர்பில் பிரச்சினையுள்ளது.

அனைத்தையும் பட்டியலிட்டு விற்பனை செய்யும் திட்டத்தில் அரசாங்கம் இருந்தது” எனவும் மகிந்த தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதியின் தீர்மானம் அரசியலமைப்புக்கு முரண் நீதிமன்றை நாடவுள்ளோம்

### மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக்கலைப்பதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானம் அரசியலமைப்புக்கு முரணானது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்திடம் நீதியைக் கோரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சர்வதேசத்தை ஈர்த்துள்ள இலங்கை விவகாரம்

### பிரித்தானியா கரிசனை

(லண்டன்)

இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக சர்வதேச நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றன.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறுமென அரசாங்கம் அறிவித்திருந்தது. எனினும், அதற்கு சில தினங்களுக்கு முன்பாக இவ்வாறு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து



வருவதாக பிரித்தானியாவின் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் மார்க் ஃபீல்ட் தெரிவித்துள்ளார்.

இல்ங்கையின் நல்ல நண்பன் என்ற ரீதியில், இலங்கையின் சகல கட்சிகளும் அரசியலமைப்பை மதித்து செயற்பட வேண்டுமென பிரித்தானியா வலியுறுத்துவதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு, ஜனநாயகத்தை மதித்து சகல நிறுவனங்களும் செயற்பட வேண்டும் என்றும் மார்க் ஃபீல்ட் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# சேப்பாக்கம் இன்று யார் 'பக்கம்'

## இந்தியா - மே.தீவுகள் இன்று இறுதி மோதல்

இந்தியா - மே.தீவுகள் மோதும் மூன்றாவது மற்றும் கடைசி 'ரி20' போட்டி இன்று சென்னையில் நடக்கிறது. இதில் இந்திய அணி அசத்தும் பட்சத்தில், 'ஹட்ரிக்' வெற்றியுடன் கிண்ணத்தைக் கைப்பற்றும்

அதேவேளை, மேற்கிந்தியத் தீவுகள் ஆறுதல் வெற்றியை ஈட்டும் நோக்குடன் களமாடலாம்.

இந்தியா சென்றுள்ள மே.தீவுகள் அணி (அதிகாரபூர்வமாக விண்டீஸ்) மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் வென்ற இந்திய அணி தொடரை 2-0 என கைப்பற்றியது.

மூன்றாவது மற்றும் கடைசி போட்டி இன்று சென்னை சேப்பாக்கம் மைதானத் தில் நடக்கிறது.

இந்திய அணியின் துடுப்பாட்டம் வலுவாக உள்ளது. கடந்த போட்டியில் சதம் அடித்த அணித் தலைவர் ரோகித் சர்மா நம்பிக்கை கொடுக்கிறார். இவருடன் சேர்ந்து தவான், லோகேஷ் ராகுல், ரிஷாப் பன்ட், விக்கெட் காப்பாளர் உள்ளூர் வீரர் தினேஷ் கார்த்திக் ஓட்ட மழை பொழியலாம்.

கடந்த 5 ஒரு நாள், 2 'ரி20' என பங்கேற்ற 7 போட்டிகளில் தவான் ஒரு அரைச் சதம் கூட அடிக்க வில்லை. இன்று பெரியளவில் ஓட்டம் குவித்தால் நல்லது. ஸ்ரேயாஸ் ஐயர், மண்ணின் மைந்தன் வோஷிங்டன் சுந் தர், ஷாபாஸ் நதீம் உள்ளிட்ட வீரர்களுக்கு களமிறங்கும் வாய்ப்பு தரப்படும் என நம்பப்படுகிறது.

**புவி நம்பிக்கை**

வேகப்பந்து வீச்சில் பும்ரா, உமேஷ் யாதவ், குல்தீப் இல்லை என்பதால் குர்னால் பாண்ட்யாவுடன் சகால் மீண்டும் அணிக்கு திரும்பலாம். புவனேஷ்வர் குமார், கலீல் அகமட் ஜோடி இன்று அணிக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டும்.

**'ரொப்' மோசம்**

அனுபவ கெய்ல், எவின் லீவிஸ் இல்லாத தால் மே.தீவுகள் அணி யின் 'ரொப்' ஓர்டர் பலவீனமாக உள்ளது. ஹோப், ஹெட்மயர், ராம்டின் என மாறி மாறி வந்த போதும் ஓட்டங்கள் வந்த பாடில்லை. பொலார்ட், பிராவோவும் பிரகாசிக்க வில்லை.

இதனால் அணித் தலைவர் பிராத் வைட்டுக்கு கூடுதல் நெருக்கடி தான். பந்து வீச்சில் ஒசானே தோமஸ் மட்டும் வேகம் மற்றும் விக்கெட் வீழ்த்துவதில் ஆறுதல் கொடுக்கிறார். இவருக்கு மெக்காய், கீமோ போல் என ஒருவரும் உதவவில்லை.



மே.தீவுகளின் தோமஸ் (இடது) ருதர்போர்ட் பயிற்சியில் ஈடுபட்டபோது...

**தோனி இல்லையே...**

தமிழக ரசிகர்களின் 'ஹீரோ' தோனி. சென்னை இவருக்கு இரண்டாவது தாய் வீடு என்பர். இவர் இல்லாமல் சென்னையில் இன்று போட்டி நடக்கவுள்ளது. இது ரசிகர்களுக்கு பெரிய ஏமாற்றம் தான்.

உ

சென்னையில் இரண்டாவது முறையாக சர்வதேச 'ரி20' போட்டி நடக்கவுள்ளது. இதற்கு முன் இங்கு 2012, செப். 11ல் தான் நடந்தது. தற்போது 6 ஆண்டுக்குப் பின் மீண்டும் சர்வதேச 'ரி20' போட்டி நடக்கவுள்ளது.

**ஆடுகளம் எப்படி?**

பொதுவாக சென்னை ஆடுகளத்தில் பந்து நன்றாக 'சுழலும்'. இன்று துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரவில் ஏற்படும் பனிப்பொழிவு இரண்டாவது பந்துவீசும் அணிக்கு பாதிப்பு ஏற்படுத்தலாம். இதனால் நாணயச்சுழற்சியில் வெல்லும் அணி பந்துவீச்சை தேர்வு செய்யலாம்.

## வோர்னர், ஸ்மித் சந்திப்பு



பந்தை சேதப்படுத்திய விவகாரத்திற்குப்பின் அவுஸ்திரேலியாவின் வோர்னர், ஸ்மித் ஒரே போட்டியில் களமிறங்கினர்.

தென்னாபிரிக்க மண்ணில் நடந்த கேப்டவுன் (மார்ச் 2018) டெஸ்டில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித், வோர்னர், பான் கிராப்ட் சிக்கினர்.

இதில் ஸ்மித், வோர்னருக்கு தலா ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இந்த விவகாரத்திற்குப்பின் இருவரும் நேரடியாக சந்திக்கவில்லை.

இதற்கிடையே, அவுஸ்திரேலியாவின் என்.எஸ். டபிள்யு., பிரிமியர் உள்ளூர் தொடரில் (50 ஓவர், சிட்னி) வோர்னர் (ரான்ட்விக் பீட்டர்ஷம் அணி), ஸ்ரீவ் ஸ்மித் (சதர்லாந்து அணி) பங்கேற்றனர்.

துடுப்பெடுத்தாடிய ரான்ட்விக் அணிக்காக வோர்னர் ஆரம்பம் கொடுக்கத் தயாரானார். ஸ்மித் உள்ளிட்ட எதிரணி வீரர்கள் மைதானத்திற்குள் வந்தனர். அப்போது இருவரும் சந்தித்து கொண்டனர். வோர்னர் (13 ஓட்.,) துடுப்பாட்டம் செய்தபோது, ஸ்மித் களத்தடுப்பில் ஈடுபட்டார்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ரான்ட்விக் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களை எடுத்தது.

பின், களமிறங்கிய சதர்லாந்து அணிக்கு வோட்சன் (63), ஸ்மித் (48) கைகொடுக்க, 49.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வோர்னர், ஸ்மித் இருவருக்கும் சிறுவர்கள் உட்பட ரசிகர்கள் கைதட்டி ஆதரவு கொடுத்தனர்.

## பாக்., வெற்றி



நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் பகார் ஜமான் அரைச்சதம் கடந்து கைகொடுக்க பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் மோதிய 2ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் அபுதாபியில் நடந்தது.

நாணயச்சுழற்சியல் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு கொலின் முன்ரோ (13), ஜோர்ஜ் ஒர்க்கர் (28) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது.

அணித் தலைவர் வில்லியம்சன் (1) 'ரன் அவுட்' ஆனார். ரொம் லெதம் (1), கொலின் டி கிராண்ட்ஹோம் (3) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஹென்ரி நிகோல்ஸ் (33) ஆறுதல் கொடுத்தார். ரோஸ் ரெய்லர் அரைச்சதம் கடந்தார்.

50 ஓவர்களில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களை எடுத்தது. ரோஸ் ரெய்லர் (86), பெர்குசன் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஷஹீன் ஷா அப்ரிடி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**ஜமான் அரைச்சதம்**

சுலப இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணியின் இமாம் உல் ஹக் (16) 'ரிட்டயர்ட் ஹேர்ட்' ஆனார். அபாரமாக ஆடிய பகார் ஜமான் (88) அரைச்சதம் கடந்தார். இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த பாபர் அஸம் (46) ஓரளவு கைகொடுத்தார். சோயப் மலிக் (10), அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (13) நிலைக்கவில்லை. சௌதி பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய மொஹமட் ஹபீஸ், வெற்றியை உறுதி செய்தார்.

பாகிஸ்தான் அணி 40.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஹபீஸ் (27), ஷடாப் கான் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் பெர்குசன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார், இதனையடுத்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி இன்று டுபாயில் நடைபெறுகிறது. இதில் வெற்றி பெறும் அணி தொடரைக் கைப்பற்றலாம்.

# பொதுஜன பெரமுனவில்தான் நாமல் போட்டி

(கொழும்பு)

இலங்கை பொதுத் தேர்தலை நோக்கி தற்போது சென்றுகொண்டு இருக்கின்றது. இதில் மைத்திரி - மகிந்தவின் புதிய கூட்டணிக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் பலத்த போட்டி நிலவுகின்றது.

அந்த வகையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் மகனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ போட்டியிடவுள்ளார்.

அதற்காக நாமல் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி, பொதுஜன பெரமுனவில் உடனடியாக இணையவுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

"நான் உடனடியாக பொதுஜன பெரமுனவில் இணைய உள்ளேன். எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் ஒரு கூட்டணியை உருவாக்க நாங்கள் முயற்சிப்போம்" எனப் பதிவிட்டுள்ளார். (இ-7)


## காணி விற்பனைக்கு

யாழ்.ஒஸ்மானியா கல்லூரிக்கு முன்பாக கலீபா அப்துல ஹமீட் வீதியில் 3/4 பரப்புக் காணி குழாய் கிணறு, பங்கு கிணறுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 088 1066 (6388)

## வீடு விற்பனைக்கு

கெற்பெலி கிழக்கு மிருசுவில் 8 பரப்பு காணியில் 3 அறை, 1 குளியலறை, கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

(தென்னை மரம், மாமரம், கயூமரம் போன்ற பயன்தரும் மரங்களும் உள்ளன)

தொடர்புகளுக்கு: 077 365 3989 (6392)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா PR உடைய 1988.10.21 இல் சதயநட்சத்திரம், கும்பராசியில் பிறந்த கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்) உயரம் 5' 6" உடைய மணமகனுக்கு நற்குணமுடைய அழகிய படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (மணமகன் கொழும்பில் உள்ளார்)

தொடர்பு:- 077 978 0205 (தந்தை) (6329)


## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திரு. திருஞானசம்பந்தன் பத்மநாதன் (பத்தண்ணன்) (முன்னாள் வர்த்தகர், இயக்குநர், செயலாளர், மத்திய குழு உறுப்பினர்)



மண்ணில்: 18.05.1925
விண்ணில்: 06.09.2005

அமரர் திருமதி. மகேஸ்வரி (தங்கம்மா) பத்மநாதன்



அன்னை மடியில்: 13.09.1941
ஆண்டவன் அடியில்:- 01.04.2015

அமரர் திருமதி. ஜெயகௌரி (கௌரி) ஜெயக்குமாரன்

சிராத்த திதி:- 11.11.2018 (ஐப்பசி மாதம் பூர்வபக்க சதுர்த்தி)



மலர்வு: 29.09.1964
உதிர்வு: 15.11.2015

தாயில் சிறந்ததொரு கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமுமில்லை. மனைவி அமைவதெல்லாம் கடவுள் கொடுத்த வரம். ஏன் தரணியிலுமில்லை என்பதனை உங்கள் செயலால் நாமறிந்தோம். கடல் சூழ்ந்த உலகில் கண்கண்ட தெய்வம் நீங்கள் மூவரும், உடலோடும் உயிரோடும் ஒட்டி உறவாடிய நீங்கள் உபகாரம் கருதாமல் உதவி புரியும் கருமபீடம் நீங்கள், உணர்வுக்கு உணர்வாகவும், உயிருக்குயிராகவும் இருந்த நீங்கள் கடல் அலைகள் ஓய்ந்தாலும், கதை சொல்லும் கடல் பொங்க மறுத்தாலும் கவிதை பாடும் மண் தாங்காவிட்டாலும் ஆனால் மண் சிவக்கும் உங்கள் இலட்சிய பயணம் வெகு தொலைவில் இல்லை. தாய்க்குத் தாயாகவும் தந்தைக்கு தந்தையாகவும் மனைவிக்கு மனைவியாகவும் இருந்த நீங்கள். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் நீங்கள் மூவரும். பிறப்புண்டானால் இறப்புண்டு என்பதனை புரிய வைத்த நீங்கள். அன்று கறையான் புத்தெடுத்து இன்று பாம்பு குடிபுகுந்தது உங்கள் இடத்தில். நீங்கள் போனாலும் போனீர்கள் நிம்மதியும் தொலைந்து போனதே! உங்களுடன் மரணித்து விட்ட உங்களது உறவின் நீங்காத நினைவுகளும் உதிர்ந்து விட்ட உங்கள் அன்பின் உலராத வாசனையும் யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க, காலம் வெல்லும் வென்ற பின்னே வாங்கடா வாங்க. குளத்தில் தண்ணியில்லை கொக்குமில்லை மீனுமில்லை பெட்டியிலே பணமில்லை பெத்த புள்ளை சொந்தமில்லை. கட்டிய மனைவி சொந்தமில்லை. தென்னையைப் பெத்தா இளநீரு பிள்ளையைப் பெத்தா கண்ணீரு பெத்தவன் மனமே பித்தம்மா பிள்ளை மனமே கல்லம்மா. பானையிலே சோறிருந்தா பூனைக்கும் சொந்தமடா சோதனையை பங்கு வச்சா சொந்தமில்லை பந்தமில்லை. நெஞ்சமிருக்கு துணிவாக நேரமிருக்கு தெளிவாக நினைத்தால் முடிப்பேன் சரியாக நீயார் நான் யார் போடா போ. ஆடியிலே காத்தடிச்சா ஐப்பசியில் மழை வரும். தேடி வரும் காலம் வந்தா செல்வமெல்லாம் ஓடிவரும். ஆண்டுகள் பல கோடி ஆனாலும் எமைவிட்டு அகலாது உங்கள் பசுமையான நினைவுகள். வாழ்க்கை வாழ்வதற்கல்ல வாழ்க்கையொரு போராட்டம் என்பதனை புரிய வைத்தது நீங்கள். எல்லாம் வல்ல இறைவனை உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும். அதிகாரம்- 05 (குறள்-50)

• கீரிமலை,
ஆயில் நின்றொல்லை.
• துன்னாலை வடக்கு, கரவெட்டி, புலோலி.

(5871)

உங்கள் பிரிவால் துயருறும்
(பாசமிகு கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், மைத்துனர்மார், உற்றார், உறவினர்கள்).

## இராசி பலன்

**மீனம்** – மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**மேடம்** – அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** – குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பிரயாண பயமுண்டு.

**மிதுனம்** – விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள்.

**கடகம்** – பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பகையொன்று நட்பாகலாம், கடன்களை வசூலிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், உறவினர்களின் வருகையுண்டு.

**மகரம்** – தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, அலைச்சல்கள் சற்றுக் கூடும்.

**சிம்மம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** – சோம்பலை விலக்குவது நல்லது, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** – நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**துலாம்** – நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**கன்னி** – இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறையும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வாகன சுகமுண்டு.

**இராசி பலன்** – கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | சந்திராஷ்டமம் ரோகினி, மிருகசீரிடம் | | ராகு |
| கேது | | | |
| சனி, சந் | குரு, புதன் | சூரி, சுக் | |

**11.11.2018**

ஐப்பசி 25, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 12.44 மணிவரை
மூலம் பின்னிரவு 01.27 மணிவரை
சுபநேரம் 9.06-10.36 மணிவரை
இராகுகாலம் 4.36-6.06 மணிவரை

வளவன்

# காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபன காணியில் மென்பொறியியல் கைத்தொழில்பேட்டைக்கு உத்தேசம்

## ஜனாதிபதி செயலணியின் செயலாளர் சிவஞானசோதி தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் விசேட செயலணியின் நான்காவது கூட்டம் இடம்பெற்றது.

அமைச்சர்கள், வடக்கு,கிழக்கு மாகாண ஆளுநர்கள், வடக்கு,கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதான செயலாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், அரச அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இச்செயலணி வடக்கு,கிழக்கு மார்காணங்களின் அபிவிருத்திக்கான கருத்திட்டங்கள் துரிதப்படுத்துவதற்கான புதிய கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டுஒருங்கிணைக்கவும் கண்காணிப்பதற்குமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் பாடசாலைகளை விடுவிப்பது தொடர்பாகவும் விவசாயப் பண்ணைகள் விடுவிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள கைத்தொழில்கள் தொடர்பில் ஆனையிறவு உப்பளத்தை வலுப்படுத்தல், குறிஞ்சைத் தீவு உப்பளத்தை வலுப்படுத்தல், ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீளச் செயற்படுத்தல், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீளச்செயற்படுத்தல், அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் முதலீட்டாளர்களின்எண்ணிக்கையை அதிகரித்தல், வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை மீளச் செயற்படுத்தல் என்பன தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதியால் பணிக்கப்பட்டது. காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் மென் பொறியியல் கைத்தொழிற் பேட்டையை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டுச் சபையின் உதவியுடன் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒரே கூரையின் கீழ் முதலீடுகளின் அதிகரிப்பைஊக்குவித்தல் போன்ற பல விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுஅது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற நெறிப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு,கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் விசேட செயலணியின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

அத்துடன் பாலியாறு, பறங்கியாறு உள்ளடங்கலாக வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள நீர்வழங்கல் கருத்திட்டத்தை துரிதப்படுத்த புதிய கருத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகள் ஜனாதிபதி செயலணியிடம் சமர்ப்



பிக்கப்பட்டுள்ளது.

உன்னிச்சைக் குளத்தின் நீர்வழங்கல் விரிவுபடுத்தப்பட்டு, அக்கிராம மக்களுக்கு நீர்வழங்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மன்னாரில் மடு பிரதேசத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு அங்கு நீர்வழங்கல் திட்டம் மற்றும் யாத்திரிகர்களுக்கான தங்குமிட வசதிகள் அமைத்தல் தொடர்பான இந்திய கருத்திட்டம் துரிதப்படுத்தல் தொடர்பாகவும் எதிர்வரும் டிசெம்பர் 16 ஆம் திகதி மன்னார் மடு பிரதேச வேலைத்திட்டங்கள் ஜனாதிபதி மூலம் அங்குரார்ப்பணம் செய்வது தொடர்பாகவும்தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக சிவஞானசோதி தெரிவித்தார்.

காணி விடுவிப்பு தொடர்பாக ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் ஆளுநர்கள் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காணி விடுவிப்பு தொடர்பாக கலந்துரையாடல்கள் அறிக்கைகளும் படையினரால் காணிகளை விடுவிப்பதாக இணங்கிய வேலைத்திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் 50,000 வீட்டுத் திட்டத்தின் முதற்கட்டமான 15,000 வீடுகளை மீள்குடியேற்ற அமைச்சினூடாக முன்னெடுப்பது தொடர்பான தீர்மானமும் திக்கம் வடிசாலையை மீள் செயற்படுத்தல் தொடர்பான முடிவுகளும் அவற்றை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதுடன் இது தொடர்பான செயற்பாடுகள் மீள்குடியேற்ற அமைச்சு முன்னெடுப்பதாக மீள்குடியேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஒலுவில்துறைமுகம்தொடர்பான வாய்ப்பு அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அம்பாறையில் சுனாமி தொடர்பில் 500 வீடுகளை பகிர்ந்தளிப்பது தொடர்பான துரித தீர்மானங்கள் எடுக்கும்படி அரச அதிபருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளும் அமைச்சர்களும் சிரேஷ்ட அலுவலர்களும் இச்செயலணியில் பங்கெடுப்பதன் மூலம் அதி உயர்மட்ட தீர்மானம் எடுக்கும் செயலணியாக இது விளங்குவதாக வடக்கு,கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் விசேட செயலணியின் செயலாளர் வே.சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக கவனயீர்ப்பு ஊர்வலம்



(சாவகச்சேரி)

போதைப்பொருள் பாவனைக்கெதிராக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவர்களால் கவனயீர்ப்பு ஊர்வலம் நேற்றுக் காலை நடத்தப்பட்டது.

கல்லூரி முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமையில் பாடசாலையிலிருந்து ஆரம்பமான இவ் ஊர்வலம் சாவகச்சேரி நகரை வலம்வந்து பாடசாலையை அடைந்தது.

அங்கு மாணவர்களும் ஆசிரியர்களும் போதைப் பொருள் பாவனைக்கெதிராக பிரசாரங்களை மேற்கொண்டதுடன் போதைப் பொருள் பாவனையை தவிர்ப்போமெனவும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். (இ-29)

# இளைஞனைத் தாக்கி விட்டு 50 ஆயிரம் ரூபா கொள்ளை

## சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்களால் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலைய உரிமையாளர் கடையில் இல்லாத சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கடையில் வேலைக்கு நின்ற இளைஞனை தலைக்கவசத்தால் தாக்கி விட்டு கடையில் வைக்கப்பட்டிருந்த சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதன்போது தாக்கப்பட்ட இளைஞன் முகத்தில் காயமடைந்துள்ளார். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வர்த்தக நிலைய உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-30)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

கொக்குவிலைச் சேர்ந்தவரும் வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஆ.கோகுலன் அண்மையில் தீவுமுழுவதற்குமான சமாதான நீதவானாக மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பொது நலன்சார்ந்த அமைப்புக்களில் சேவையாற்றியதோடு பல கிராம அபிவிருத்திச் சங்கங்களை நெறிப்படுத்தி செயற்பட வைப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 'நீரிழிவு நடைபயணம்'

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும்14 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணியளவில் 'நீரிழிவு நடைபயணம்' யாழ்.போதனா வைத்தியசாலை முன்றலிலிருந்து ஆரம்பமாகும். (இ

# சங்கீதசபை செயற்குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற வட இலங்கைச் சங்கீத சபை பொதுக் குழுக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

பதவி வழித் தலைவர்:- சு.சுந்தரசிவம் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), உப தலைவர்கள்:-பேராசிரியர் கலாநிதி.ந.வி.மு.நவரத்தினம், சி.சிவசிவா, ந.செல்வச்சந்திரன், செயலாளர்:- பி.என்.சுதர்சன், உப செயலாளர்:-திருமதி.ஈ.புனிதகுமாரி, பொருளாளர்:-தே.தேவானந்த், உப பொருளாளர்:- இ.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகளுக்கான கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

பன்னாட்டு நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையம் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான போட்டி நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

இவை வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் சித்திரப் போட்டி நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன.

கட்டுரைப்போட்டிகள் கனிஷ்ட, இடைநிலை மற்றும் சிரேஷ்ட வயதுப் பிரிவு ரீதியாக இடம்பெறவுள்ளன. கனிஷ்ட பிரிவில் தரம் 1 முதல் தரம் 5 வரையான மாணவர்களும் இடைநிலைப் பிரிவில் தரம் 6 முதல் தரம் 9 வரையான மாணவர்களும் சிரேஷ்ட பிரிவில் தரம் 10 முதல் க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த.உயர்தர மாணவர்களும் பங்குகொள்ள முடியும்.

மூன்று வயதுப் பிரிவினரும் "ஆரோக்கியமான வாழ்வு வாழ்ந்து நீரிழிவை வெற்றி கொள்வோம்" எனும் தலைப்பில் முறையே 250,500, 1000 சொற்களை உடைய ஆக்கங்களைச் சுயமாக படைக்க வேண்டும்.

இதேபோன்று சித்திரப் போட்டி நிகழ்வானது கட்டுரைப் போட்டிநிகழ்வு போன்றே மூன்று வயதுப் பிரிவினருக்குமாக இடம்பெறும்.

"நீரிழிவை வெற்றி கொள்வோம்" என்ற தொனிப்பொருளை பிரதிபலிக்கும் வகையில் "ஏ-3" சித்திரத் தாளில் விரும்பியவர்ணவகைகளைப் பயன்படுத்தி சித்திரங்களை வரைய முடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை மேற்படி போட்டி விதி முறைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஆக்கப் பிரதிகளோடு இணைத்து எதிர்வரும் மார்கழி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக நீரிழிவு சிகிச்சை நிலையம் யாழ். போதனா மருத்துவமனை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோஅனுப்பிவைக்கமுடியும் என யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் எம்.அரவிந்தன் அறிவித்துள்ளார். (இ

# நிர்வாகங்களைப் புதுப்பிக்கத் தவறிய சங்கங்களின் பதிவுகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பதவிக்காலத்தை நிறைவு செய்தும் நிர்வாகங்களைப் புதுப்பிக்கத் தவறிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றின் பதிவுகளை இடைநிறுத்தி வைக்கவுள்ளதாக வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தெரிவித்துள்ளார்.

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாப்பு விதிகளின் பிரகாரம் ஒரு நிர்வாகத்தின் பதவிக்காலம் இரண்டு வருடங்கள் மட்டுமேயாகும். ஆனால் பலசந்தர்ப்பங்களை வழங்கியும் நிர்வாகத்தை புதுப்பிக்கத்தவறிய சங்கங்களின் பதிவுகளே இடைநிறுத்திவைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேலணை தெற்கு, சரவணை கிழக்கு, புங்குடுதீவு, மண்டைதீவு மேற்கு போன்ற பிரதேசங்களிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இதுகுறித்து அக்கறையின்றி உள்ளதாகவும் பொது மக்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து ஆர்வமின்றியுள்ளதனால் கோரமின்றிய கூட்டங்களாக நிர்வாக தெரிவுக்கூட்டங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வாழ்வாதார உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் வாழ்வாதார திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதியால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இதில் சமுர்த்தி முகாமையாளர் ம.கீயூமன், கணக்காளர் எம்.சிவகுமாரன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும்கலந்துகெண்டனர்.(இ-7)

# சி.வி.விக்னேஸ்வரன்-தொல்.திருமாவளவன் யாழில் நேற்று சந்தித்து பேச்சு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் நேற்று அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழில் நடைபெறவுள்ள மலர்க் கண்காட்சி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக திருமாவளவன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

இதனையடுத்து நேற்றுக் காலை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் மரங்கள் நாட்டும் நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் இணைந்து மரங்களை நாட்டி வைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வாசஸ்தலம் சென்று அவரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது திருமாவளவனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்து நினைவுப் பரிசொன்றையும் விக்னேஸ்வரன் வழங்கினார். (இ-9)

# இளம் சந்ததி தடம் மாறிச் செல்ல தமிழ்த் தலைமைகளே காரணம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது இளம் சந்ததியினர் இன்று தடம்மாறிச் சென்றமைக்கு தவறான தமிழ் தலைமைகளே காரணமாக அமைந்துள்ளன. ஆனால்அவர்களை நல்வழிப் படுத்தி அவர்களது எதிர்காலத்தை சிறந்ததாக மாற்றியமைப்பது காலத்தின் அவசியமாக உள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யுத்தம் மற்றும் வன்செயல்கள் காரணம்ாக பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்த மக்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண மக்களுக்கு நல்லிணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தாம் தெரிவிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் என்னிடம் தெரிவித்ததற்கு அமைவாக அவர்களது வாழ்த்துக்களை இந்த வேளையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போதுள்ள இந்த ஆட்சி தொடரும் என்பது மட்டுமல்லாது எமது சேவைகளும் நிச்சயம் தொடரும் என்றும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எமது அமைச்சினூடாக வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியையும் நாம் பொறுப்பேற்றுள்ளோம். அதை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

அந்த வகையில் அரசியல் பலத்தை மக்கள் எமக்கு தருவார்களேயானால் மேலும் பல வேலைத்திட்டங்களை சிறப்பாக எம்மால் முன்னெடுக்க முடியும். தற்போது வழங்கப்படும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை மேலும் விரிவுபடுத்தவும் விரைவுபடுத்தவும் எண்ணியுள்ளோம். அந்த வகையில் விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பிலும் நாம் பரிசீலிக்கவுள்ளோம்.

அதுமாத்திரமன்றி நாம் எமது அமைச்சினூடாக குறைந்த வட்டியுடனான கடன் உதவித் திட்டத்தையும் வழங்கவுள்ளோம். அந்த உதவித் திட்டங்களினூடாக வீடுகள் திருத்தியமைத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தல் தொடர்பாகவும் கரிசனை கொண்டுள்ளோம்.

டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமல்லாது வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள படைத்தரப்பினர் வசமுள்ள அரச மற்றும் தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பிலும் உரிய தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண அளுநர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ள நிலையில் விடுவிக்கப்படாத பகுதியிலுள்ள பாடசாலைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்திற்கு நாம் கொண்டு சென்றுள்ளோம்.

யாழ்குடாநாட்டைப்பொறுத்தவரையில் இன்றுள்ள இளைய சமூகமானது சமூகத்திற்கு ஒவ்வாத விடயங்களில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், இவ்விடயங்களை சீர்படுத்துவது தொடர்பில் நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது. இது காலத்தின் தேவையாகவும் உள்ளது.

இதனை முன்னேற்றகரமாக முன்னெடுத்து எமது சமூகத்தை சிறந்ததொரு சமூகமாக மாற்றியமைப்பதற்கு முழுமையான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்.

அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் ஒத்தாசையும் அவசியமானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட துறைசார்ந்தவர்கள் பயனாளிகளுக்கு வழங்கி வைத்திருந்தனர்.

இதன்போது பிரதியமைச்சர் காதர் மஸ்தான், புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் அன்னலிங்கம், அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் விக்னேஸ்வரன், செயற்பாட்டு பணிப்பாளர் குலேந்திரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். (இ-7)

# இலங்கையில் இனிமேல் ஜனநாயகம் என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியாது-ஹரின்

(கொழும்பு)

இலங்கையை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என இதற்கு முன்னர் அழைத்த போதிலும் இனிமேல் ஜனநாயகம் என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்திற்கு ஓரிரு நாட்கள் மட்டுமே வரும் திருட்டுப் பிரதமரையும் திருட்டு அமைச்சரவையையும் நியமித்து ஜனாதிபதி சட்டவிரோதமாக நேற்று முன்தினம் இரவு நாடாளுமன்றத்தை கலைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு சர்வதேசத்திற்கு மத்தியில் தலைகுனிவை ஏற்படுத்தி, நாட்டை கீழ் நோக்கித் தள்ளியமைக்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்க வேண்டும்.

அத்துடன் எந்தக் காரணம் கொண்டு ஜனநாயகத்திற்கான போராட்டத்தை கை விடாது முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் அந்தப் போராட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்படும் எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். (இ-7)

# மைத்திரி-மகிந்த எடுத்த முடிவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## முஜிபுர் ரஹ்மான் எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் எடுத்துக் கொண்ட முடிவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக ஜனாதிபதி அறிவித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அலரிமாளிகையில் ஐக்கிய தேசிய கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "நாட்டிலுள்ள அரசியல் யாப்புக்கு விரோதமான செயற்பாடுகளை ஜனாதிபதி நடைமுறைப் படுத்தியுள்ளார். எனவே அவரது சட்டவிரோதமான செயற்பாடுகளுக்கு எதிராகத் தொடர்ந்தும் எமது போராட்டத்தை ஆரம்பிப்போம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் எடுத்துக்கொண்ட முடிவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்

## அமரர்.அந்தோனிமுத்து திரேசம்மா



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் டேவிற் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரேசம்மா அவர்கள் 09.11.2018 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற யோசேப்பு றெபேக்கா அவர்களின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற டேவிற் சத்தியநாதன் அல்பிரற் பற்றிக் அவர்களின் சகோதரியும் கொன்சன்ரையின் அடைக்கலம் அவர்களின் மருமகளும் காலஞ்சென்ற விக்டோரியா நீக்கிலஸ் அவர்களின் மைத்துனரும் காலஞ்சென்ற யோண்றேமன் மற்றும் அருட்பணி லோறன்ஸ் (இறை தியான இல்லம்) காலஞ்சென்ற ஜோர்ஜ் மற்றும் போல் லடிஸ்லோஸ் அருட்சகோதரி அமல் பேர்கா (தி.சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அப்பலோனியா, பவானி, சதா சகாயநாயகி, சாந்தி ஆகியோரின் மாமியாரும், அன்ரனி கிறிஸ்ரி, மரியகொறற்ரி மேரி மெற்றில்டா, மேரி லீமா றோஸ், மரிய கிறிஸ்ரீனா, லக்சி, லனுஷ்கா, லனோஜா ஆகியோரின் பேர்த்தியும், மரியபெனடிக்ரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 12.11.2018 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

077 967 2764
077 256 6029

தகவல்: குடும்பத்தினர்.

(6397)

# செல்லப் பிள்ளையை பதவியிலிருந்து நீக்கியதால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் கவலை

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சர்வதேச நாடுகள் குறிப்பிடுவது போன்று எந்தவொரு அரசியல் நெருக்கடியும் நாட்டில் இல்லை. சட்டபூர்வமாக ரணில் விக்கிரமசிங்கவை நீக்கியுள்ளதால் அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகள் கவலையடைந்துள்ளன .

ஏனெனில் அந்த நாடுகளின் செல்லப் பிள்ளையாகவே முன்னாள் பிரதமர் ரணில் இருந்துள்ளதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவிற்கு தொடர்ந்து ஆதரவளித்தால் அந்த கட்சி மூன்றாக உடையும் எனவும் எச்சரித்தார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாடுகள் கூறுவது போன்று இலங்கையில் அரசியல் நெருக்கடி இல்லை.

அமெரிக்காவினதும் ஐரோப்பிய நாடுகளினதும் செல்லப்பிள்ளையான ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியிலிருந்து நீக்கியமையினாலேயே அவர்கள் கவலையடைந்துள்ளனர்.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரிய விடயமல்ல.

சபாநாயகர் மாத்திரமல்ல யார் வேண்டுமானாலும் யாருக்கும் கடிதம் அனுப்பலாம்.

அது குறித்து நாம் கவனத்தில் கொள்ளத்தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேசத்தின் தலைவிதியை மக்கள் தீர்மானிப்பார்கள்

## கோத்தபாய நம்பிக்கை



(கொழும்பு)

மக்கள் சரியான தெரிவை மேற்கொள்வார்கள் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ டுவிட்டரில் பதிவு செய்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தை கலைத்தமை குறித்த செய்தி வெளியாகிக் கொண்டுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேசத்தின் தலைவிதியை தீர்மானிப்பவர்கள் மக்களே என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் இதயசுத்தியுடனான சக்தி எங்கள் நாட்டின் முக்கியமான தருணத்தில் ஸ்திரதன்மை மற்றும் முன்னேற்றகரமான எதிர்காலத்தை வழங்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் சரியான தெரிவை மேற்கொள்வார்கள் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து புதிய அரசாங்கம் கவனம்

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

சிங்கப்பூருடன் செய்து கொண்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனைக்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். எனினும் ரணில் விக்கிரமசிங்க துறைமுக நகர திட்டத்தை சுமார் ஒன்றரை வருடங்கள் நிறுத்தி வைத்திருந்ததைப் போன்று சிங்கப்பூர் ஒப்பந்தத்தை முற்றாக நிறுத்தும் எண்ணம் புதிய அரசாங்கத்திற்கு இல்லை என சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தாய்லாந்து. சீனா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் எதிர்காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் பந்துல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

எந்தவொரு நாட்டுடனும் சர்வதேச ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அதன் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான மொழிபெயர்ப்புக்கள் காணப்படவேண்டும் ஆனால் சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்த பிரதி இவ்விரு மொழிகளிலுமே இதுவரையில் மொழிபெயர்க்கப்படவில்லை என பந்துல மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றம் கலைப்பு

## நிச்சயமாக உச்சநீதிமன்றம் செல்வோம்

## மங்கள சமரவீர உறுதி



(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைக்கு எதிராக நிச்சயமாக நாங்கள் உச்சநீதி மன்றத்துக்குச் செல்வோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அலரிமாளிகையில் நடந்த கூட்டத்துக்குப் பின்னர், 'த ஹிந்து' நாளிதழுக்கு தகவல் வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"நிச்சயம் நாங்கள் நீதிமன்றத்தில் இதனைச் சவாலுக்கு உட்படுத்துவோம்.

இதன் விளைவாக ஜனாதிபதிக்கு எதிராக ஒரு குற்றவியல் பிரேரணையையும் கொண்டு வருவோம். ஏனென்றால் அவரால் நாட்டுக்கு ஆபத்து. நாட்டின் ஜனநாயக மரபுகளுக்கு ஆபத்து உள்ளது.

எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது.

ஆனால், இது அப்பட்டமான அரசியலமைப்பு மீறல். எனவே, இந்தக் கலைப்புக்கு எதிராக சவால் விட வேண்டிய தேவை உள்ளது", என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)




- 1778-மத்திய நியூயோர்க்கில் செனெக்கா இந்தியர்கள் 40 பேரைக் கொன்றனர்.
- 1889-வோஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் 42 ஆவது மாநிலமாகச் இணைக்கப்பட்டது.
- 1919-இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.
- 1933-யாழ்.பொது நூல்நிலையம் அமைக்கப்பட்டது.
- 1966-நாசா ஜெமினி 12 கப்பலை விண்ணுக்கு அனுப்பியது.

**பிறப்புகள்**

- 1885-அனுசுயா சாராபாய், இந்தியாவின் பெண்கள் தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடி (இ. 1972)
- 1888-அபுல் கலாம் ஆசாத், இந்திய அரசியல்வாதி (இ. 1958)
- 1888-ஆச்சார்ய கிருபளானி, இந்திய அரசியல் வாதி (இ. 1982)
- 1899-கி.ஆ.பெ.விசுவநாதம், தமிழறிஞர் (இ. 1994)
- 1908-பி.எஸ்.பாலிகா, இந்திய எழுத்தாளர், பதிப்பாளர் (இ. 1958)
- 1909-எம்பார் எஸ்.விஜயராகவாச்சாரியார், இறைக்கதை சொற்பொழிவாளர் (இ. 1991)
- 1911-டி.பி.ராஜலட்சுமி, தமிழ்த் திரைப்படத்துறையின் முதல் நடிகை, முதல் பெண் இயக்குநர் (இ. 1964)
- 1917-மரகதம் சந்திரசேகர், இந்திய அரசியல்வாதி (இ. 2001)
- 1921-எஸ்.தட்சிணாமூர்த்தி, தென்னிந்திய இசையமைப்பாளர், பின்னணிப் பாடகர், கர்நாடக இசைக் கலைஞர் (இ. 2012)
- 1937-ப.ஆப்டீன், ஈழத்து எழுத்தாளர்
- 1943-அனில் காகோட்கர், இந்திய அணு அறிவியலாளர்
- 1957-மிசேல் டி கிரெட்சர், இலங்கை-அவுஸ்திரேலியப் புதின எழுத்தாளர்
- 1960-பீ.எம்.புன்னியாமீன், இலங்கை எழுத்தாளர், நூலாசிரியர், வெளியீட்டாளர் (இ. 2016)

**இறப்புகள்**

- 1993 -கப்டன் மயூரன், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி (பி. 1970)
- 1995-சுந்தா, தமிழக எழுத்தாளர், கல்கியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் (பி. 1913)

**சிறப்பு நாள்**

- பெண்கள் நாள் (பெல்ஜியம்)
- குழந்தைகள் நாள் (குரோவாசியா)
- நினைவுறுத்தும் நாள் (ஐக்கிய இராச்சியம், பொதுநலவாய நாடுகள்)
- தேசிய கல்வி தினம் (இந்தியா)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 260 | 240 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 140 | 130 | 160 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 160 | 100 | 200 |
| தக்காளி | 350 | 280 | 240 | 150 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 30 | 50 |
| கோவா | 160 | 150 | 160 | 150 | 200 |
| கரட் | 180 | 180 | 200 | 140 | 400 |
| பூசணி | 80 | 50 | 60 | 40 | 80 |
| புடோல் | 160 | 140 | 120 | 140 | 200 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 160 | 130 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 150 | 200 | 200 | 110 | 240 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 400 | 300 | 350 | 280 | 300 |
| லீக்ஸ் | 180 | 140 | 200 | 100 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 60 | 160 |
| கறிமிளகாய் | 250 | 280 | 200 | 240 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 200 | 100 | 200 |
| போஞ்சி | 300 | 280 | 280 | 250 | 320 |
| கத்தரிதம்புள்ள | 300 | 240 | — | 190 | 200 |
| கீரை-1பிடி | 60 | 60 | 50 | 30 | 60 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 60 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | — | 240 |
| வெங்காயப்பூ | 350 | — | — | 120 | — |
| முள்ளங்கி | 80 | 120 | — | 30 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 45 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 60 | 120 | 160 |

## பாராளுமன்றம் கலைப்பு; ஜனாதிபதி சர்வாதிகாரம்

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்குமாறு ஜே.வி.பி.வலியுறுத்த இதுவே காரணம்

## விஜித ஹேரத் விளக்கம்



(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள திடீர் தீர்மானம் அரசியலமைப்புக்கு எதிரான ஒன்று என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் குறித்து அக் கட்சியின் பிரசாரச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்துள்ள இந்த நடவடிக்கை முழுமையாக அரசியல் யாப்பை மீறும் செயலாகும். முன்னர் பிரதமர் ஒருவரை நியமித்தமையும் ஜனாதிபதியின் சட்டவிரோதமான நடவடிக்கையாகும்.

நாட்டின் முதற்பிரஜை நாட்டின் அடிப்படையாகவுள்ள சட்டத்தை மீறுகின்றார். இலங்கை வரலாற்றில் இதுபோன்றதொரு சம்பவம் இடம்பெற்றுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்யுமாறு மக்கள் விடுதலை முன்னணி அன்று முதல் கூறி வருவதற்கான காரணம் இதுவாகும்.

பாராளுமன்றத்தைக் கலைத்தமை ஒரு சட்டவிரோதமான நடவடிக்கை. இதனை எந்தவகையிலும் சட்ட ரீதியானது என ஏற்க முடியாது. இதற்கு எதிராக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கவுள்ளோம்.

நாம் மீண்டும் சொல்கின்றோம். ஜனாதிபதி செய்த நடவடிக்கை முற்றிலும் தவறானது. இந்த நாட்டின் ஜனநாயகத்தை மாத்திரமல்ல, அரசியல் யாப்பையும் மீறும் செயலாகவே உள்ளது. இந்த சர்வாதிகார நடவடிக்கையை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனவும் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சட்ட அதிகாரி பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சட்ட அதிகாரி (நிறைவேற்று அதிகார சேவையில் III ஆம் தரம்) பதவிக்காக திறந்த முறையில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பின்வரும் தகைமைகளையுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் சட்டம் தொடர்பிலான பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் வழங்கி இருத்தல் மற்றும் இலங்கை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் வழங்கியதன் பின்னர் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத குறித்த துறையில் தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். மற்றும் விண்ணப்பதாரி விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித்தினத்தன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானிப் பத்திரிகையின் படி விண்ணப்பப்பத்திரங்களை 2018.11.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு, செயலாளர், இல.72, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07" என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு அறிவித்துள்ளது. (இ)

# அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தவே இரவோடிரவாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது

## அஜித் பெரேரா குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றம் நேற்று முன்தினம் இரவு கலைக்கப்பட்டமை தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ளவே இரவோடிரவாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதென ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இரவு வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத்தைக் கலைப்பது என்றால் எதற்காக நாடாளுமன்றம் கலைக்க சில நிமிடங்களுக்கு முன் அவசர அவசரமாக அமைச்சுப் பொறுப்புக்களை வழங்க வேண்டும்?

அரச வளங்களை மோசடியாக பயன்படுத்திக்கொள்ளவே அமைச்சுப் பொறுப்புக்களை வழங்குகின்றனர். ஜனநாயகத்திற்கு எதிரான வகையில், மக்களின் பணத்தைத் தேர்தலுக்குப் பயன்படுத்தவே அவர்கள் இதனைச் செய்தனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பன்னாட்டுக் கருத்தரங்கம் இன்று


(யாழ்ப்பாணம்)

"தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்" என்னும் பொருண்மையிலான "பன்னாட்டுக் கருத்தரங்கம்" இன்று 11 ஆம் திகதி காலை 9 மணியளவில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கொழு ம்புத் தமிழ்ச் சங்கத் தலை வர் ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெறும்.

இதில் பொருண்மையுரையை கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் க.முருகேசனும் ஆய்வுக் கோவை வெளியீட்டு சிறப்புரைகளை மேனாள் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ், மலாயப் பல்கலைக் கழக சு.கு மரன், மலேசிய கொழும்பு தமிழ்ச்சங்கவின் கலைக் குழு செயலாளர் தி.ஞானசேக ரன் ஆகியோர் ஆற்றுவர்.(இ)

# நிலையான அரசு அமைக்க பொதுமக்களுக்கு வாய்ப்பு

## மகிந்த தெரிவிப்பு




(கொழும்பு)


நிலையான அரசாங்கத்தை அமைக்க பொது மக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்திற்கு பொதுத்தேர்தல் மூலம் நிலையான அரசாங்கத்தை உருவாக்குவதற்கும் சிறந்த ஆட்சியை நிலை நாட்டுவதற்கும் பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.(இ-7)

# இலங்கையின் அரசியலமைப்பை கழிவறை பேப்பராக்கிய மைத்திரி

## ஹர்ச டி சில்வா விசனம்






(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போலி பிரதமருடன் சேர்ந்து இலங்கையின் அரசியலமைப்பை கழிவறைப் பேப்பருக்கு சமமானதாக்கிவிட்டார் என ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார் என்ற செய்தி வெளியாகியுள்ள நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி அவர்களே எங்கள் நாட்டின் உத்தியோகபூர்வ பெயரிலிருந்து ஜனநாயகம் என்பதை நீக்குவதற்கான இன்னொரு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுங்கள் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)





(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கும் புதிய பிரதமரும் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் எதிர்வரும் வரவுசெலவுத்திட்டத்தில் அரச சேவை சம்பள மீளமைப்பு, அரச சேவையில் நிறுத்தப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை மீண்டும் வழங்குதல், நிறுத்தப்பட்ட வரிச்சலுகை பாத்திரங்களை மீள வழங்குதல் ஆகிய கோரிக்கைகள் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் கோரப்பட்டது. இதேவேளை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் சுகாதார அமைச்சர் சமல் ராஜபக்ஷவுடன் சந்திப்பை மேற்கொண்டனர்.



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ந.ரவிராஜின் 12 ஆவது நினைவு தினம் நேற்றுக்காலை சாவகச்சேரியில் தென்மராட்சி பிரதேச செயலக முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் சிலை முன்றலில் நடைபெற்றது. சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சாவகச்சேரி நகரசபை, பிரதேசசபை தவிசா ளர்கள், உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:-விஜயவாசன், சுபேசன்)

# சட்டவிரோதமான முறையில் நாடாளுமன்றம் கலைப்பு

## மைத்திரி மீது ராஜித காட்டம்



(கொழும்பு)

**சட்டவிரோதமான அடிப்படையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

அரசியல் அமைப்பில் இல்லாத ஓர் அதிகாரத்தைப் பயன்படுத்தியே ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைத்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றம் கலைக் கப்பட்டது குறித்து அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் சட்ட விரோத பிரதமரின் முதல் சட்டவிரோத முயற்சி தோல்வியடைந்துள்ளது. 113 உறுப்பினர்களை காண்பிக்க முடியும் என வாய்சவடால் விட்ட போதிலும் அதனை செய்து காண்பிக்க முடியவில்லை, அதனால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

முதல் போட்டியில் அவர்கள் தோல்வியடைந்துள்ளனர். தற்போதைய அரசியல் அமைப்பின் அடிப்படையில் நாடாளுமன்றை கலைப்பதற்கு எவ்வித அதிகாரமும் ஜனாதிபதிக்கு கிடையாது.

நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்துவதில்லை என கூறியே அப்போது இந்த ஜனாதிபதி, சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறியிருந்தார். தன்னால் நியமிக்கப்பட்டவர்களை ஜனாதிபதி இன்று பழிவாங்குகின்றார், தன்னை தோற்கடிக்க நினைத்தவர்களுடன் இணைந்து கொண்டுள்ளார்.

இவ்வாறான ஓர் ஜனாதிபதியை உலக சரித்திரம் பார்த்திருக்காது. சர்வாதிகார ஜனாதிபதிகள் கூட எதிரிகளுடன் இணைந்து நண்பர்களை தாக்கியதில்லை. தேர்தலை எதிர்நோக்க தயார், தேர்தலை நிறுத்தவும் நாம் தயார்.

விரிவான ஜனநாயக கூட்டணி ஒன்றை உருவாக்கி இந்த தரப்புக்களை தோற்கடிப்போம். இந்த அரசாங்கத்தை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளவில்லை. இது 21 ஆம் நூற்றாண்டு. சர்வதேசத்தின் ஒத்துழைப்பு இன்றி ஆட்சி நடத்த முடியாது.

தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை, நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாயின் அது நாடாளுமன்றின் ஊடாகவே செய்யப்பட வேண்டும். வேறு வழியில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாயின் நாடாளுமன்றின் ஊடாகவே அதனையும் செய்ய வேண்டும்.

மாதுலுவாவே சோபித தேரரின் பூதவுடல் மீது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சத்தியம் செய்திருக்கின்றார்.

எனினும் இல்லாத அதிகாரங்களையும் மைத்திரி பயன்படுத்துகின்றார். மகிந்த ராஜபக்ஷ கூட இல்லாத அதிகாரங்களை பயன்படுத்தியது கிடையாது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

# நாமலை தொடர்ந்து மேலும் மூவர் தாமரை மொட்டுக்குத் தாவினர்



(கொழும்பு)

நாமல் ராஜபக்ஷவின் அறிவிப்பின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி பொதுஜன பெரமுனவுடன் இணையப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மாத்தறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஞ்சனா விஜேசேகர, மேலும் அநுராதபுர நாடாளுமன்ற உறுப்பினர் ஷேஹான் சேமசிங்க மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக டினுஷனும் இணைந்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். (இ-7)

# மக்களுக்கு அதிகாரத்தை வழங்குவதன் மூலம் உண்மையான ஜனநாயகம் வெற்றி பெறட்டும்




## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

"இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவதன் மூலம் உண்மையான ஜனநாயகம் வெற்றி பெறட்டும்" என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பாராளுமன்றை கலைத்து பொதுத் தேர்தலை அறிவித்ததன் பின்னர் நாமல் ராஜபக்ஷ தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

"பாராளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்ததன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சரியான செயலைச் செய்துள்ளார்.

இப்போது மக்கள் தெரிவிக்கட்டும். அதைத்தான் எல்லோரும் விரும்பு கிறார்கள்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# வருடாந்த பரிசளிப்பு விழா

(கரணவாய்)

அம்பன் அ. மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் வீ. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரி பா.அரவிந்தன்.

சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச. திரவியராசா ஆகியோர் கலந்து கொள்வார். (இ-60)



வடமாகாண மரநடுகை மாதமான கார்த்திகை மாதத்தை முன்னிட்டு அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் மரநடுகை நிகழ்வானது இடம்பெற்றது. நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் பாடசாலையின் அதிபர் நா.இராதாகிருஷ்ணன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையைச்சூழவும் பயன்தரு மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. அதிபர் நா.இராதாகிருஷ்ணன் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## அவன்கார்ட் ஆயுதக்கப்பல் விவகாரம்

# நிஸங்க சேனாதிபதிக்கு எதிரான வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு!



(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதி மற்றும் மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சசி மஹேந்திரன் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணையின் போது அரச தரப்பு சட்டத்தரணியின் நெறிப்படுத்தலின் கீழ் வங்கி அதிகாரி ஒருவரிடம் சாட்சிப் பதிவு மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், மேலதிக சாட்சி விசாரணைகள் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில், மிதக்கும் ஆயுதக் களஞ்சியமொன்றை நடத்திச் செல்வதற்கு தேவையான பணிகளை மேற்கொள்வதற்கு ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோவுக்கு 355 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வழங்கியதாக அவன்கார்ட் நிறுவன தலைவர் நிஸங்க சேனாதிபதி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பணம் வழங்கியது மற்றும் அரச உத்தியோகத்தர் என்ற வகையில் பணம் பெற்றுக் கொண்டமை ஆகியன இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் என்று தெரிவித்து இலஞ்சம் மற்றும் ஊழல் குற்ற விசாரணை ஆணைக்குழுவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## யாழ்.பல்கலை.மாணவர் ஒன்றியத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர் ஒன்றியத் தெரிவு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முன்னர் இருந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் காலம் நிறைவடைந்த நிலையிலேயே புதிய ஒன்றியம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தைச் சேர்ந்த ஆர். ரமேஸ் தலைவராகவும், கலைப் பீடத்தைச் சேர்ந்த எஸ்.கபில்ராஜ் செயலாளராகவும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கே.கௌரிதரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக ஆர். கிரிசாந்தன், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவராக ஏ.சங்கீர்த்தனன், முகாமைத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவராக எ.சுதர்சன் ஆகியோரும் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-9)

# மைத்திரி செய்திருப்பது ஜனநாயகப் படுகொலை

## மு.க.ஸ்டாலின் சீற்றம்



(கொழும்பு)

"மோசமான அரசியல் சட்ட நெருக்கடியை உருவாக்கி இலங்கைத் தமிழர்களின் நலனுக்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றை கலைத்திருப்பது ஜனநாயகப் படுகொலை" என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பாராளுமன்றை கலைத்து பொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுத்ததையடுத்து பலரும் தங்களது கருத்துக்ளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

மேலும் "இனியும் மோடி அரசு மௌனம் காக்காமல் தமிழர்கள் நலன் காக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# அரசியல் நெருக்கடிக்கு கருஜெயசூரியவே காரணம்

## தயாசிறி ஜெயசேகர குற்றச்சாட்டு



(கொழும்பு)

"நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவின் பக்கச்சார்பான செயற்பாடுகளே காரணம். ஆகவே அவரே சகலவற்றிற்கும் பொறுப்புக்கூற வேண்டும்" என அமைச்சர் தயாசிறி ஜெயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற பிரதமர் மாற்றம் அரசியலமைப்புக்கு உட்பட்டது. ஆனால், அது இப்போது பாரிய பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது.

இதற்கான அனைத்து பொறுப்புகளையும் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் ஐ.தே.க விற்கு மட்டும் சபாநாயகர் அல்லர். பாரபட்சமின்றி செயற்பட வேண்டுமென்றே அவரை சபாநாயகராக நியமித்தோம்.

அந்தவகையில், அவர் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அவர் அதனை செய்யவில்லை.

எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றை கூட்டும்போது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் ஜனாதிபதியின் உரை இடம்பெற தீர்மானிக்கப்பட்டது.

அதுவே முறையும் கூட. எனினும், அன்றைய தினம் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பை நடத்தும் வகையில் நாடாளுமன்ற நிலையியல் கட்டளையில் மாற்றம் கொண்டுவர சபாநாயகர் முயற்சித்தார். இந்நடவடிக்கையானது, சர்வதேச நிகழ்ச்சி நிரலின் கீழ் சபாநாயகர் செயற்படுவதை காட்டுகின்றது. இதுதான் உண்மையான ஜனநாயக மீறல். ஆட்சியில் இருந்தபோதும் இவ்வாறே செயற்பட்டனர். ஆகவே, தேர்தலின் மூலம் மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும்" என தயாசிறி மேலும் தெரிவித்தார். (இ-7)

## "தவிக்கும் தமிழர்களுக்கு பேரழிவு"

# ஜனாதிபதி மைத்திரியின் செயற்பாடு சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும்

## பழ.நெடுமாறன் கண்டனம்



(சென்னை)

இலங்கையில்ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கு உலக நாடுகள் தலையிட்டு ஜனநாயகத்தை மீட்கவும் ஈழத் தமிழர்களை காக்கவும் முன்வரவேண்டும் என தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த நாட்டின் நாடாளுமன்றத்தை கலைத்து ஜனநாயகப் படுகொலை செய்திருக்கிறார்.

தன்னால் நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு பெரும்பான்மை கிடைக்காது என்பதை உணர்ந்ததாலேயே இவ்வாறு செய்திருப்பது சர்வாதிகாரத்திற்கே வழிவகுக்கும்.

ஏற்கனவே அழிவுக்குள்ளாகி தவிக்கும் ஈழத் தமிழர்கள் மேலும் பேரழிவுக்கு உள்ளாவார்கள் என்பதில் ஐயமில்லை.

ராஜீவ் காந்தியின் காலத்திலிருந்து மோடி காலம் வரை இலங்கையைப் பொறுத்தவரையில் இந்திய அரசின் கொள்கை என்பது அப்பட்டமாக தோல்வியடைந்து விட்டது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உலக நாடுகள் இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு ஜனநாயகத்தை மீட்கவும், ஈழத் தமிழர்களை காக்கவும் முன்வர வேண்டும் எனக் வேண்டிக்கொள்கிறேன்" என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)






இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பேராளர் மாநாடு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார். (படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

# கிளிநொச்சியில் மூன்று போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலைமையை உருவாக்குவோம்

## மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(பரந்தன்)

தென்னிலங்கையில் மிஞ்சிய நீர் கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டு கிளிநொச்சியில் மூன்று போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலைமையை உருவாக்குவோம் என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துசமய விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் புனர்வாழ்வு அதிகார சபையினால் யுத்தத்தினால் இழப்புகளை சந்தித்தோருக்கான நட்டஈடு வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகாவலி வேலைத்திட்டம் பற்றி கடந்த காலத்தில் பேசப்பட்டது. அதில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. குடியேற்றம் தொடர்பில் கூறப்பட்டது. எனவே அதில் சிலவற்றில் உண்மைகளும் இருக்கலாம். ஆனால் பெரும்பாலானவை அரசியல் நோக்கங்களுக்காக பரப்பப்பட்ட கருத்துக்களாகும்.

கடந்த மூன்றரை வருடங்களாக முன்னைய அரசு எமது மக்களுக்கான பணிகள் குறித்து ஆற்றலுடனும் அக்கறையுடனும் செய்யவில்லை என மக்களால் குறை கூறப்பட்டது. அக்காலப் பகுதியில் இந்த வீட்டுத்திட்டம் தொடர்பில் எந்த வீடு எந்த அமைச்சுக்குக் கொடுப்பது என்பது தொடர்பில் கூட காலம் கடத்தப்பட்டது.



ஆனாலும் இந்த மாதம் இறுதியில் வீடுகளைக் கட்டுவதற்கு எமது அமைச்சினூடாக இயலுமான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்.

இருந்தபோதிலும் முறைகேடுகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. எமது அமைச் சினூடாக குறைந்தளவிலான வீடுகளுக்கு மட்டுமே அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

தமிழ்த் தலைமைகள் சரியா இருந்திருந்தால் தமிழ் மக்கள் இவ்வாறு அவலத்தில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. எனவே தமிழ் மக்களின் இன்றைய அவலத்திற்கு தமிழ்த் தலைமைகளே காரணம் எனக் குறிப்பிட்டார். புதிய குடியேற்றங்கள் இல்லாமல் மகாவலி திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

எமது வசம் உள்ள வளங்களை ஏனையவர்களிற்கும் பகிர்ந்தளிக்க நாம் முன்வர வேண்டும். இங்கு உள்ளவர்களை பட்டினி போட்டோ நீர் இல்லாமலோ நாம் அடுத்த மாவட்டத்திற்கு எந்த வளத்தையும் கொண்டு செல்ல போவதில்லை. வடக்கு மக்களின் வறுமைநிலையை போக்குவதற்கு பல்வேறு திட்டங்கள் உள்ளதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார். (2-315)




# இராணுவத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததானமுகாம்

(மன்னார்)

இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மன்னார் தள்ளாடி இராணுவ 54 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவில் நேற்று முன்தினம் முற்பகல் 10.15 மணியளவில் தள்ளாடி இராணுவ 54 ஆவது படைப்பிரிவு அதிகாரியின் தலைமையில் இரத்ததான முகாம் இடம் பெற்றது.

இதன்போது தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள, இராணுவ உயர் அதிகாரிகள் இரத்ததானம் வழங்கினர்.

இலங்கை இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மன்னார் தள்ளாடி இராணுவ 54 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக





பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக டெங்கு சிரமதானப்பணிகள், மரம் நாட்டுதல் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரத்ததான முகாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# முல்லையில் எட்டு குளங்கள் உடைப்பெடுப்பு

## அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட அடைமழை காரணமாக 247 குடும்பங்களைச் சேர்ந்த 759 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது மழை இல்லாததன் காரணத்தால் மக்கள் வாழ்இடங்களுக்கு சென்றுள்ளார்கள். வெலிஓயா பிரதேசத்தில் இடைத்தங்கல் முகாமில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் தங்கியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட மழை மற்றும் காட்டுவெள்ளம் காரணமாக எட்டு குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. இதற்கமைவாக பெரியகுளம் (மாந்தை கிழக்கு), கோடாலிக்கல்லுக்குளம் (ஒட்டுசுட்டான்), சின்ன சாளம்பன் குளம் (ஒட்டுசுட்டான்), கிழவன் குளம் (ஒட்டுசுட்டான்), புலுமைசிலந்திகுளம், ஒலுமடுக்குளம், கரிப்பட்டமுறிப்பு குளம், நித்தகை குளம் ஆகியன உடைப்பெடுத்துள்ளன.

இதேவேளை அபாயத்தைச் எதிர்கொண்டு காப்பாற்றப்பட்ட குளங்களாக எட்டு குளங்கள் இருக்கின்றன. பெரும்பாலான குளங்கள் மாந்தை கிழக்கு பிரதேசத்தினை சேர்ந்த குளங்களாக காணப்படுகின்றன. அவையாவன: பனிச்சமுறிப்பு குளம் (ஒட்டுசுட்டான்), வன்னிவிளான் குளம் (மாந்தை கிழக்கு), கனக்கனார் குளம்,தேவிக்குளம் (மாந்தை கிழக்கு), அம்பலவன்பற்று குளம் (ஒட்டுசுட்டான்), பண்டிக்கட்டுக்குளம் (மாந்தை கிழக்கு), அகலகல்லு போட்ட குளம் (ஒட்டுசுட்டான்), சின்ன இந்திமடுகுளம் (ஒட்டுசுட்டான்) போன்ற குளங்கள் அபாயத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் அனர்த்தம் ஏற்படக் கூடிய சூழல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மக்கள் விழிப்பாக இருந்து கிராம அலுவலகர்களுக்கு தெரியப்படுத்துவதுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கும் தெரியப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்துள்ளார். (2-315)

# கிளிநொச்சி மாணவர்களுக்கு உதவிகள் நாவற்குழி இளைஞர்கள் வழங்கி வைத்தனர்





(கிளிநொச்சி)

நாவற்குழி வெண்ணையன்கட்டு வீரபத்திரர் ஆலய இந்து இளைஞர் மன்றம் மற்றும் நாவற்குழி இளைஞர்கள் இணைந்து போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பொன்னகர் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கரவண்டி என்பன கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பொன்னகர் கிராம அலுவலர் அலுவலகத்தில் நாவற்குழி வெண்ணையன்கட்டு வீரபத்திரர் ஆலய இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் தலைமையில் இடம்பெற்றது.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், வறுமைக்கோட்டிற்குட்பட்ட, நெடுந்தூரம் நடந்தே கல்வி கற்கச்செல்லும் திறமையான வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவனுக்கான துவிச்சக்கர வண்டியுமே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணையை நாவற்குழியைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் வல்லிபுரம் நிதியினால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்தித்தார்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை முன்னாள் மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் நேரில் சென்று பார்வையிட்டதுடன் மக்களின் அவசர தேவைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

கிளிநொச்சியில் அண்மைய நாட்களாகப் பெய்த பலத்த மழையினால் குளங்களின் நீர்மட்டம் கணிசமான அளவில் உயர்ந்ததோடு தாழ்நில கிராமங்கள் பலவும் நீரில் மூழ்கியதை அடுத்து மக்களும் தாங்கள் வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

சிவபுரம், பன்னகண்டி, முறிகண்டி, அனந்தபுரம் கிழக்கு ஆகிய பகுதிகள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அனந்தபுரம் கிழக்கு பகுதியில் 55 வரையான குடும்பங்கள் பாதிக்கப்ப்ட்டுள்ள நிலையில் மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் மக்களின் நிலைமைகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டார்.

சீரான போக்குவரத்து பாதை வசதிகள், சீரான பாலங்கள்ஆகியவை இன்மையே இவ்வாறான இடர்களுக்கு காரணம் என மக்கள் மாகாணசபை உறுப்பினர் தவநாதனிடம் சுட்டிக்காட்டினர். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான கோரிக்கைகள் தொடர்பில்'முன்னுரிமை அடிப்படையிலான வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப்படுமெனவும் மாகாண சபை உறுப்பினர் மக்களிடம் தெரிவித்தார். (2-315)

### மணல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏலவிற்பனை எதிர்வரும் 27.11.2018 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (2)

காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னாள் சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

– கந்தபுராணம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சூரர்கள் முகம் காட்டினர் இனி சங்காரம் செய் முருகா!

கந்தசஷ்டி விரதம் மிகவும் புனிதமானதும் கடுமையானதுமாகும். ஆறு மிளகும் ஒரு குடுவைத் தண்ணீருடனும் ஆறு நாட்கள் உபவாசம் இருந்து அனுஷ்டிப்பது கந்தசஷ்டி விரதமாகும்.

ஆறாம் நாள் சூரன் போர் நடக்கும். சூரசங்காரத்துக்கு முன்னதாக, முருகப்பெருமான் தன் திருப்பெருவடிவத்தை சூரனுக்குக் காட்டி நிற்பார்.

அப்பெரு வடிவம் கண்ட சூரன் முருகனைக் கைதொழுது இறைஞ்சுவான். திருப்பெருவடிவம் கண்டு தன்னிலை உணர்ந்தானாயினும் மீண்டும் அவன் முருகனை எதிர்க்கத் தலைப்பட்டான்.

அதுமட்டுமன்றி சூரன்போர் நடக்கும்போது உருமாற்றம் செய்து 'முருகனுடன் போர் புரிந்தான்.

இவ்வாறு சூரன் பல முகங்களைக் காட்டியும் மாமரத்தில் மறைந்து நின்றும் வித்தை செய்து போர் புரிந்த போதிலும் தமிழ்க் கடவுளாகிய கந்தப் பெருமான் அவனைச் சங்காரம் செய்கின்றான்.

வைதாரையும் வாழ வைக்கும் முருகன் தமிழ்க் கடவுள் என்பதால் அவனிடம் இயல்பாகவே இரக்க குணம் உண்டு.

அதனால் சூரனை கொன்றொழிக்காமல், அவனின் மும்மலம் அறுத்து சேவலாகவும் மயிலாகவும் ஆட்கொண்டான். இஃது சூரசங்காரம் பற்றிய சிறுகுறிப்பு.

இனி எங்கள் அரசியல் சூரர்கள் பற்றிப் பார்க்கலாம்.

தென்பகுதி ஆட்சியில் சூரர்கள் தங்கள் முகங்களைக் காட்டத் தலைப்பட்டுள்ளனர். இவ்வாறு மாறிமாறி முகம் காட்டுகின்ற தென்பகுதி அரசியல் சூரர்கள் பற்றித் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

அதுமட்டுமல்ல எங்களிடம் இருந்து பாராளுமன்றம் சென்ற தமிழ்ச் சூரர்கள் பற்றியும் நம் மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியதும் சிங்க முகத்தைக் காட்டினர். பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து யானை முகம் (கஜமுகம்) காட்டினர்.

இப்போது பாராளுமன்றம் கலைபட்டு விட்டது. அப்பாவிகள்போல சாதுவான மனித முகத்தோடு தேர்தலில் வாக்குக் கேட்க வரப் போகின்றனர்.

இதற்கிடையில் நீதிமன்றத்துக்குச் சென்று தப்பித்துக் கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

பரவாயில்லை சிங்கமுகம், கஜமுகம் காட்டிய எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனித முகத்தோடு தமிழர் தாயகம் நோக்கி வருவர். சூரர்கள் தலை மாற்றுவர் என்பதை சூரசங்காரத்தில் கற்றுக் கொண்ட தமிழ் மக்கள் சூரர்கள் தலை மாற்றுவதை இனி ஒருபோதும் நம்பமாட்டார்கள்.

எங்ஙனம் மனித முகத்துடன் சூரனை முருகன் சங்காரம் செய்தாரோ அதேபோல தமிழ் மக்களும் சங்காரம் செய்யத் தலைப்பட்டு விட்டனர்.

இங்கு கந்தசஷ்டி விரத காலத்தில் தமிழ் மக்கள் செய்கின்ற சூரசங்காரம் என்பது பாராளுமன்றப் பதவியை வழங்காமல், வாக்களிக்காமல் அவர்களின் ஆணவத்தை அடக்குவதாகும்.

# தமிழ் மக்களின் நம்பிக்கையை ஜனாதிபதி மைத்திரி சிதைத்துள்ளார்

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(சாவகச்சேரி)

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற மைத்திரிபால சிறிசேன தமிழரின் நம்பிக்கையைச் சிதைத்துள்ளார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் இடம்பெற்ற ரவிராஜின் நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் அனுபவித்த கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று 2015இல் நினைத்து பொருத்தமான வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று பல அமைப்புக்கள் சேர்ந்து மைத்திரிபாலவை நிறுத்தினோம். அப்போது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரி கூறினார்,

"நான் ஜனாதிபதி வேட்பாளராக வருவது மகிந்த தரப்பினருக்கு தெரிந்திருந்தால் நான் இப்போது மண்ணுக்குள்ளே புதைக்கப்பட்டவனாக இருந்திருப்பேன்" என்று கூறினார்.

கடந்த 8ஆம் மாதம் ஜனாதிபதி மயிலிட்டிக்கு வந்தபோது நான் அவரிடம் கூறினேன் நீங்கள் அனுபவித்த துன்பத்தைவிட ஆயிரம் மடங்கு துன்பத்தை எமது தமிழ் மக்கள் அனுபவித்திருப்பார்கள் என்று.

அதை நீங்கள் ஒருபோதும் மறக்கக் கூடாது என்றும் கூறியிருந்தேன். ஆனால் இன்று 19ஆவது திருத்தச் சட்டத்திற்கு முரணாக நடந்துள்ளார்.

அரசியல் அமைப்பின் 19ஆவது திருத்தத்தில் இந்த ஜனாதிபதி உட்பட சகலரும் நாங்கள் நிறைவேற்று அதிகாரத்தை ஏற்க மாட்டோம் என உறுதி பூண்டே ஜனாதிபதியாக பதவியேற்றார்கள். ஜனாதிபதியாக வந்த பின்னர் எந்த ஜனாதிபதியும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

மிக மோசமாக, பிழையாக, அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகத்திற்கு விரோதமான செயலை நடைமுறைப்படுத்தியிருக்கிறார். எவரால் தனது உயிருக்கு ஆபத்து என்று சொன்னாரோ அவரையே பிரதமராக்கி மிகப் பாரிய ஜனநாயக விரோத செயலில் ஈடுபட்டுள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டத்தில் 4ஆவது பிரிவின் அடிப்படையில் பிரதமரை நீக்க எந்த அதிகாரமும் கிடையாது. மரணித்தால்/பதவி விலகினால்/நம்பிக்கை இல்லா பிரேரணை தவிர வேறு வழியில் பிரதமரை நீக்கும் அதிகாரம் இல்லை. அன்று மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரை தற்போது பிரதமராக நியமித்துள்ளார். யாருக்கு பயந்தாரோ, யாருடைய கொள்கை ஊழல் நிறைந்ததோ அவரையே மீண்டும் ஜனாதிபதி உருவாக்கியுள்ளார். பிரதமர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் ஏனைய நாடுகள் வாழ்தது்த் தெரிவிப்பர்.

ஆனால் இந்த நாட்டில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய பின்னர் எந்தவொரு நாடும் ஆட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை.

யாரும் மகிழ்வாக இல்லை. மேலும் வரியை அதிகரிப்போம், பொருளாதாரத் தடை விதிப்போம் என்று எச்சரிக்கின்றனர். பாராளுமன்றத்தைக் கூட்டி தீர்மானம் எடுக்குமாறு உத்தரவு போடுகிறார்கள். அந்த நிலையில் அதிக நாட்கள் பாராளுமன்றத்தை ஒத்தி வைத்து ஏனைய கட்சியினரை விலைக்கு வாங்குகின்றனர். எமது கட்சியில் இருந்தும் ஒருவரை விலைக்கு வாங்கியுள்ளனர். இது எமது கோபத்தை மேலும் அதிகரித்துள்ளது என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-30)

# வீட்டை உடைத்து பணம் நகைகள் கொள்ளை

## கனகராயன்குளத்தில் சம்பவம்

முன்னாள் போராளி ஒருவரின் வீட்டை உடைத்து பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டது என்று கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, கனகராயன்குளம் பெரியகுளம் பகுதியில் உள்ள தனது வீட்டை உடைத்து ஒரு இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் ஏழு பவுண் நகை, தண்ணீர் இறைக்கும் இயந்திரம், வீட்டு ஆவணங்கள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன" என்று கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில முன்னாள் போராளியான பேரம்பலம் வசந்தகுமார் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

தனக்குச் சொந்தமான காணியை அபகரிக்கும் நோக்கத்துடன் ஆக்கிரமித்திருக்கும் ஒருவருக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கிற்கு முன்னிலையாக சென்றிருந்த வேளை, திருடர்கள் வீட்டை உடைத்து திருடியுள்ளனர் என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இக்கொள்ளைச்சம்பவம் தொடர்பாக வவுனியா தடயவியல் பொலிஸார் மற்றும் கனகராயன்குளம் பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

ஆட்சி மாற வேண்டுமென கோரி

# ஐக்கிய தேசியக் கட்சியினர் தேங்காய் உடைத்து வழிபாடு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் கூட்டாட்சி கவிழ்க்கப்பட்டு, ஆட்சி மாற வேண்டுமென கோரி தேங்காய் உடைத்து பூஜை வழிபாடுகளில் ஐக்கிய தேசிய கட்சி ஈடுபட்டுள்ளது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை அறிவித்துள்ள நிலையில், ஐ.தே.கவினர் முன்னேஸ்வரம் சிவன் கோயில், பிள்ளையார் கோயில் மற்றும் காளி கோயில்களில் ஆட்சி மாற்றத்தை வேண்டி தேங்காய் உடைத்து நேற்று (சனிக்கிழமை) வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பூஜை வழிபாடுகளில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள உடபட கட்சிதொண்டர்கள்என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை"

*–கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்)*

## பணத்தைப் பாதுகாக்க...

- வரவிற்கு தகுந்தாற் போல் செலவுகளைச் செய்யுங்கள்.
- ஆடம்பரம் அவசியமா? என உணர்ந்திடு ங்கள்
- வருமானத்தில் சிறிதேனும் சேமிப்பைக் கடைப்பிடியுங்கள்
- வீண் செலவுகள் தேவையற்ற பொருட்களுக்காகச் செலவிடுவதைத் தவிர்க்கப் பழகுங்கள்
- ஒவ்வொரு மாதமும் செலவு கணக்குகளைப் பார்த்து செலவுகளைக் குறைக்க முயற்சி செய்யுங்கள்.
- பாதுகாப்பான வங்கிகளில் முதலீடு செய்யுங்கள்
- பணத்தை சேமிக்க கற்றுக் கொள்ளுங்கள்
- சேமிப்பு ஒன்றுதான் அவசரத்திற்கு உதவும் நண்பன் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ❖ கடவுளின் ராஜ்யத்தை எதனோடு ஒப்பிடலாம்..? அது கடுகுமணி போன்றது. அது விதைக்கப்படும்போது பூமியிலுள்ள விதைகள் அனைத்திலும் மிக மிகச் சிறியதாயிருக்கிறது. ஆனால், விதைக்கப்படும் பின்போ, அது வளர்ந்தோங்கி சகல பூண்டுகளையும் விடப் பெரியதாகி வானப்பறவைகளை அதன் நிழலின் கீழ் வந்து வசிக்குமளவு பெரும் பெரும் கிளைகளை விடுகிறது.
- ❖ தீபத்தைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைப்பதில்லை. தீபக்காலின் மேல்தான் வைப்பார்கள். அது வீட்டிலுள்ள அனைவருக்கும் வெளிச்சம் தரும். அதுபோல, மனிதர்கள் உங்கள் நற்காரியங்களைக் காணும் பொருட்டு உங்கள் ஒளி அவர்கள் முன் பிரகாசிக்கட்டும். பரமண்டலத்திலுள்ள உங்கள் பிதாவை அவர்கள் போற்றட்டும்.
- ❖ உங்கள் இருதயங்களிலே கசப்பான பொறாமையும், சச்சரவையும் வைத் திருப்பவர்களானால் நீங்கள் பெருமை கொள்ள வேண்டாம். உண்மைக்கு எதிராகப் புளுகவும் வேண்டாம்.
- ❖ கொழுத்த எருதுக்கறியைப் பகையோடு உண்பதைவிட அன்பு இருக்குமிடத்தில் வெறும் இலைக்கறியை உண்பது நல்லது.

# மகளிர் உலகக் கிண்ணப் போட்டி நியூசிலாந்தை பந்தாடியது இந்தியா

மகளிர் உலகக் கிண்ண இருபது-20 தொடரின் முதல் ஆட்டத்தில் இந்திய அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தியது. மேற்கிந்திய தீவுகளில் மகளிர் உலகக் கிண்ண இருபது-20 கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் போட்டியில் இந்தியா-நியூசிலாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

தொடக்க வீராங்கனைகளான தானியா பாட்டியா (9), மந்தனா(2) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். பின்னர் வந்த ஜெமிமா ரோட்ரிகஸ் அதிரடியில் கலக்கினார். ஹேமலதா தனது பங்குக்கு 7 பந்துகளில் 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த ஹர்மன் பிரீத் கவுர் நியூசிலாந்தின் பந்து வீச்சை சிதறடித்தார். சிக்சர் மழையாக பொழிந்த அவர், விரைவாக அரைசதம் கடந்தார். அவருக்கு பக்கபலமாக விளையாடிய ஜெமிமா ரோட்ரிகஸும் அரைசதம் விளாசினார்.



இவர்களின் அதிரடி ஆட்டத்தினால் அணியின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது. இந்நிலையில் 45 பந்துகளில் 59 ஓட்டங்கள் எடுத்திருந்த ஜெமிமா ஆட்டமிழந்தார். அதன் பின்னர் அதிரடியில் மிரட்டிய ஹர்மன்பிரீத் சதம் விளாசினார்.

இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 194 ஓட்டங்கள் குவித்தது. ஹர்மன் பிரீத் கவுர் 51 பந்துகளில் 8 சிக்சர், 7 பவுண்டரிகளுடன் 103 ஓட்டங்கள் எடுத்தார். இந்திய அணி குவித்த இந்த ஸ்கோர் தான், இருபது-20 உலகக் கிண்ண தொடரில் ஒரு அணி எடுத்த அதிகபட்ச ஸ்கோர் ஆகும். பின்னர் ஆடிய நியூசிலாந்து அணி தொடர்ச்சியாக விக்கெட்டுகளை இழந்தது. அந்த அணியில் தொடக்க வீராங்கனை சூசி பேட்ஸ் அதிரடியாக 50 பந்துகளில் 67 ஓட்டங்களும், கேட்டி மார்டின் 25 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்தனர்.

மற்ற வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறியதால், நியூசிலாந்து அணி 9 விக்கெட் இழப்புக்கு 160 ஓட்டங்கள் எடுத்து 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்திய அணி தரப்பில் ஹேமலதா, பூனம் யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர். (க)






# பாகிஸ்தான் வீரனைத் தாக்கிய பவுன்சர் மைதானத்தில் மயங்கி வீழ்ந்த வீரர்

அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நியூசிலாந்து - பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியின் போது துடுப்பாட்டம் செய்யும் போது பவுன்சர் பந்து தாக்கியதில், பாகிஸ்தான் இளம் வீரர் இமாம் உல் ஹக் காயம் அடைந்துள்ளார்.

போட்டியின் போது இமாம் உல் ஹக் துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்த வேளையில் நியூசிலாந்து வீரர் லாக்கி பெர்கசன் வீசிய பவுன்சர் பந்தை எதிர்கொண்டார்.



ஆனால் துரதிர்ஷ்டவசமாக பந்து அவரது தலையை தாக்கியது.

இந்நிலையில் ஹெல்மெட் அணிந்து இருந்த போதும் பந்து மோதிய வேகத்தில் இமாம் உல் ஹக் வலியால் துடித்தார். மைதானத்தில் சில விநாடிகள் படுத்த இமாம் உல் ஹக், பின்னர் எழுந்து நின்றார்.

பாகிஸ்தான் அணியின் வைத்தியர்கள் உடனடியாக மைதானத்துக்கு வந்து அவரை அழைத்துச் சென்றனர்.

ஸ்கான் செய்யப்பட்டதில், அவருக்கு பெரிய அளவில் எந்த காயமும் இல்லை என்று தெரியவந்ததாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

மேலும் இதுபோன்ற சம்பவம் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூர் போட்டியின் போது, அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹூக்ஸ், பவுன்சர் பந்து பின் கழுத்து பகுதியில் தாக்கியதால், நிலைகுலைந்து உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

# சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுகிறார் முனாப் படேல்




இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முனாப் படேல், சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு இந்திய அணியில் அறிமுகமான வேகப்பந்து வீச்சாளர் முனாப் படேல் (35), தனது முதல் டெஸ்ட் போட்டியிலேயே 7 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

தொடர்ந்து ஒருநாள், இருபது-20 போட்டிகளில் விளையாடிய முனாப் படேலினால் காயம் மற்றும் ஆட்டத்திறன் காரணமாக இந்திய அணியில் நிரந்தர இடம் பிடிக்க முடியாமல் போனது.

எனினும், 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியில் ஜாகீர் கான், யுவராஜுக்கு அடுத்ததாக அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார்.

பந்துவீச்சாளர்களைப் பொறுத்தவரை ஒரே போட்டியில் 5 விக்கெட்டுகளை வீழ்த்துவது சிறப்பான விடயமாகும். ஆனால், முனாப் படேல் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை மட்டுமே ஒரே போட்டியில் வீழ்த்தியுள்ளார்.

டெஸ்டில் இவரது சிறந்த பந்து வீச்சு 4/25. ஒருநாள் போட்டியில் சிறந்த பந்துவீச்சு 4/29 ஆகும். முனாப் படேல் இதுவரை 70 ஒருநாள் போட்டிகளில் 86 விக்கெட்டுகளையும், 13 டெஸ்ட் போட்டிகளில் 35 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

இந்நிலையில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக முனாப் படேல் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், 'நான் விளையாடிய வீரர்களில் டோனியைத் தவிர அனைவரும் ஓய்வு பெற்றுவிட்டார்கள். மற்றவர்கள் விளையாடி நான் மட்டும் ஓய்வு பெற்றால் மட்டுமே வருத்தமாக இருக்கும்.

எனவே, தற்போது வருத்தங்கள் எதுவும் இல்லை. நான் கிரிக்கெட்டிலிருந்து விடைபெறுகிறேன் என்பதையும் என்னால் நம்ப முடியவில்லை. எனக்கு கிரிக்கெட் தவிர எதுவும் தெரியாது' என தெரிவித்துள்ளார். (க)

# ஓய்வு பெற்றார் ஹேரத்

இலங்கை அணியின் இடது கை சுழற்பந்து வீச்சாளர் ரங்கனா ஹேரத் நேற்று ஓய்வு பெற்றுள்ளார்.

இலங்கை - இங்கிலாந்து அணிகள் இடையிலான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் காலி மைதானத்தில் நடந்து வருகிறது.

கடைசி டெஸ்ட் போட்டியுடன் இலங்கை அணியின் இடது கை சுழற்பந்து வீச்சாளர் ரங்கனா ஹேரத் ஓய்வு பெற திட்டமிட்டிருந்தார்.

காலி நகரில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டியுடன் அவர், ஓய்வு பெற உள்ளதாக இலங்கை கிரிக்கெட் வாரியம் அறிவித்தது.

அதன்படியே, நேற்று காலி மைதானத்தில் முதல் டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்றார் ரங்கனா ஹேரத்.

மைதானத்திற்கு அவரது மனைவி மற்றும் பிள்ளைகளும் வந்திருந்தனர். ரங்கனாவை தங்களது தோளில் சுமந்து சென்று இலங்கை வீரர்கள் பிரியாவிடை கொடுத்தனர்.

40 வயதான ஹேரத் 1999 ஆம் ஆண்டு காலி மைதானத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார்.

92 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 430 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். இலங்கை அணியில் முரளிதரனுக்கு (800 விக்கெட்கள்) பிறகு அதிக விக்கெட்கள் வேட்டையாடியவர்களில் ஹேரத் 2 ஆவது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## அரசியலை முன்...

வழியில் தமிழ் தேசிய அரசியலை முன்னெடுத்து செல்லும் ஒரு தலைமை தற்போது தேவை என தெரிவித்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், அதற்கு ஏற்ற வகையில் இந்த மண்ணில் இன்று எனது கண்ணுக்கு தெரிந்த தலைமையாக நீதியரசர் விக்னேஸ்வரனை பார்க்கிறேன் என தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு மரநடுகையும் மலர்க் கண்காட்சியும் நேற்று நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எனது கல்லூரி பருவத்தில் இருந்து ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு என்னால் இயன்ற வரை தொடர்ந்து பங்களிப்பு செய்து வந்துள்ளேன். பின்னர் 8 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் இங்கு வந்துள்ளேன். ஈழ போராட்ட களத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானவர்கள் எனக்கு அறிமுகமானவர்கள்.

தமிழக மண்ணில் இன்று அரசியல் வெற்றிடம் உள்ளது என விவாதம் நடக்கிறதோ அதேபோல் ஈழ மண்ணில் அரசியல் களத்தில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் கொண்டுள்ளோம்.

அரசில் இல்லாமல் சமூகத் தொண்டு ஆற்றுவது என்பது கண்துடைப்பு.எமது அனைத்து நடவடிக்கைகளிலும் அசைவிலும் அரசியல் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். அந்த புரிதல் எமது இளைஞர்களுக்கு தேவை. இளம் தலைமுறையினர் அந்த விழிப்புணர்வினை பெற்றாக வேண்டும்.

பகைவர்களின் அசைவுகளில் கொள்கைப் பகைவர்களின் அசைவுகளில் அரசியல் உள்ளது. அதில் விழிப்புணர்வை பெற்று அரசியலில் மேலோங்கி அதை நாம் பசுமைப்படுத்த வேண்டும். பசுமை என்பது எழுச்சி வலிமை என்று பொருள்படும்.

ஈழத்தில் இன்று அரசியல் தலைமைக்கான வெற்றிடம் உள்ளது. தந்தை செல்வா காலத்தில் அகிம்சை வழியில் போராடக்கூடிய அரசியல் தலைமை வலுப்பெற்றது. பின்னர் பல கட்சிகள் உருவாகின. நாடாளுமன்ற தேர்தலில் பங்கேற்றன. 1970களின் பின்னர் கருவி ஏந்தி போராடக்கூடிய அரசியலை நோக்கி எம்மை இட்டுச் சென்றது.

மொழியை காப்பதற்கான உணர்ச்சி தான் இன உணர்ச்சியை எமக்கு மேலோங்கச் செய்தது. அந்த உணர்வு தான் எமக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

இங்கு பெரும்பான்மை தேசியவாதம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. சிங்கள பௌத்த பேரினவாதம் என்ற சொற்றொடர் மாவீரர் நாளான கார்த்திகை 27 இல் அண்ணன் பிரபாகரனின் உரையில் இடம்பெறும். கட்டாயம் இடம்பெறும். இந்த 3 சொற்தொடரும் வலுவான அரசியலை கொண்டுள்ளது.

சிங்கள என்பது மொழிவழி மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகிறது. பௌத்தம் என்பது மதவழி தேசியத்தின் ஆதிக்கத்தை உருவாக்குவது. பேரினவாதம் சிங்களவர்கள் பௌத்தர்களாக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல அவர்கள் பெரும்பான்மை சமூகமாக இருக்கிறார்கள் என்பது.

எனவே அந்த சொற்றொடரில் ஆதிக்கம் இருக்கிறது. எம்மீதான ஒடுக்குமுறை உள்ளது. பெரும்பான்மை தேசியவாத அரசியல் உள்ளது. இதில் இருந்து சிறுபான்மை சமூகமாகிய தமிழர்களின் உரிமைகளை காப்பது அல்லது விடுதலையை வென்றெடுப்பது என்பதை உணர்த்துவதற்கு நாம் ஆயுதம் ஏந்தி போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம் என மாவீரர் நாள் உரையில் தவறாமல் பதிவு செய்து வந்தார்.

மேலும் அவர் இந்திய அரசை விமர்சிப்பதில்லை. அந்த பேரரசு எமது விடுதலைக்கு தேவை என்பதை உணர்ந்து மாவீரர்நாள் உரையை கவனமாக ஆற்றினார்.

ஆனால் இந்திய அரசு, இலங்கை அரசு, அதற்கு ஆதரவான அமெரிக்கா, சீனா போன்ற பேரரசுகள் எமது கோரிக்கைகளை எந்த அளவு ஏற்றார்கள் எமது அவலக்குரல்களுக்கு எந்தளவு மதிப்பளித்தார்கள், உலக நாடுகள் ஒன்றிணைந்து இயங்கும் ஐ.நா பேரவை எந்த அளவு எமது கண்ணீரை துடைக்க முன்வந்தது. நாம் கொட்டிய இரத்த கறைகளை துடைக்க முன்வந்தது என்பதை நாம் சீர்தூக்கி பார்க்கவேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

எம்முன்னால் இருக்கும் சவால் சிதறிக்கிடக்கும் எமது தமிழ் சமூகத்தை ஒருங்கிணைப்பது என்பது முதன்மையானது. தாயகத்தில் ஒரு பங்கு, புலம்பெயர் நாடுகளில் ஒரு பங்கு, இந்தியாவில் உள்ள தமிழ் சமூகம் ஒரு பங்கு என தமிழர்கள் தேசிய இனம் என்ற அடிப்படையில் நாம் ஒரே அடையாளத்தை கொண்டிருந்தாலும் ஒருங்கிணைந்து இருக்கிறோமா ஒருமித்த கருத்தில் இயங்குகிறோமா என்பது எம் முன்னால் இருக்கும் சவாலாகவுள்ளது.

எனவே சிதறிக்கிடக்கும் தமிழ் சமூகத்தை ஒன்றிணைப்பதற்கான அறிவான ஒரு தலைமை, பகைவர்களை தெளிவாக புரிந்து அவர்களின் ராஜதந்திரங்களுக்கு ஈடுகொடுத்து முறியடிக்கும் தலைமை, ஆயுதம் ஏந்தி போராட வாய்ப்பில்லை என்ற நிலையில் இந்த நாடாளுமன்ற ஜனநாயக வழியில் போராடுவதற்கு ஏற்ற ஒரு தலைமை, சமரசம் இல்லாமல் தமிழ் தேசிய அரசியலை முன்னெடுத்து செல்லும் ஒரு தலைமை எமக்கு தேவைப்படுகிறது.

அதற்கு ஏற்ற வகையில் இந்த மண்ணில் இன்று எனது கண்ணுக்கு தெரிந்த தலைமையாக விக்னேஸ்வரனை பார்க்கிறேன். நான் இதை ஒரு சார்புபட கூறுவதாக எண்ண வேண்டாம். எனக்கு 30 ஆண்டுகளுக்கு மேலான அரசியல் கள அனுபவம் உள்ளது.

தமிழ் தேசியத்தை வெறும் மொழி இன உணர்ச்சியாக பார்ப்பவன் அல்ல நான். மொழி தூய்மையில் இருந்து மட்டும் தமிழ் தேசியம் பிறந்துவிடாது. இனப் பற்று இன வெறியில் இருந்து தமிழ்த் தேசியம் பிறந்துவிடாது. இவை எல்லாம் அடிப்படை உணர்வுகள்.

மொழி உணர்வு தேவை. உணர்வு என்பது முற்றும் போது பற்றும் நிலையாக மாறுகிறது. அது மொழிப் பற்றாக மாறி மேலும் வலிமையடையும் போது மொழி வெறியாக மாறுகிறது. மொழி வெறி என்பது இன்னும் ஒரு மொழி மீது வெறுப்பில் இருந்து மொழி வெறி உருவாகிறது.

எமது மொழியை நாம் நேசிக்கிறோம் என்பது அவசியமானது. மொழிப் பற்று என்பது எம்மை போர்க்குணத்துக்கு இட்டுச்செல்லும் வழி. ஆனால் அது அடுத்தகட்டத்தை நோக்கி நகரும் போது கோட்பாட்டு அடிப்படையில் இயங்குவதாக உள்ளது.

தமிழ்த் தேசியம் எனும் சொற்றொடருக்குள் பிரபாகரன் தமது விடுதலை கருத்துக்களை முன்னெடுத்தார். சிங்கள பௌத்த பேரினவாதம் என்ற சொற்றொடரில் சிங்களத்துக்கு மாற்று தமிழ், பௌத்தத்துக்கு மாற்று இந்து, பேரினவாதத்துக்கு மாற்று சிறுபான்மை வாதம் என அவர் கணிக்கவில்லை.

சிறுபான்மை தேசிய இனமாக தமிழ் சமூகம் இருப்பதாக சொன்னார்.ஆனால் தமிழ் சமூகத்தை இந்து சமூகமாக எந்தவொரு இடத்திலும் அடையாளப்படுத்தவில்லை என்பதை நாம் அரசியல் ரீதியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். தமிழ்த் தேசியம் என்பது மதம் சார்ந்தது அல்ல, சமய சடங்குகளோடு கொடுக்கக்கூடியது அல்ல. மாறாக மக்களின் உரிமைகளோடும் மக்களின் வாழ்விடத்தின் உரிமைகளோடு, பாதுகாப்புடன் தொடர்புடையது. அதனால் தான் தமிழீழ விடுதலைப்புலிகள் தாயகம் தேசியம் தன்னாட்சி என்ற மூன்று சொற்தொடருடன் கோரிக்கை முன்வைத்தார்கள்.

எமக்கு என தாயகம் உள்ளது. அது வடக்கு கிழக்கு மாகாணம், எமக்கென தேசியம் உள்ளது. அது நாம் பேசும் மொழிவழி தமிழ் தேசியம், எமக்கென இறையாண்மை உள்ளது, அது தான் நாம் கட்டமைக்க விரும்பும் தன்னாட்சி நிர்வாகம். இந்த புரிதலில் இருந்து இந்த இயக்கம் தான் நீண்ட நெடுங்காலம் போராடியது.

அதில் இழப்பு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம், இது எந்த காலத்திலும் ஈடுசெய்ய முடியாது. ஆனால் அது சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளது. உலகநாடுகள் எமக்கு எதிராக இருந்ததை நாம் மறந்து விட முடியாது.

ஈழத்தமிழரின் இந்த விடுதலை போராட்டம் தமிழ்த் தேசிய விடுதலை போராட்டம் சர்வதேச அரங்கில் விவாதிக்கப்படக்கூடிய ஒன்றாக மாறிவிட்ட நிலையில் சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெறாமல் இனி நம்மால் அந்த இலக்கை நோக்கி ஒரு அங்குலம் முன்னேற முடியாது. ஈழத்தில் இருப்பவர்கள் பயங்கரவாதிகள் என்ற பொதுக்கருத்தை உலக அரங்கில் ஏற்படுத்திவிட்டார்கள்.

இந்த கருத்தை அழிக்க வேண்டும். தமிழர்கள் அமைதியை ஜனநாயகத்தை விரும்புகிறோம் வாழ்வுரிமையை விரும்புகிறோம் எமது காணிகள் விடுவிக்கப்படவேண்டும், ஆக்கிரமிப்பு அகற்ற வேண்டும், பௌத்த கலாசார முயற்சிகளை தடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை உலக அரங்கில் உரத்து சொல்வதற்கு நாடாளுமன்ற ஜனநாயக பாதையில் வெளிப்படையாக இயங்கும் ஒரு தலைமை தேவைப்படுகிறது.

தமிழ் நாட்டில் வெற்றிடத்தை நிரப்ப நடிகர்கள் ஓடிவருகிறார்கள் இந்த நிலை தமிழகத்தில் இருப்பது தான் வேதனைக்குரியது.

ஈழத்தில் தற்போது பிரபாகரன் இல்லை, தந்தை செல்வா இல்லை, வேறு தலைமைகள் இல்லை, இயக்க தலைமைகள் இல்லை வெற்றிடத்தை நிரப்பக்கூடிய கேள்வி உருவாகும் போது விடை கிடைக்கவில்லை. நேர்மையான தூய்மையான தலைமை தேவை.

இளம்தலைமுறையினருக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்அரசியல் ரீதியில் நாடாளுமன்ற ஜனநாயக வழியில் நடத்திச்செல்ல வேண்டும், உலகில் எந்த தேசத்திலும் இனி ஆயுத போராட்டம் வெற்றியளிக்காது. ஆயுத போராட்டம் இன்னுமொரு பேரரசின் துணையுடன் தான் தொடங்க வேண்டும்.

எந்த அரசு வந்தாலும் அதாவது ரணிலோ மகிந்தவோ மைத்திரியோ ஆட்கள் தான் வேறு அவர்களின் கோட்பாடு ஒன்று தான் அதை மறக்கக்கூடாது. அவர்கள் பின்னால் பேரரசு இயங்குகிறது.இந்திய அரசின் ஈழத் தமிழர் தொடர்பான வெளியுறவுக்கொள்கை என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

சர்வதேசத்துடன் இணக்கமாக இருந்து மானத்தை இழக்காமல் உரிமைகளை இழக்காமல் நிலத்தை இறையாண்மையை மீட்க எப்படி போராடப்போகின்றோம்?அடுத்த தலைமுறையை எவ்வாறு வழிநடத்தப் போகிறோம் என்ற கேள்விகளுக்கு விடை தேட வேண்டும். இன்று எனது நம்பிக்கைக்கு உரிய நட்சத்திரம் விக்னேஸ்வரன் என நான் நம்புகிறேன். அவர் ஒரு தளிர். மாபெரும் விருட்சம் என்ற அளவு மாறுவது வரலாற்றுத் தேவை என நரன் விரும்புகிறேன்.

தமிழ்த் தேசிய அரசியலை அடைகாத்து செல்வதற்கு இப்போது வெற்றிடம் உள்ளது. அதை நிரப்பும் தேவையை உணர்ந்து கடந்த கால கசப்புகளை மறந்து நமக்கிடையிலான விமர்சனங்களை தவிர்த்து தமிழ் சமூகத்தை ஒருங்கிணைக்க முயலவேண்டும்.

எமது ஆற்றாமையாலும் இயலாமையாலும் பகைவரை விட்டுவிட்டு நமக்குள் நம்மவர்களை விமர்சித்துக்கொண்டிருக்கிறோம். 10 ஆண்டுகளில் இதைதான் செய்துள்ளோம்.

சிங்கள பேரினவாதத்துக்கு துணை போனவர்கள் யார், எமக்கு எதிராக அணி திரண்டவர்கள் யார், எமது கொள்கை பகைவர்கள் யார் என்பதை அறிய நாம் இன்னும் முனையவில்லை அது மிக அவசியமானது.

தமிழ்த் தேசியம் என்பது எமது வாழ்வுரிமையுடனும் அடுத்த தலைமுறையின் பாதுகாப்புடன் தொடர்புடையது. பேரரசுகளின் ஒடுக்கு முறையில் இருந்து விடுதலை பெறும் போராட்டத்துடன் தொடர்புடையது. வெறும் மொழி உணர்வுடன் பார்க்காது தொலை தூர பார்வையில் எமது சந்ததியின் பாதுகாப்பை உறுதிபடுத்தக்கூடிய ஒரு அரசியல் என்பதை உணர்ந்து முன்னெடுத்து செல்வோம்.

விடுதலைச் சிறுத்தை என்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாக்கத்தில் இருந்து உருவானது என்றும் தமிழீழ மக்களின் நலனுக்காக இருக்கும். ஈழம் வெல்லும் அதை காலம் சொல்லும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## தமிழரின் ஒற்...

சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு வழங்கியுள்ள விசேட நேர்காணலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கடந்த மூன்று வருட காலப் பகுதியில் தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அந்த நடவடிக்கைகள் மந்த கதியிலேயே முன்னெடுக்கப்பட்டன. குறித்த விடயங்களை அரசாங்கம் துரித கதியில் முன்னெடுத்திருக்க முடியும். எனினும் அவ்வாறு செய்யவில்லை என தெரிவித்துள்ளார்.(ம)

## தலதா மாளிகையில் ஜனாதிபதி மைத்திரி விசேட வழிபாடு



(கொழும்பு)

தனிப்பட்ட விஜயமாக நேற்று சனிக்கிழமை முற்பகல் கண்டிக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தலதா மாளிகைக்கு சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த விஜயத்தின்போது அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடாதிபதிகளை சந்தித்து கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விஜயத்தில் ஜனாதிபதியுடன், அமைச்சர்களான எஸ்.பி.திஸாநாயக்க, மகிந்த அமரவீர மற்றும் முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி நேற்று முன்தினம் நள்ளிரவு நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இச்செயற்பாடு இலங்கை அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் அவர் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 10-11-2018
சீட்டிழுப்பு இலக்கம் 890
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
N 7 8 6 7 4 9

கொவிசெத
திகதி 2018.11.10
சீட்டிழுப்பு இலக்கம் 1939
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
A 27 44 55 66

செவண
திகதி 2018/11/10
சீட்டிழுப்பு இலக்கம் 134
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
X 02 48 54 69

சுபிரி வாசனா
திகதி 2018/11/10
சீட்டிழுப்பு இலக்கம் 1376
எழுத்து / வெற்றி இலக்கம்
13 27 53 66 68 19 04

தேசிய லொத்தர் சபை

## யாழை சேர்ந்த...

மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் நேற்று முற்பகல் 10.30 அளவில் அவர்கள் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருடத்தில் கல்வி பயிலும் இணுவிலை சேர்ந்த செல்வரட்ணம் திசான் (வயது-25), வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சரவணபவன் கோபிசன் (வயது-23) மற்றும் நல்லூரைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் சாரங்கன் (வயது-25) ஆகிய மூவருமே உயிரிழந்தனர்.

உயிரிழந்த மாணவர்களின் சடலங்கள் பலாங்கொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ம)

## குழிக்குள் விழு...

மன்னார் தோட்டவெளி பகுதியிலேயே நேற்று சனிக்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தோட்டவெளியிலுள்ள குறித்த நீர் நிறைந்த குழிக்கு நீராடச்சென்ற வேளையிலேயே சிறுவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 7 மற்றும் 8 வயதுடைய சிறுவர்களே உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இந்தநிலையில் குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## ஜனாதிபதியின்...

தொடர்பில் உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோருமாறு தாம் கேட்டுக் கொள்வதாகவும் பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார். (ம)

## தேர்தல்கள்...

இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னரே நான் அது தொடர்பில் அறிந்திருந்தேன், ஆனால் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஆலோசனை பெற வேண்டிய தேவை இல்லை.

அதாவது அரசியல் யாப்பில் பொது தேர்தலுக்கான சூழலை ஏற்படுத்தி கொடுக்குமாறே கேட்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் பிரச்சினை இல்லை ஆகவே தேர்தலுக்கான சூழல் காணப்படுகின்றது. சுனாமி ஒன்று ஏற்பட்டால் அல்லது தேர்தல் காலங்களில் கொலைகள் இடம்பெற்றால், மழைபெய்யும் காலங்களில் குடையை கொண்டு செல்வது சிறந்தது.

எந்த நேரத்திலும் பொது தேர்தலையோ எந்தவொரு தேர்தலையோ நடத்த ஆணைக்குழு தயாராகவுள்ளது.

நிலையில்லாத உலகத்தில் எதனையும் நிலையானது என கூறுவது கடினம். பொது தேர்தலுக்கு 4 அல்லது 5 கோடி ரூபாய் செலவாகும் என அவர் தெரிவித்தார். (ம)

## அரசியலமைப்...

கருத்து வெளியிட்ட அவர், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றம் செல்ல எதிர்பார்த்துள்ளோம்.

அத்துடன், ஜனாதிபதி ஆரம்பம் முதலே அரசியலமைப்பை மீறி செயற்பட்டு வருகின்றார். அடுத்த தேர்தலில் அவரது அரச அதிகாரத்தை உச்ச அளவில் பயன்படுத்தும் நோக்கிலேயே அமைச்சரவை செல்லுபடியாகும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்படாத அதிகாரத்தின் மூலம் புதிய பிரதமரை நியமித்தார். புதிய அமைச்சரவையினை நியமித்தார்.

அவ்வாறே நாடாளுமன்றத்தை மைத்திரிபால சிறிசேன கலைத்துள்ளார். இது முற்றாக அரசியலமைப்புக்கு விரோதமானது என தெரிவித்துள்ளார். (ம)

## அலரி மாளிகை...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அரசியலமைப்பிற்கு எதிரானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை மேற்கொள்வதாக அகில விராஜ் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவை நேற்று சந்திப்பதற்காக சென்ற சந்தர்ப்பத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (ம)

## ஜனாதிபதியின் செய...

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றம் செல்ல எதிர்பார்ப்பதாக மக்கள் விடுதலை முன்னணி கூறியுள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இதனைக் கூறியுள்ளார். (ம)

## உதவிகளை...

விற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்

அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையின் மூன்று பிரதிநிதிகள் இந்த கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

உங்கள் நாட்டின் பாராளுமன்றத்தை இடைநிறுத்தி பிரதமரை அரசமைப்பிற்கு முரணான விதத்தில் நீக்கிய உங்கள் நடவடிக்கை குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் என அவர்கள் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறும் தற்போதைய நெருக்கடிக்கு ஜனநாயக வழிமுறைகள்ஊடாக தீர்வை காணுமாறும் நாங்கள் உங்களை கேட்டுக்கொள்கின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

2015 இல் நீங்கள் தெரிவு செய்யப்பட்டமை இலங்கையில் ஜனநாயக சீர்திருத்தம் பொறுப்புக்கூறப்படுதல் மற்றும் நல்லிணக்கம் குறித்த புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்தியதாக அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நல்லிணக்க செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான உங்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் இலங்கையில் ஜனநாயக ஆட்சிக்கான புதிய சமிக்ஞையை வெளிப்படுத்தின என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளிற்கு பதிலாக அமெரிக்கா இலங்கையுடனான உறவுகளில் முதலீடு செய்வதற்கான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக சமீபத்தைய நடவடிக்கைகள் சரிசெய்யப்படாவிட்டால் உங்கள் நாட்டின் ஜனநாயக அபிவிருத்தி மற்றும் அண்மையான வருடங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என நாங்கள் அச்சமடைந்துள்ளோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சமீபத்திய நடவடிக்கைகள் இலங்கையில் அரசியல் நெருக்கடியை உண்டு பண்ணியுள்ளது. சபாநாயகர் கருஜெயசூரிய இரத்தக்களரி அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ளார். இலங்கையில் சமீபத்தில் இடம்பெற்றுள்ள விடயங்கள் எம்சிசி திட்டத்திற்கும் அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிக்கும் அமெரிக்காவின் ஏனைய திட்டங்கள் மற்றும் ஈடுபாடுகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அமெரிக்க உறவுகள் நல்லாட்சி ஜனநாயக விழுமியங்களிற்கான அர்ப்பணிப்பு என்ற பகிரப்பட்ட இலக்குகளில் கட்டியெழுப்பபட்டுள்ளன. இதன் காரணமாக பாராளுமன்றம் தலையீடுகள் இன்றி தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அனுமதிப்பதன் மூலம் இந்த விழுமியங்களிற்கான உங்கள் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையின் பிரதிநிதிகள் தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (ம)

## பாராளுமன்ற...

இடம்பெற்ற மலர்க் கண்காட்சியில் கலந்துகொண்ட பின்னர், பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவீர்களா என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்மானம் எடுக்கவில்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்டது சட்டத்துக்கு முரணானது என்பது ஏகோபித்த கருத்தாக உள்ளது. நான் போட்டியிடுவது குறித்து கட்சி தான் முடிவு எடுக்க வேண்டும். அவசரம் வேண்டாம் பொறுமையாக இருங்கள் என தெரிவித்தார். (ம-9)


### வாகனம் விற்பனைக்கு

ISUZU ELF 40- XXX, 14 1/2 அடி நீளம் ரூபாய் 995,000/=, FORK LIFT KOMATSU F.L 1.5L ரூபாய் 430,000/= வவுனியாவில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 246 7700

(6390)

### தேவை

யாழ் நகரில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு 18 வயதுக்கு மேற்பட்ட பெண் சுத்திகரிப்பாளர்கள் தேவை. யாழ். நகரில் இருந்து ஐந்து கிலோ மீற்றருக்குள் இருப்பவர்கள் மட்டும் சுயவிபரக்கோவையுடன் நாளை (12.11.2018) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு 514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாக) என்ற முக்வரிக்கு நேரில் வருகை தரவும்.

தொடர்பு: 021 221 9797

(6218)

### ஆங்கில வகுப்பு

தரம் 3, 4, 5 மாணவர்களுக்கு சாவகச்சேரி, கைதடி, நுணாவில், மீசாலை, கொடிகாமம் பகுதிகளில் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 545 5543

(6401)

### விசேட விலைக்கழிவு
### (15 - 55% வரை)

லங்கா வோல்ரைல்ஸ், லங்கா புளோரைல்ஸ் மற்றும் பெயின்ற் வகைகள்

ஏகவிநியோகஸ்தர்

நியூகமல் செரமிக்ஸ்
37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222085, 2219305 பக்ஸ்: 2224544

(நிபந்தனைக்குட்பட்டது)

(6403)

### தொழிற்பயிற்சியும் வேலைவாய்ப்பும்

வட மாகாணத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள எமது EDM Company 20ற்கு மேற்பட்ட புதிய கிளைகளுக்கு 35 பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.

பதவி: அலுவலகர், களஞ்சிய பாதுகாவலர், உதவி முகாமையாளர், முகாமையாளர், விற்பனை பிரதிநிதிகள்

தகைமைகள்: தரம் 10, O/L மற்றும் A/L படித்தவர்கள் நேர்முகத் தேர்வினூடாக தெரிவு செய்யப்படுவர்.

தொடர்புகளுக்கு:
0771263805, 0772986763

(6410)

### ENGLISH CLASSES

for Grade 6 to A/L Students
(personal & Group Classes)
Spoken English with Grammar
Contact: 071 511 2171
Dr.B.Suthaharan

(6407)

### விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-4381)

### A/L பொருளியல் - 6

அரசாங்கப் பொருளியல்

புதிய பாடத்திட்ட நூல் - வர்ணப்பக்கங்களுடன்

வங்கியாளர் & போட்டிப்பரீட்சைகளுக்குமுரியது.

A/L 2015, A/L 2016 பரீட்சைகளில் 99 புள்ளிகளும், A/L 2017, A/L 2018 பரீட்சைகளில் 100 புள்ளிகளும் பெற வைத்த நூல்களின்

புள்ளிகள் 100 / 100

ஆசிரியர் வே.கருணாகரன்

ரூபாய் 350/=

பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்.

(6380)

### வேலைவாய்ப்பு

இலங்கையில் வடக்கு மற்றும் வட கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் O/L, A/L பயின்ற இளைஞர், யுவதிகளுக்கு எமது நிறுவனத்தில் இணைய அரிய சந்தர்ப்பம்.

- ● நிர்வாக அதிகாரி ● மேற்பார்வையாளர் ● அலுவலக உதவியாளர்
- ● செயல்திட்ட அதிகாரி ● முகாமைத்துவ உதவியாளர்
- + 60 பேருக்கு முன்னுரிமை
- + 18-30 வரையிலான வயதுக்குட்பட்டவர்கள்.
- + தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
- + பயிற்சிக்காலத்தில் 18,000/= - 25,000/= வரையிலும் பயிற்சியின் பின்னர் 45,000/= க்கு மேல் (பதவிகளுக்கு ஏற்ப மாறும்)
- + நேர்முகத் தேர்வுக்கு (CV, NIC Copy, Birth Certificate Copy) கொண்டு வரவும்.

கிளைகளாக: (யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, முல்லைத்தீவு)

தொடர்பு: 0766564030, 0770064030

(6405)

### வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

(C-432)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்


நாதம் 191

Viber 076 636 3378


வள்ளுவர் ஆண்டு 2049 | 11.11.2018 | தொலைபேசி : 021 222 3378







# அப்பத்தில் ஆரம்பித்த அரசியல் அதிரடி



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மூப்பரைத் தவிர மற்றைய எல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன எங்கட மூப்பரைக் காணவில்லை. ஏதும் சிக்கலோ. கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

மழை குளிர் காலம். வயது போனவியளுக்கு விசாக்குடுக்கிற நேரமல்லோ இது. மூப்பருக்கும் உடல் நிலை சரியில்லைப்போல. விதானையார் விசுவலிங்கம் பதிலளித்தார்.

விதானையாரின் பதிலோடு வாத்தியார் வைத்திலிங்கம் உசார் அடைந்தவராக,

**வாத்தியார்:** நடுச்சாமத்தில எங்கட ஜனாதிபதி மைத்திரியல்லோ பாராளுமன்றத்தைக் கலைத்துப் போட்டார். பாராளுமன்றம் கலைபட்டது என்ற ஏக்கத்தில மூப்பருக்கு உடல் பாதிப்பு ஏற்பட்டு விட்டது போல. (வாத்தியார் இவ்வாறு கூற, ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது)

**பண்டிதர்:** பாராளுமன்றம் கலைபட்டதற்கு மூப்பர் ஏன் அதிர்ச்சியடைய வேணும். அவர் என்ன பாராளுமன்ற உறுப்பினரோ.

**வாத்தியார்:** நான் அதுக்குச் சொல்லல்ல. பாராளுமன்றத்தைக் கலைத்தால் பொதுத்தேர்தல் நடக்கும்.

பொதுத்தேர்தல் நடந்தால் எங்கட அரசியல்வாதிகள் பொய்யும் புரட்டும் சொன்னபடி இருகரம் கூப்பியவண்ணம் எங்கட வீடுகளைத் தேடி வருவினமல்லோ. அந்த அரியண்டத்தால மூப்பர் ஏங்கியிருப்பார்.

**விதானையார்:** அதெண்டால் உண்மைதான். பாராளுமன்றம் கலையுமெண்டு ஒருத்தரும் நினைக்கல்ல. பாராளுமன்றம் கலைக்கப்படும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின்ர பொய்ப்பிரசாரம் என்று அரச திணைக்களம் மறுப்புத் தெரிவித்தது. இருந்தும்....

**வாத்தியார்:** அரச திணைக்களம் மறுத்திருந்தாலும் 08.11.2018 இல் வெளிவந்த வலம்புரிப் பத்திரிகையின்ர முன்பக்கத் தலைப்புச் செய்தி எந்நேரமும் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்பதாக இருந்தது.

**கங்காணி:** நானும் பார்த்தனான். வலம்புரியில செய்தி வந்து 48 மணித்தியாலயத்திற்குள்ள பாராளுமன்றம் கலைபட்டு விட்டது.

**பண்டிதர்:** எல்லாம் குழம்பிப் போன கட்டத்தில பாராளுமன்றத்தைக் கலைக்கிறதைத் தவிர வேறு வழியொன்றும் ஜனாதிபதி மைத்திரிக்கு இல்லை. ஆகையால அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கிறதுதான் ஒரே வழி.

**விதானையார்:** அப்ப இந்த முறை மாவீரர் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படும் போல.

**கங்காணி:** என்ன விதானையார் சொல்லுறியள். பாராளுமன்றக் கலைப்பிற்கும் மாவீரர் தினத்திற்கும் என்ன தொடர்பு.

**விதானையார்:** பாராளுமன்றக் கலைப்பிற்கும் மாவீரர் தினத்திற்கும் தொடர்பில்லை. ஆனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் பொதுத்தேர்தல் நடக்குமல்லோ. அப்ப பொதுத் தேர்தலில போட்டியிடுகின்ற எங்களவர்கள் மாவீரர் தினத்தில தீபம் ஏற்ற முந்தியடிப்பினம். மாவீரர்களைப் புகழ்ந்து பேசுவினம். தலைவர் பிரபாகரனின் வழியில் எங்கள் அரசியல் பயணம் எண்டு நாக்கூசாமல் சொல்லுவினம். அதாலதான் வருகிற நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினம் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்படும் எண்டு சொன்னனான்.

**பண்டிதர்:** அதுசரி பொதுத்தேர்தலில வாக்குக் கேட்டு வாறவியள் தமிழ் மக்களுக்கு என்ன சொல்லப் போகினம்.



திருவிளையாடல் நடக்கிறது பாரீர்!

**சாத்திரியார்:** காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பம், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பம் எண்டு பழைய புராணத்தை பாடவேண்டியது தானே.

**வாத்தியார்:** யார் என்ன சொன்னாலும் இந்த முறை தமிழ் மக்கள் மிக இறுக்கமாகத்தான் நிற்பினம். முந்தினமாதிரி இனியும் மக்களை ஏமாத்தலாம் எண்டு யார் நினைத்தாலும் அவர்களுக்கு அடி விழுகிறது சர்வநிச்சயம்.

**விதானையார்:** அது சரி எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா பாராளுமன்றத் தேர்தலில களமிறங்குவாரோ.

**பண்டிதர்:** களமிறங்குவாரோ இல்லையோ. ஆனால் அவர் ஆரம்பித்த தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சிக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்குது. அதனை நல்ல முறையாகப் பயன்படுத்தினால் எல்லாம் நல்லா வரும்.

**சாத்திரியார்:** வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்பார்த்திருக்கப் பொதுத் தேர்தலல்லோ வந்திட்டுது. நாம் ஒண்டு நினைக்க கடவுள் இன்னொண்டு நினைக்கிறான் என்ன செய்யிறது.

**கங்காணி:** என்ன இருந்தாலும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா தமிழ் மக்கள் கூட்டணியை ஆரம்பிப்பதாக நல்லூர்ப் பிரகடனத்தை அறிவித்த போது வானத்தில் பெரும் முழக்கம் கேட்டதல்லோ. அந்த முழக்கம் விக்னேஸ்வரன் ஐயாவின் புதிய கட்சிக்கு தெய்வத்தின் ஆசீர்வாதம் எண்டு அந்தக் கூட்டத்தில ஒருவர் சொன்னவர். இப்ப நிலைமையைப் பார்க்க அது சரி போலத் தான் இருக்குது.

**கங்காணி:** அது சரி சாத்திரியார் சோதிடத்தின்ர அடிப்படையில என்ன மாதிரி அரசியல் நிலைமை அமையும்.

**சாத்திரியார்:** இலங்கையில நடக்கிற அரசியல் மாற்றங்கள் எல்லாம் எப்படி அரசியலமைப்புக்குப் பொருந்தாமல் உள்ளதோ அதுபோல இலங்கை அரசியல் மாற்றம் பற்றி சோதிடத்திலும் எதுவும் இல்லை. ஒண்டும் கணிக்க முடியாத அளவில் எங்கட ஜனாதிபதி மிகப் பெரும் திருவிளையாடல் செய்கிறார். எல்லாவற்றையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேணும்.

இவ்வாறு சாத்திரியார் சொல்லி முடிக்க ஆலடியில பல்சர் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நின்றது.

மோட்டார் சைக்கிளில் இருந்து மூப்பரின் பேரன் இறங்கினான். ஆலடியில் இருந்தவர்கள் ஏங்கி விறைச்சுப் போச்சினம். என்ன தம்பி மூப்பருக்கு... வாத்தியார் பதற்றத்தோடு கேட்டார்.

தாத்தா யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில இருக்கிறார். இதயத்தில் 80 வீத அடைப்பாம். வைபாஸ் (Bypass) செய்யவேணும் எண்டு டொக்டர் சொல்லியிருக்கிறார்.

**வாத்தியார்:** என்ர கதிர்காமத்துக்கந்தா அண்டைக்கும் ஒரு விரிவுரையாளர் வைபாஸ் செய்த பிறகு இறந்து போனார். இதேபோல எனக்குத் தெரிந்த சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருத்தர் யாழ்ப்பாணத்தில உள்ள தனியார் வைத்தியசாலையில வைபாஸ் செய்து பிறகு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் இறந்து போனாராம்...

**விதானையார்:** அப்ப மூப்பருக்கு யாழ்ப்பாணத்தில வைபாஸ் செய்யிற விடயத்தில அவசரப்படக்கூடாது. எதையும் விசாரிச்சுச் செய்யுங்க தம்பி. விதானையார் வழங்கிய ஆலோசனையுடன் மூப்பரின் பேரன் மோட்டார் சைக்கிளில் பறக்க, யாழ்ப்பாணத்தில நடந்த வைபாஸ் சத்திர சிகிச்சை எத்தனை, அதில சுகமடைந்தவர்கள் எத்தனை பேர் என்ற விடயத்தை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிக்கையாக வெளியிட வேண்டும்.

ஏனென்றால் வைபாஸ் சத்திரசிகிச்சை தொடர்பில் பலரும் பயம் கொண்டிருக்கினம். இவ்வாறு வாத்தியார் கூறியபடி சரி நாங்கள் ஒருக்கா மூப்பரைப் போய்ப் பார்ப்பம் என்ற அறிவித்தலோடு ஆலடிப் பிள்ளையாரை வணங்கி விட்டு மாநாட்டு உறுப்பினர்கள் மூப்பரைப் பார்க்க யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# மாணிக்கவாசகர் முதல் தமிழ் அரசியல்கைதிகள் வரை



“... நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே ” என்பது மணிவாசகரின் திருவாக்கு.

முதன்மை அமைச்சராக இருந்த மணிவாசகர் அந்தப் பதவியை வெறுத்து ஒதுக்கினார். இறைவனை அடைவதே மானிடப் பிறப்பின் நோக்கம் என்பதைப் புரிந்து கொண்டார்.

முதன்மை அமைச்சராகப் பணியாற்றி அரசாட்சிக்குப் பக்கபலமாக இருந்த மணிவாசகர் குதிரை வாங்குவதற்காகப் பொன் பொருளோடு செல்கிறார்.

செல்லும் வழியில் சிவனடியார் கூட்டத்தைக் கண்ணுற்று தான் கொண்டு சென்ற அத்தனை சொத்துக்களையும் அவ்வடியார்களுக்கே கொடுத்து விடுகிறார்.

மணிவாசகரின் இச்செயல் கண்டு மன்னன் கோபமுற்றான். முதன்மை மந்திரியான மணிவாசகரை சிறையில் அடைத்தான்.

தன் அடியவன் சிறையில் அடைபட்டுக் கிடப்பது கண்டு பொறுக்க முடியாத சிவப்பரம்பொருள் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்துகிறார்.

அதன்பின் நடந்தது என்ன என்பது நீங்கள் அறிந்ததே. இவை ஒருபுறமிருக்க,

இந்த நாட்டின் தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியின் நிதி மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவரின் குற்றம் சாதாரணமானதல்ல. எனினும் குற்றத்தை வேரறுக்க இன்னொருவரை பிரதமராக ஆக்குகிறார்.

ஐயா! பிழையைச் சரியாகத் திருத்துதல் என்றால் நீங்கள் பிழையைப் பிழையாகத் திருத்துகிறீர்களே ஏனென்று கேட்டால்,

வேறு வழி எதுவுமில்லை. பிழையை பிழையால் திருத்துவதும் ஒரு வழி என்ற புதிய தத்துவத்தைச் சொல்கிறார் ஜனாதிபதி மைத்திரி.

சரி, அந்த முதன்மை மந்திரி (மாணிக்கவாசகர்) அரச நிதியை சிவனடியார் கூட்டத்திற்கு கொடுத்ததால் அவரை சிறையில் அடைக்கின்றான் மன்னன். இந்தத் தலைமை மந்திரி மத்திய வங்கியின் நிதி மோசடி முறைகேட்டில் தொடர்புபட்டிருந்தால் விளக்கம், விசாரணை நடத்தி சிறையில் அடைப்பதுதானே ஒழுங்கு என்றால், இல்லை எனக்கிருக்கின்ற அதிகாரத்தை அவர் இம்மியும் மதிக்கவில்லை. ஆகையால் அவருக்குப் பாடம் புகட்ட நினைத்தேன் என்கிறார்.

அட, மாணிக்கவாசகரை மன்னன் சிறையில் அடைக்க, அதனால் சினம் கொண்ட சிவப்பரம்பொருள் வைகை நதி பெருக்கெடுக்க வைத்து அந்த நாட்டு மக்களுக்கு அவலத்தை ஏற்படுத்துகிறார்.

முதன்மை மந்திரி மாணிக்க வாசகர் செய்தது ராஜ குற்றம். எனவே அவரை மன்னன் சிறையில் அடைத்தான்.

சரி, மாணிக்கவாசகரைக் காப்பாற்ற நரிகளைப் பரிகளாக்கிய அந்தச் சொக்கநாதப் பெருமான் கோவேறு கழுதைகளையாவது குதிரைகள் என்று கூறி மன்னன் மனையில் விட்டிருக்கலாமல்லவா! அதனையும் செய்யாமல், நரியைப் பரியாக்கி பின்னர் பரியை நரியாக்கி போதாக்குறைக்கு ஊளையிடச் செய்து... அட இவை ஏன்தான் என்று கேட்டால் இங்கும் அதுதான் நடக்கிறது.

மகிந்த ராஜபக்ஷவை தன் பரம எதிரியாகக்கூறிய மைத்திரிபால சிறிசேன ஊழல் செய்தவர்களுக்கு என் ஆட்சியில் இடமில்லை என்றார்.

பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன் ஆட்சியுடன் இணங்கிப் போகாத காரணத்தால் கருத்து முரண்பட்டு நிலைமை முற்றிப் போக யாருமே எதிர்பாராத வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவியை இரத்துச் செய்தார்.

சரி பரவாயில்லை. ஜனாதிபதிக்கு இருக்கின்ற அதிகாரத்தில் அப்படி நடக்கிறது என்றால், அதனையும் கடந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குகிறார்.

பரமவைரியாக இருந்த மகிந்தவைப் பிரதமராக்குகின்ற அளவில் ரணில் விக்கிரமசிங்க மைத்திரிபால சிறிசேனவுக்கு கேடு செய்துவிட்டாரா? என்றால்,

அதற்கான விடையைக் காணுதல் என்பதற்கு அப்பால், ஜனாதிபதி பதவியை இழந்த பின்பான தனது பாதுகாப்புப் பற்றி சிந்தித்ததன் அடிப்படையிலேயே ஜனாதிபதி மைத்திரி மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கினார் என்று கூறுவதே பொருத்தமுடையதாகும்.

ஆக, மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கிய ஜனாதிபதி மைத்திரி தனது எதிர்பார்ப்புக்குப் பாராளுமன்றம் இடம்தராது என்ற கட்டத்தில் பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அறிவிப்பைச் செய்கின்றார்.

பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிக்கு இருக்கின்றதா என்றால் 19 ஆவது திருத்தச் சட்டம் அந்த அதிகாரத்தை இரத்துச் செய்து விட்டது என்கின்றனர் சட்டவாளர்கள்.

அப்படியானால், ஜனாதிபதி மைத்திரி பாராளுமன்றத்தை எங்ஙனம் கலைக்க முடியும் என்ற கேள்வி எழும்.

இந்தக் கேள்விக்குத் தீர்ப்புக் கூறவேண்டிய பொறுப்பை நீதிபரிபாலனமே கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தைக் கலைத்தது தவறு என ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக நீதிமன்றம் செல்ல வேண்டியவர்கள் அமைதியாக இருந்தாலும் குறித்த விடயத்தை தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லவுள்ளது.

இங்கு ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தது சரியா பிழையா என்ற தீர்ப்பை நோக்கியல்லாமல் பொதுத்தேர்தலை நடத்தலாமா என்ற கேள்விக்கு விடைதேடவே மேற்போந்த விடயம் நீதிமன்றத்திற்குச் செல்லவுள்ளது.

தற்போது இருக்கின்ற அரசியல் சூழ்நிலையில் பொதுத்தேர்தலை நடத்துவதுதான் ஒரே வழி என்ற யதார்த்தத்தை உணர்ந்து கொண்டு பொதுத்தேர்தலை நடத்துவதற்கான அங்கீகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவிற்கு நீதிமன்றம் வழங்குவது தவிர்க்கமுடியாததாக இருக்கும்.



ஆக, இதன் வழி பாராளுமன்றத்தைக் கலைத்தது செல்லுபடியாகுவதாக இருக்கும்.

இதை நாம் கூறுவது இத்தனை குழப்பங்கள் நடப்பதற்குக் காரணம் என்ன என்று ஆன்மீக அடிப்படையில் ஆராய்ந்தால், அங்கும் இங்கும் சிறையில் வாடுகின்ற நிலைகண்டு இறைவன் கோபம் கொண்டதன் விளைவு என்று கூறுவதே ஏற்புடையதாகும்.


ஆம், அங்கு முதன்மை மந்திரி சிறையில் இருந்தார். இங்கு தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடுகின்றனர்.

ஒட்டுமொத்தத்தில் அங்கும் இங்கும் சிறையில் வாடுவதே ஆட்சிக்கும் நாட்டுக்கும் பாதகமாக அமைகிறது என்பதைப் புரிதல் நன்று.

**திருநீலகண்டன்**




# கலியுக கர்ணன்



மாணிக்கம், கேசவன் இருவரும் அடுத்தடுத்த வீட்டுக்காரர்கள். நல்ல வசதி படைத்தவர்கள். இருவரும் நண்பர்கள். ஆனால், குணத்தில் இருவரும் நேர்மாறானவர்கள்.

கேசவன் யாருக்காவது ஒரு சிறு கஷ்டம் என்றாலும் உதவி செய்வதற்கு முன்னால் நிற்பான். ஊரில் அவனை அனைவரும், "கலியுக கர்ணன்" என்று புகழ்வர்.

மாணிக்கம், அவனுக்கு நேர் எதிராக இருந்தான். அவனை அனைவரும், "சுய நலக்காரன்" என்று ஏசினர்.

மாணிக்கம், கேசவன் அடுத்தடுத்த காட்டை விலைக்கு வாங்கினர்.

கேசவன் தன் காட்டை அழித்து, கனிமரங்களை உருவாக்கினான். கிணறு வெட்டி அவற்றிற்கு நீர் பாய்ச்சினான். சில ஆண்டுகளுக்குப்பின் அந்த மரங்கள் கனிகளை வாரி வழங்கின.

மாணிக்கம் தன் நண்பனைப் போல் காட்டை அழிக்காமல், மரங்களை நடாமல், அப்படியே விட்டு விட்டான். அதனால், அவனுடைய காட்டில் முள் புதர்கள் சேர்ந்து விட்டன. கேசவன் தன்னுடைய பழத்தோட்டத்திற்குப் போக வேண்டுமென்றால் மாணிக்கத்தின் காட்டு வழியாகத் தான் போக வேண்டும்.

ஒருநாள், கேசவன் மாணிக்கத்தின் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்த போது, அவன் காலில் நாலைந்து முட்கள், "நறுக் நறுக்" என்று குத்தி இரத்தம் கொட்டியது.

அதன் காரணமாக கோபம் கொண்ட கேசவன் மாணிக்கத்தைப் பார்த்துத் திட்டினான். அதனால், இருவருக்கும் சண்டை உண்டாகி நட்பு முறிந்தது. அதனால் அவர்கள் அன்று முதல் பேசிக் கொள்வதேயில்லை.

நாட்கள் சென்றன. ஒரு நாள் கேசவன் தன் தோட்டத்தில் விளைந்த பழங்களை எல்லாம் பறித்து, ஊரிலுள்ள அனைவருக்கும் இலவசமாக வழங்கினான். மகிழ்ச்சி கொண்ட ஊர் மக்கள் அனைவரும் அவனை வாழ்த்தினர்.

இப்படியே ஊரிலுள்ளவர்கள் வாழ்த்த வாழ்த்த கேசவனுக்குப் புகழ்வெறி பிடிக்கத் தொடங்கியது. கேசவன் ஊரையே அழைத்து ஆயிரக் கணக்கில் செலவு செய்தான். மக்களுக்குத் தேவையானதை வாரி, வாரி இறைத்தான்.

மக்களும் அவன் வீட்டு வாசலில் குவிந்தனர். கேசவனும் புகழ் வெறியில், மக்களுக்குத் தேவையானதை பூர்த்தி செய்து வந்தான்.

அந்தச் சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த மாணிக்கம் கூட்டத்தினரை நோக்கி, "ஊர் மக்களே! நீங்கள் யாருடைய பணத்தில் ஆட்டம் போடுகிறீர்கள் தெரியுமா?" என்று கேட்டான். எல்லாரும் விழித்தனர்.

"இது என்னுடைய பணம்". கேசவன் தந்தை தன்னுடைய நிலங்களை எல்லாம், என் தந்தையிடம் விற்று பணம் வாங்கியிருந்தார். ஆனால், நட்பு காரணத்தால், கேசவன் தந்தையின் நிலத்தை சொந்தமாக்கிக் கொள்ளாமல் விட்டு விட்டார்.

என் தந்தை இறந்து போன பிறகு இந்த விடயம் இதுவரை எனக்குத் தெரியவில்லை. இன்று நான் என் தந்தையின் பழைய பெட்டியை குடைந்த போது அதில் கேசவன் தந்தை என் தந்தைக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தைக் கண்டு எடுத்தேன்.

"அதனால்... இன்றுமுதல் கேசவனுடைய சொத்துக்களுக்கெல்லாம் நானே சட்டப் பூர்வமான சொந்தக்காரன். இதுவரை அவன் ஊருக்கெல்லாம் வாரி வழங்கினான். இனிமேல் நான் அதற்குச் சம்மதிக்க மாட்டேன்.எல்லாரும் வீட்டிற்குப் போங்கள்." என்று சொன்னான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கேசவனுக்கு தலைசுற்றியது. மயக்கம் வருவது போலிருந்தது. குழம்பிப் போய்க்கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்தான்.

மாணிக்கம் பேச்சைக் கேட்ட ஊர் மக்கள் அனைவரும் வெளியேறிக் கொண்டிருந்தனர். மக்களை நோக்கி, "போகாதீர்கள் போகாதீர்கள்!" என்று கத்தினான் கேசவன். அதற்கு அவர்கள்...

"போய்யா! போ. இனியும் உன் பேச்சைக் கேட்பதற்கு நாங்கள் ஒன்றும் மடையர்கள் இல்லை. இனி நீயும் எங்களைப் போல் ஒரு ஏழைதான்" என்று கூறிவிட்டு, "வாருங்கள் போகலாம்!" என்று ஒருவன் கையசைக்க அனைவரும் அவனைத் தொடர்ந்து சென்றனர்.

அனைவரும் சென்றவுடன் தன்னந்தனியாக கவலையோடு ஒன்றும் புரியாமல் நின்றிருந்த கேசவன் தோளில் தட்டிய மாணிக்கம், "வா உள்ளே போகலாம்" என்றான்.

கேசவன் எதிலும் விருப்பமின்றி வெறுப்புடன் அவனுடன் சென்றான்.

வீட்டிற்குள் நுழைந்ததும் மாணிக்கம் வயிறு வலிக்கச் சிரித்தான்.

ஒன்றும் புரியாதவனாய் கேசவன் விழிக்க, மாணிக்கம் கேசவனை நோக்கி, "அதிர்ந்து விட்டாயா? உன் தந்தை என் தந்தையிடம் நிலங்களை விற்கவும் இல்லை. என் தந்தை வாங்கவும் இல்லை" பிறகு நான் ஏன் பொய் சொன்னேன் என்று பார்க்கிறாயா?


நீ இரக்கம் காரணமாக மக்களுக்கு கண்மூடித்தனமாக வாரி இறைத்தாய். உன்னைப் புகழின் உச்சியில் வைத்து மதுவை விட அதிகமான போதையை உண்டாக்கி உன்னால் இலாபம் அடைந்து வந்தனர் மக்கள். "அவர்களை அடையாளம் காட்டவே, இனி உன் சொத்துக்கெல்லாம் நானே சொந்தக்காரன் என்று சொன்னேன். இதைக் கேட்டு நீ ஒன்றுமில்லாதவன் என்று தெரிந்த ஊர் மக்கள் நீர் இல்லாத குளத்தை விட்டு காக்கைகள் பறந்து செல்வதைப் போல் உன்னை விட்டு ஓடிவிட்டனர். இந்த நன்றி கெட்டவர்களிடம் இனி நீ இப்படி நடக்க வேண்டாம்?" என்றான் மாணிக்கம்.

"நண்பா! என்னை வஞ்சித்து வாழ்ந்தவர்களை உன்னால் அடையாளம் கண்டு கொண்டேன். இனி ஆற்றில் போட்டாலும் அளந்துதான் போடுவேன். புகழ் போதையில் மூழ்க இருந்த என்னை கைகொடுத்து தக்க சமயத்தில் காப்பாற்றி விட்டாய். உனக்கு நான் எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை" என்று நா தழுதழுக்க கூறினான் கேசவன்.

**நீதி: இரக்கம் காட்டலாம். ஆனால், ஏமாளியாகி விடக் கூடாது.**



சி.ஜீவன்குமார்
தரம் 5, விக்னேஸ்வரா வித்தியாலயம்,
SOS சிறுவர் கிராமம், நாயன்மார்கட்டு.



கண்டுபிடியுங்கள்...




## தமிழ் மக்கள் பிரச்சினையில் சர்வதேசம் தலையிடுமா?

## ஈழத் தமிழருக்கு அறிவுரை கூற சுப்பிர மணிய சுவாமிக்கு என்ன தகுதி இருக்கு?

## பாராளுமன்றக் கலைப்பு யாருக்கு சாதகம்?

**சியா — யாழ்ப்பாணம்**

எதிரியைப் பார்த்துப் பயப்பிடுவது சரியா?

ஒரு சிறுவனை தினமும் வீதியில் ஒரு நாய் துரத்துகிறது. அவன் வீட்டில் இருந்து புறப் படும் போதே அந்த நாய் துரத்தினால் ஓடு வதற்கு தன்னைத் தயார்படுத்தி விடுவான். ஒருநாள் அவன் வரும் போது ஒரு சிறிய மாட்டுக் கன்றை அந்த நாய் துரத்த முற் பட்டது.

சிறிய மாட்டுக் கன்று ஓடவில்லை. நாயை எதிர்த்து நின்றது. நாய் பணிந்து பேசாமல் படுத்து விட்டது. அந்த மாட்டுக்கன்று சிறு வனுக்கு எதிரியை எதிர்த்து நிற்கும் பாடத் தைக் கற்றுக் கொடுத்தது.

சிறுவன் நாயை எதிர்த்து நின்றான். இப்போது அந்த வீதியால் ராஜ நடை நடக்கிறான். அந்த நாய் வீதி ஓரமாக வாலைச் சுருட்டியபடி படுத் திருக்கிறது. ஒரு முறையேனும் எதிர். உன் வீரம் எதிரிக்குப் புரியும்.

**பாலா — கரவெட்டி**

ஆற்றைக் கடக்கும் வரை தான் அண்ணன் தம்பி. இக்கூற்று தற்போதைய அரசியலுக் குப் பொருந்துமா?

என்னத்தைக் கேட்டாலும் ஓகே ஓகே என்று கையை உயர்த்திய கூட்டமைப்பை விட இது யாருக்கையா பொருந்தி விடும்.

**சயன் — யாழ்ப்பாணம்**

பாராளுமன்றக் கலைப்பு யாருக்கு சாதகம்?

அடுத்த முறை சீட் கன்போம் இல்லை என்ற சிலருக்கு அடி வயிற்றில் புளி கரைச்சபோல இருக்கும்.

ரணிலுக்குத்தான் எமது சப்போட் ரணில் தான் வெல்வார் என்று ஒரு சாரார். மகிந்த அணி உச்சம் பெற்று விட்டது. பிரதமர் மகிந்தவே வெல்வார் என்று இன்னொரு சாரார்.

மகிந்தவும் தோற்றுவிட்டார், ரணிலும் தோற்று விட்டார். பாராளுமன்றத்தைக் கலைத்து தனது பலத்தைக் கூட்டி வென்று விட்டார் மைத்திரி.

ஏமாளியானது என்னவோ மக்கள் தான்.

**பரமேஸ் — வதிரி**

ஈழத் தமிழருக்கு அறிவுரை கூற சுப்பிர மணிய சுவாமிக்கு என்ன தகுதி இருக்கு?

இதை நீங்கள் கேட்கும் போது "எனக்கு நண்பனாய் இருக்கத் தகுதி தேவையில்லை. எதிரியாய் இருக்க தகுதி தேவை" என அஜித் கூறியதுதான் நினைவுக்கு வருகின்றது.

### அன்பில் ஜீவனிருக்கு...

ஒரு இளைஞர் தினமும் ஒரு பாட்டியிடம் ஒரேஞ் பழங்களை வாங்குவார். பழங்களை எடை போட்டு வாங்கி பணம் செலுத்திய பின் அந்த பழங்களில் இருந்து ஒன்றை எடுத்து பிய்த்து வாயில் போட்டு விட்டு, இந்த பழம் மிகவும் புளிப்பாக உள்ளது என்று அந்த பாட்டியிடம் கொடுத்து சாப்பிட சொல்லி புகார் செய்வார்.

உடனே பாட்டி ஒரு சுளையை வாயில் போட்டு விட்டு, இல்லையேப்பா, நல்லா தானே இருக்கு" என்பார்.

உடனே அந்த இளைஞர் எதுவும் பேசாமல் மீதி பழங்களை எடுத்துக் கொண்டு செல்வார். இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அவர் மனைவி அவரிடம், ஏங்க.. பழங்கள் நல்லா இனிப்பாக தானே உள்ளது, ஏன் தினமும் இப்படி நல்லா இல்லைனு சொல்லுகிறீர்கள்" என்று கேட்பார்.

உடனே அந்த இளைஞர் சிரித்துக்கொண்டு மனைவியிடம், அந்த பாட்டி நல்ல இனிப்பான பழங்களை தான் விற்கிறார். ஆனாலும் தனக்கென்று ஒரு பழத்தைக் கூட சாப்பிடமாட்டார். நான் இப்படி குறை கூறி கொடுப்பதால் தினம் அவர் காசு இழப்பின்றி ஒரு பழத்தை சாப்பிடுகிறார் என்றார்.

தினமும் நடக்கும் இந்த நாடகத்தை அருகில் இருந்த காய்கறி வியாபாரி கவனித்து விட்டு, அந்த பாட்டியிடம், அந்த ஆள் தினமும் உன் பழங்களை குறை கூறுகிறான். இருந்தும் நீ ஏன் அவனுக்கு எடை அதிகமாக போட்டு பழங்களை கொடுக்கிறாய் எனக் கேட்டார்.

உடனே அந்த பாட்டி புன்னகைத்துவிட்டு, அவன் என்னை தினமும் ஒரு பழத்தை சாப்பிட வைப்பதற் காக இப்படி குறை கூறுவது போல கூறி கொடுத்து சாப்பிட வைக்கிறான், இது எனக்கு தெரியாது என்று நினைக்கிறான்.

நான் எடை அதிகமாக பழங்களை போடுவ தில்லை அதற்கு மாறாக அவனது அன்பில் எனது தராசு கொஞ்சம் சரிந்துவிடுகிறது என்றார் அன்போடு.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532, 076 636 3378 என்ற Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**சுதன் — குப்பிளான்**

பேஸ்புக் முழுவதையும் வடிவேலு ஆக்கிர மித்திருக்கிறாரே. அவருக்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம் தானே?

வடிவேலுவைப் பார்த்து ஒருவர் கேட்டாராம் அண்ணே பேஸ்புக்கில இருக்கிறீர்களா என்று. அதற்கு வடிவேலு சொன்னாராம் போடா பேஸ்புக்கே என்னை நம்பித்தான் இருக்கு என்று.

**சுதன் — குப்பிளான்**

அடுத்த தீபாவளிக்குள்ள பிரச்சினையை தீருங்கள் என சம்பந்தன் ஐயா கெஞ்ச வேண்டிய தேவை ஏதும் இருக்கா?

இதே கெஞ்சலை ஐயா சர்வதேசத்திடம் கெஞ்சி இருந்தால் என்றைக்கோ எமது பிரச்சினை தீர்ந்திருக்கும்.

நல்லாட்சி நல்லாட்சி என்று ஐ.நாவில் அவகாசம் கொடுக்கும் போது இதை யோசித்திருக்க வேண்டும். இப்போது ஆட்சியாளர்களைக் கெஞ்சி என்ன பயன். எல்லாம் முடிந்த செயல்.

**நேதாஜி — வதிரி**

வியாழேந்திரனை துரோகி என்கிறார்களே?

தமிழ் மக்களை கொன்றொழித்தது மகிந்த ஆட்சி. அவர் பக்கம் சார்ந்ததால் வியாழேந் திரன் துரோகி என்றார்கள்.

ரணில் அரசு தமிழ் மக்களுக்கு என்னத்தைச் செய்தது என்ற கேள்வி எழும். அதன் பின்பும் ஏன் ரணில் பின்பு எமது தலைமை நிற்க வேண்டும் என்ற அடுத்த கேள்வி வரும். இப்போது முடிபு உங்கள் கையில். யார் துரோகி என்பதை நீங்களே முடிபு செய்யுங்கள்.

**ஜீவா — கரவெட்டி**

தமிழ் மக்கள் பிரச்சினையில் சர்வதேசம் தலையிடுமா?

போற போக்கைப் பார்த்தால் சர்வதேசத்தின் பிரச்சினையில் இலங்கை தலையிடும் போல இருக்கிறதே.

**உசைன் — யாழ்ப்பாணம்**

சின்ன வயதில் காதலித்தவர்களுக்கு நீங் கள் கூறும் பதில்?

96 படம் பாருங்கள் புரியும். திருமணம் ஆன கணவன்-மனைவி இணைந்து பார்ப்பதைத் தவிர்த்தால் நல்லது. இருவரில் ஒருவர் அழுது குடும்பம் குலைந்தால் கம்பனி பொறுப்பாகாது.

**மயூரதன் — இணுவில்**

நட்பு குறித்து உங்கள் கருத்து என்ன?


நட்பு என்பது தாயின் கருவறை போன்றது. அதை பார்க்காதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

**பிரசாந்த் — நெல்லியடி**

வியாசரே (P) எழுத்தில் தொடங்கும் பெயர் உள்ள பெண்கள் துரோகிகளாகவே இருக் கிறார்களே?

டேய் இது என்னடா புதுசா இருக்கு? என் பொன் டாட்டி பெயரும் அதில தான்டா தொடங்குது. புளியைக் கரைக்காதடா பிளீஸ்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**



## கண்ணீர் மழை

அன்று
இன்றைய மழைகாலத்தில்
கொட்டும் மழையில்
முள்ளிவாய்க்காலில்
முகவரி இல்லாது போன என்னுயிரே
மழையும் ஓய்ந்தது
மாரியும் போனது – ஆனால்
என் கண்ணீர் மழை
இன்னும் ஓயவில்லை.

க.செல்வமலர், இடைக்காடு

## கரியமிலவாயுக்கள்

பார்த்து பார்த்து ஏற்றிச்சென்றது
புஷ்பக விமானம்
பிரசங்கிகள் உலகப் பிரகாசம்
சந்திரமண்டல ஆசனம்
விஞ்ஞானத்தின் துரோகம்
கூட்டுச் சேர்ந்த கலவைகள்
கரியமிலவாயுக்கள்
சிதைக்கப்பட்டது புஷ்பக விமானம்
இப்போது
"கோடி" புண்ணியம் வேண்டி
குரைக்கின்றன
சண்டப் பிரசண்டங்கள்
இன்னும் எம்மை
கடித்துக் குதறுகின்றன ஓநாய்கள்
மூடி மறைக்கின்றன
கரியமிலவாயுக்கள்

கனகசபாபதி செல்வநேசன், அல்வாய்

## என் சுவாசம்

உனக்கெனவே வாழ்கின்றேன்
உன் சுவாசத்தில் உறைந்ததால்
உன் பார்வையில் விழுந்து
உயிருடன் சாகின்றேன்
காதல் தந்த சாபமோ
காணாமல் போய்விட்டாய்
இறுதிவரை வாழ்ந்திடுவேன்
சோகம் கூட சுகமானது
வரமாக நீ தந்ததால்
நீ மறுத்தாலும் மறந்தாலும்
என் துணை
உன் காதல் மட்டுமே!
வலி உண்டு சிறு கோபம்கூட
இல்லை உன்மேல்
ஆறாத காயங்கள் யாவும்
என் வாழ்வின் பாடங்கள் தான்
எப்போதும் என் காதல்
ஊமை தான்...

சிவாஷா, மல்லாகம்

## மீண்டும் மீண்டும்

அது உடைந்து
சிதறிக் கிடக்கிறது

மக்கள் நினைவுகள்
சிவப்பாகிப் போனது

உடைந்ததை ஒட்டவைக்க
திசை ஒரு பக்கமாய்
திணிப்பு நம் நகர்வுக்காக

பொழுது போர்த்த
கறுப்பில்
ஊதிய பண்ண
ஏணி வைப்பதில்
அக்கறையாய்
இடை நடுவில்

உண்மை ஓய்வில்
விழித்திருக்கிறது ஏமாற்றம்
மீண்டும் எங்களுடன்
கைகோர்த்துக்கொள்ள

தேன்நிலா நல்லூர்

## கவிதைக்கலசம்

அரசியல்வாதிகள்
அளித்த வாக்குகளை
அளிக்காத
வாக்குறுதிகளால்
அள்ளி வீசுபவர்கள்

கண்ணீர் அஞ்சலி
கண்ணீருடன் வாழ்ந்த போது
கஞ்சியே வார்க்காதவர்கள்
போடும் போலி வேஷங்கள்

மனிதாபிமானம்
ஆண்டவனுக்கோ
பாலாபிசேஷகம்
ஆண்டியோ
அரைவயிற்றுக்காக
ஆலயவாசலில் ......

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்

## நம் தலைவன்

சாட்டை எடுடா- தம்பி
சாட்டை எடுடா
நல்லவரை விட்டுவிட்டு
கெட்டவரை கொட்டி கொட்டி
நார் நாராய் கிழித்துவிடடா
தம்பி கிழித்து விடடா

பூட்டை எடுடா- தம்பி
பூட்டை எடுடா
புலம்புவர் வாய்க்கெல்லாம்
போட்டுவிடடா
தம்பி போட்டுவிடடா

கூட்ட விடுடா- தம்பி
கூட்டி விடுடா
கூடாத கூட்டங்களைத் தவிர்த்து
விலைபோகா கூட்டத்தை
கழட்டி விடுடா தம்பி
கழட்டி விடுடா

மோதி விடுடா- தம்பி
மோதி விடுடா
மண்களுடன் மோதாமல்
மலையுடனே நீ
மோதி விடுடா- தம்பி
மோதி விடுடா

எடுத்தெறியடா- தம்பி
எடுத்தெறியடா
ஈனப்பிறவிகளை நீ
எடுத்தெறியடா- தம்பி
எடுத்தெறியடா

ஏற்றி வையடா- தம்பி
ஏற்றி வையடா
நல்லவரைக் கதிரையிலே
ஏற்றிவிடுடா- தம்பி
ஏற்றி விடுடா

மாவை. நா. கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 421



## சோரம் போதல்

காசு பணம் துட்டு
மணி மணி
என்று கண்றாவிக்
காசு சேர்த்து
சோரம் போகும்
வாதிகளே நீர் நாயிலும்
கேவலமானவரே

சண்முகம்
கல்வியங்காடு

# இவ்வார மௌனத்தின் தேடல் -421



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## நீதிப்பாதை நிலைப்பவரோ

கையும் மெய்யுமாய் பிடிபட
கையில் விலங்கு காய்பிடும்
பையும் நிறைந்த போதிலும்
பாதி மானம் பறக்குமே......

பஞ்சிப்படாமல் புரட்டிற
பாவப்பட்ட பணத்தினால்
கெஞ்சி ஆண்டவன் பதியிலே
கேட்டு அபிசேகம் செய்வரோ......

வை.க.தவமணிதாசன்,
கொக்குவில்.

## தன்மானம்

பஞ்சமும் பசியும்
கொஞ்சமுமெங்கும்
குறையாது தொடர
இலஞ்சமும் காரணம்
காலதாமதமின்றி
காரியம் கை கூட
இதனால் பாதிப்புறுவது
சாதாரண மக்கள் தான்
சன்மானமென்றும்
பெயர் சூட்டினாலும்
பின் விரும்பினாலும்
திரும்பவும் வராதது
தன்மானம் தான்

சி.நாகராசா, நுணாவில்

## பணமும் கடனும்

பணம் பணக்காரர்களிடையே
வெள்ளமாய் பாய்கிறது
கள்ளமாய் வங்கியில் மறைப்பு!
பணம் ஏழைகளிடையே
சொட்டுச் சொட்டாக விழுகிறது.
பட்ட கடன் தீர்க்க முடியாமல்
பட்ட வேதனையுடன் விவசாயிகள்
தூக்கு கயிற்றில் தொங்கி விட்டனர்
தற்கொலையைத் தவிர
வேறு வழி இல்லை என!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## இலஞ்சம்

சில பாடசாலைகளில்
இன்று படிக்கும்
கல்விக்கு மறைவில் இலஞ்சமாய்
பணம் கை மாறுகிறது
இன்னும் சிறிது காலத்தில்
குடிக்கும் தாய்ப் பாலுக்கும்
மனிதன் இலஞ்சமாய்
பணம் கேட்டாலும்
நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

## இலஞ்சமா ஆபத்து

பணம் பாதாளம் மட்டும்
பாயும் என்பதற்கமைய
பட்டி,தொட்டி,பெரிய நிர்வாகம்,
பாமர மக்கள் என்றல்லாது எங்குமே
வியாபித்து ஆக்கிரமிக்கின்றது
கை லஞ்சம் மேசையின்
கீழாக மாறப்படும்
பண லஞ்சம் அகப்பட்டால் ஆபத்துடன்
அவமானம் பதவியே பறிபோகும்
கம்பி எண்ணிடுவாய் கேவலம்
திருத்திக் கொள்
இல்லையேல் திருத்தப்படுவாய்

ஆ.ஸ்ரீ இவபாலினி, சங்கானை

## ஊழல்

தன் பணத்தை சேகரித்து
பிறர் பணத்தில்
உறவாடும் அதிகாரியே
எங்களது வரிப்பணத்தில்
குளிர் காயும் அரசாங்கமும்
வியர்வை சிந்தி உழைக்க
முடியாத அரசாங்கமும்
நேர்மை என்பதே
இப்போது செத்துவிட்டது
கைக்கு கீழாய் வாங்கும்
லஞ்சம் எமக்கு தெரியாது
என்று நினைக்க வேண்டாம்

பா. கலாதேவி
சண்டிலிப்பாய் மேற்கு

## வியர்வையின் மகிமை

உழைத்து வாழாமல்
உண்மைக்கு மாறாக
பணம் சேர்க்கும்
மானிடா
வியர்வையின் மகிமை
உனக்குப் புரியாது
கேட்டுப் பார்
முத்தான
வியர்வையின்
இரகசியம் சொல்வர்
உழைக்காது
சேர்க்கும் பணம்
உன்னில் ஒட்டாது
புரிந்து கொள்

சிவராசா
கல்விளான்

## பிச்சை கேட்கும் பித்தனே

ஏழையின்
அடிவயிற்றில் அடித்து
மேசையின் அடியில்
கை நீட்டி
பிச்சை கேட்கும் பித்தனே
கொழுந்தொடிக்கும்
ஏழையில்
ஒட்டியிருந்து
உதிரம் உறிஞ்சும்
அட்டைக்கும்
உனக்கும்
என்ன வித்தியாசம்
மூடனே
எம் முன்னோர்கள்
வழி செல் உழைப்பை
உறுதி செய்

சுரேஷ், மானிப்பாய்

# அரசியல் பிழைத்தோர்க்கு...

"பொங்கியெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர் திங்கண் முகிலொடு..." கண்ணகி வழக்குரை காதையை மிகவும் சத்தமாகப் படிப்பித்துக்கொண்டிருந்தேன். நூற்று நாற்பது மாணவர்களினதும் மனங்களில் கோவலனையும் கண்ணகியையும் நிலை நிறுத்திப் பாடுபட்டுக் கொண்டிருந்தேன். எங்கும் அமைதி. "காய்கதிர் செல்வனே கள்வனோ என் கணவன்?" இவ்வூரை ஒள்ளெரி உண்ணும். அசரீரியுடன் முடித்து ஒருமுறை சுற்றிப் பார்த்தேன். எல்லோர் முகங்களிலும் கண்ணகியின் சக்தி தமக்கும் கிடைக்காதா? என்ற ஏக்கம் தென்பட்டது.

என்னடா பாவலன் ஒண்டும் பேசாமல் இருக்கிறாய். நீ என்ன கேட்க நினைக்கிறாய் எண்டு விளங்குது. கேள். இல்லை சேர் தற்காலப் பெண்களிடம் இத்தகைய சக்தி இல்லையா? இருந்திருந்தால் இந்த மண்ணிலே அநியாயமாகக் கொல்லப்பட்ட கணவர்மாருக்கு நீதி கேட்டு எரித்திருக்கலாம். கற்பின் வலிமை இலக்கியங்களுக் குள் மட்டும்தானா? சேர். உணர்ச்சி வசமாகப் பேசினான்.

அவன் முகத்தில் யுத்தத்தில் தந்தையை பறிகொடுத்த சோகம் அப்பிக் கிடந்தது. எனக்குத் தெரியும் இந்த மண்ணில் முளைத்த ஒவ் வொரு செடியும் இரத்தத்தால் வளர்ந்தவை. அவனுக்குப் பதில்கூறவேண்டிய தேவையிருந்தது.

இரடா கோபப்படாத. "கற்பெனப்படுவது சொற்திறம்பாமை" எண்டு கலித்தொகை சொல்லியிருக்கு. எங்கடை மண்ணில உள்ள பெண்களின் கற்பு எப்படிப்பட்ட வலிமையானது என்று உலகுக்கே தெரியும். சரி நாளை சந்திப்போம். விடை பெறறேன்.

நான் வீட்டுக்கு வரும்பொழுது யோசனையுடன் வந்தேன். உவன் பாவலனுடைய மனதில ஏதோ இருக்கு. உவனோட ஒருக்கா கதைக்கவேணும். ஏனென்டா நல்ல கெட்டிக்காரன். வகுப்பிலே சரியான விடைய ளிப்பான்.

ஆனால் பரீட்சை வினாக்களுக்கு பூரணமற்ற விடைகள்தான் இருக்கும். நானும் பல தடவைகள் அறிவுரை கூறிவிட்டேன். நாளை பார்க்கலாம். மறுநாள் வகுப்பு ஆரம்பமாகியது. பிள்ளையள் கேள்வி எழுதுங்கோ.

" சிலப்பதிகாரம் துன்பமாலையில்" ஐயையின் மதிநுட்பம், கண்ணகியின் சீற்றம் என்பன புலப்படுமாற்றை விளக்குக. நாற்பது நிமிடம் முடிந்தது. சரி பார்க்கத் தொடங்கினேன். அவனின்ர கொப்பியைத்தான் முதலில் பார்த்தேன். ஏதோ சம்பந்தமில்லாமல் எழுதியிருந்தான். எனக்கு கோபம் உச்சந்தலை வரை ஏறியது.

எழும்படா பாவலன்; எழும்பினான்; என்ன எழுதி வைச்சிருக்கிறாய். நல்லா நியாயம் மட்டும் கதைப்பாய். படிப்பு மட்டும் இல்லை. என்னத்துக்குத்தான் வாறியளோ தெரியாது. சும்மா கொப்பியை எறிந்தேன். சொல்லு கண்ணகியின் சீற்றத்தைப் பற்றி.

அது சேர் பாண்டியனுடைய காவலர் அவனைக் கொலை செய்யக் கருதினார்கள் என்று ஐயை கூறியவுடன் நிப்பாட்டு பாட்டு வரியைச் சொல்லு. மேலே பார்த்தான். சொல்லடா. மௌனமாக நின்றான். படிக்கிறதை மட்டும் செய்யாதை. மற்றது எல்லாம் சரியாவரும் அலம்பல். திட்டினேன். அழுதான். எனக்குச்


சிறுகதை

சுருக்கென்று தைத்தது. உயர்தர வகுப்பு மாணவன் கண் கலங்கி நிற்கிறான் என்றால் அவனுடைய மனத்தாக்கம் எத்தகையது. அதிபர் வகுப்பிற்கு வந்தால் நிலவும் அமைதி நிலவியது. அவ்விடத்தில் நானே மௌனத்தைக் கலைத்தேன்.

பாவலன் உங்கடை அப்பா எப்படி இறந்தவரடா? சேர், அப்பா ஒரு போராளி. யுத்தத்தினால் தான் இறந்தவர். உண்மையில் அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் நான் தலை சாய்க்க வேண்டும்.

ஏனெனில் நாங்கள் வெறும் வாயை மெல்லும் கூட்டம். சரி வீட்டிலை எத்தனை பேர்? மூன்று பேர் சேர். நானும் தம்பியும் அம்மாவும். தங்கச்சி இருந்தவள் போன வருசம் கிணத்துக்குள்ள விழுந்து இறந்திட்டாள்.

அப்ப குடும்பத்துக்கான தேவைகள் எப்படி நிறைவேறுது. அம்மாதான் சேர் பார்க்கிறா. என்ன வேலை செய்யிறா? வேலை செய்யிற அளவுக்கு வலிமை இல்லை. செல்பட்டு கண் ஒன்று தெரியாது. ஒரு கையும் இல்லை. அப்ப என்ன வேலையடா செய்யிறா? பிச்சை (யாசகம்) எடுக்கிறது சேர். அழுத்தி சொன்னான். அவனது சொல் தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் வெட்டிச் சோறு தின்னுவோருக்கும் வீண் வம்பு பேசுவோருக்கும் செருப்பால் அடித்தது போன்று இருந்தது. அவனுக்கு முன்னால் நாமெல்லாம் எம்மாத்திரம். அவன் வெட்கப்படவில்லை. அவ்வாறு சொல்ல ஏன் வெட்கப்படவேண்டும்.

தன்மானம் பேசும் தமிழர்கள் பலரை தலை நிமிர்த்தியவன் அவனது தந்தை. வகுப்பை நிறுத்தி வெளியேறினேன் அவனை மட்டும் அணைத்துக்கொண்டு. எனக்குத் தெரியும் அவன் நிறையப் பேசுவான். இப்போ அவனும் நானும் தனியாக. டேய் அம்மா சொன்ன வேலையைச் சொன்னாய் சரி. ஆனால் உறவினர்கள் ஒருவரும் உதவி செய்ய மாட்டினமேடா? என்ன ? சேர் நீங்கள் எத்தினை தடவை சொல்லியிருப்பியள். " உறவுகள் என்பது ஒருவனிடம் இருக்கும் பணத்தினைப் பொறுத்தது" என்று அப்பிடித்தான் சேர் நாங்களும். எங்களிட்டை பணமும் இல்லை. உறவும் இல்லை. இருந்தாலும் உறவுகள் வீடுகளின் கறிவேப்பிலைகளாகத்தான் நாமிருப்போம்.

அனுபவம் அவனைச் சுட்டுப் போட்டிருந்தது. ஒரு இயந்திரத்தின் ரேகைகள் அவன் முகத்தில் கோடிட்டன. சரி நீ முதல் படி நல்லாப்படிச்சு ஒரு நிலைக்கு வந்தால் நீயே குடும்பத்தைப் பார்ப்பாயடா எனக் கூறினேன். படிக்கேலாதாம் சேர் அம்மானர நிலையைப் பார்க்க. மற்றது ஊரில உள்ள ஆக்களெல்லாம் ஒரு ஏளனப் பார்வை பார்க்கினம். வீடு மழைக்காலத்தில தண்ணீரைத் தடுக்குதில்லை. மூளை ஒரு பக்கமும் வேலை செய்யுதில்லை. அவமானமா இருக்கு சேர். எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவமானப்படவேண்டியவன் அவனா? நானா? நான் என்ற நாங்கள் தான்.

பாவலன் "உலகம் உன்னைத் திரும்பிப் பார்க்கவேண்டுமெண்டா நீ யாரையும் திரும்பிப் பார்க்காதை" எண்டு ஹிட்லர் சொல்லியிருக்கிறார். நான் உனக்கு ஒரு விடயத்தை மட்டும்தான் சொல்லுறன். சொல்லுங்கோ சேர். முதல் நிமிந்திரு. நீ கூனிக்குறுகி . இருக்கிற வம்சம் இல்லை. தமிழரின் தலைவம்சமடா. எங்கெல்லாம் நீ அவமானப் படுத்தப்பட்டு அடக்கப்படுகின்றாயோ அங்கெல்லாம் ஒரு தவிர்க்கமுடியாத சக்தியாக நீ மாறு. முதல்ல பாடசாலை, பிறகு உன்னுடைய ஊர். இந்த தேசம் நீ மாறுகின்றதை நான் பாப்பன், உன்னுடைய உலகம் பாக்கும். நீ ஒரு பெரிய சக்தி. நல்லவன். ஏழ்மை உன்னைத் திசை மாற்றவில்லை. இந்த உலகத்தை மாற்று. " மாற்றம் ஒன்றுதான் நிலையானது" என்று எல்லோருக்கும் உரிய அண்ணன் சொன்னார். இப்போ அவனது முகத்தில் தெளிவு பிறந்தது.

வாழ்க்கை ஓட்டம் நான்கு வருடங்களை உதறி எறிந்தது. ஒக்டோபர் 6 ஆசிரியர் தினம். கடும் மழை காரணமாக அந்தப் பாடசாலைக்கு அருகில் உள்ள கடையில் ஒதுங்கினேன். பாடசாலை பொய் மாலைகளாலும் வண்ண விளக்குகளாலும் அழகு பெற்று விளங்கியது. ஒலிபெருக்கியில் உயர்தர மாணவன் ஒருவன் உரையாற்றுகிறான்.

அடுத்து நாம் அழைப்பது எமது கல்லூரியின் வரலாற்று ஆசிரியரும் சிறந்த பேச்சாளருமான திரு.பாவலன் ஆசிரியர் அவர்களை. உரை தொடங்கியது.

**தேடிச்சோறு நிதம் தின்று பல**
**சின்னஞ்சிறு கதைகள் பேசி மனம்**
**வாடித்துன்பம் மிக உழன்று பிறர் வாடப்**
**பல செயல்கள் செய்து நரை**
**கூடிக் கிழப்பருவம் எய்தி கொடுங்**
**கூற்றுக்கிரை யெனப் பின் மாயும்**
**பல வேடிக்கை மனிதர்களைப் போல்**
**நானும் வீழ்வேனென்று நினைத்தாயோ?**

சிறிய இடைவெளிவிட்டான். கரகோசம் வானைப் புரட்டியது. மழை பெய்வதே எனக்குத் தெரியவில்லை. மகிழ்வுடன் புறப்பட்டேன் இன்னொரு வகுப்பிற்காக.

**ச.இராஜேந்திரகுமார்**
**வயாவிளான்**

# சுட்டும் விழிச்சுடர்...

## சமூக விபரீதங்கள் பற்றிய கண்ணோட்டம் 08

## கருகும் மொட்டுக்கள்

சுமார் 3 மாதங்களுக்கு முன்... 12 வயதுப் பையன் யாழ்.நகரில் அநாதரவாகத் திரிவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அந்தப் பையனை விசாரித்த போது அவன் தான் பெற்றோர்களை இழந்த அநாதை என்றும்.தன் வதிவிடம் வன்னிப் பிரதேசமென்றும் பதிலளித்தான். ஆயினும் அவன் சொன்ன விடயங்களில் முரண்பாடுகளை அவதானித்த பொலிஸார் விசாரணையைத் தீவிரமாக்கினர்.

ஏதாவது பொலிஸ் பிரிவில் யாராவது சிறுவன் காணாமற் போனதாக முறைப்பாடு ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்றும் துப்புத்துலக்கினார்.

அவ்விதமான எந்த முறைப்பாடுகளும் பதிவாகியிருக்கவில்லை. சிறுவனின் நிழற்படத்தை ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பினர்.

அந்த வேளை ஊர்காவற்றுறை



பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேற்படி சிறுவன் தன் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவனென்றும், தன் தாயுடன் வசித்து வந்த அவன் இதற்கு முன்னரும் வீட்டைவிட்டு பல தடவைகள் வெளியேறி மீளவும் தன்னால் வீட்டில் ஒப்படைக்கப்பட்டவன் என்ற செய்தியையும் தெரிவித்தார்.

சிறுவனின் தாய் வரவழைக்கப் பட்டார். அவர் சிறுவன் தொடர்பில் அலட்சியமாகவே நடந்து கொணடார். சிறுவனும் தன் தாயாரின் அக்கறையீனம் காரணமாகவே தான் 12 தடவைகள் வீட்டை விட்டு வெளியேறியதாகவும், இனிமேலும் தாயுடன் செல்ல விரும்பவில்லை என்றான் திட்டவட்டமாக. வேறு மார்க்க மில்லாமையால் அவன் சிறுவர் இல்லமொன்றில் ஒப்படைக்கப்பட்டான்

இந்தச் சம்பவம் 19 ஆம் நூற்றாண்டில் சாள்ஸ் டிக்கன்ஸ் (Charles Dickens ) எழுதிய "ஒலிவர் ரியூஸ்ற் '(Oliver Twist), "டேவிட் கொப்பர்பீல்ட் '( David Copperfield) ஆகிய கதைகளை நம் மனக் கண்முன் கொண்டு வருகிறது.

இதுவொரு நிகழ்வு மட்டுமே இது போன்று பல சிறுவர்கள் இன்று குடும்ப, சமூக அக்கறையீனங்களால் வீதிக்கு வந்துள்ளனர். விதி அவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாகியுள்ளது.

### வீ(வி)தியில் உழலும் சிறுவர் வாழ்வு

யாழ். மாவட்டத்தில் வருடாந்தம் சராசரியாக 400 சிறுவர்கள் குடும்பத்தால் கைவிடப்படுகிறார்கள் அல்லது தாமாகவே பிரிந்து போகிறார்களென புள்ளி விபரங்கள் சுட்டுகின்றன. பருத்தித்தித்துறை மற்றும் யாழ்.பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே சிறுவர்கள் குடும்பங்களிலிருந்து அந்நியமாகும் நிகழ்வுகள் அதிகம் இடம்பெறுகின்றன என்பதையும் புள்ளிவிபரங்களில் அவதானிக்கலாம்.

தற்போது 491 சிறுவர்கள் தாய், தந்தையை அறியாத அநாதைகளாக யாழ்.மாவட்டத்தில் வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இங்கு 1269 சிறுவர்கள் கடந்த கால அனர்த்தங்களில் தாய்,தந்தை இருவரையும் இழந்துள்ளனர். மேலும் 5930 சிறுவர்கள் தந்தையர்களை இழந்த நிலையிலும், 1629 சிறுவர்கள் தாய்மாரை இழந்த நிலையிலும் யாழ்.மாவட்டத்தில் வாழ்கின்றனர்?.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்கள் சுமார் 1500 சிறுவர்களின் புகழிடங்களாகத் தற்போது விளங்குகின்றன.

கடந்த வருடத்தில் சுமார் 160 சிறுவர்கள் கனிஷ்ட மற்றும் மத்திய இடைநிலை வகுப்புக்களிலிருந்து (தரம் 6- 10) இடை விலகியுள்ளதாகவும் தகவல்கள் உறுதி செய்கின்றன. மேலும் க.பொத (சா/த) பரீட்சைக்குப் பின்னரும் பரீட்சைக்குத் தோற்றியோரில் 30 வீதமானோர் கல்வியை கைவிடுகின்றனர். கல்வியை இடைநடுவில் கைவிட்டு இடைவிலகிய சிறுவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகமாகவிருக்கலாம் என்பது சுயாதீன நோக்கர்களின் கருத்து.

இடைவிலகலை விட மாணவரின் வரவொழுங்கீனமே பாடசாலைகளுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளதாக கல்வித்துறையினர் தெரிவிக்கின்றனர். சராசரியாக 15 விகிதமான மாணவர்கள் நாளாந்தம் பாடசாலைகளுக்கு வருகை தருவதில்லை என்பது கவலை தரும் விடயமாகும். இச்சராசரி சில பாடசாலைகளில் 30 விகிதம் வரை உயர்ந்துள்ளது. கல்வியில் நாட்டமின்மை, பெற்றோரின் அக்கறையீனம், வறுமை மற்றும் பருவ கால, பாரம்பரிய தொழில் முனைப்புக்களே மாணவரின் வரவொழுங்கீனத்தின் முக்கிய காரணிகளாகும்.

வரவொழுங்கீனமான மாணவர்களால் கல்விப் பேறுகள் பாதிப்புறுகின்றனவென்றும், பாடசாலை ஒழுங்கு விதிகள் முரணுறுகின்றது என்றும் அதிபர்கள்- ஆசிரியர்கள் ஆதங்கமுறுகின்றனர்.

பாடசாலைகளுக்குச் செல்லாத மாணவரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் மீது அவ்வவ்போது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டாலும் அது அதிக தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

சுமார் 60 சிறுவர் தொழிலாளிகள் கடந்த வருடத்தில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களின் தொழில் கொள்வோருக்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. அதிகமான சிறுவர்கள் பாரம்பரிய தொழில் முயற்சிகள், பட்டறைத் தொழில் மற்றும் சிறு வியாபாரங்களிலேயே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்திலும், இவ்வருடத்திலும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் கணிசமான அளவு பதிவாகியுள்ளன. சரீரத் தண்டனைகள்,இம்சைகள், பாலியல் ரீதியான தொல்லைகள், சிறு வயதினருடன் கூடி வாழ்தல் , உணவு,



உடை, உறையுள் மற்றும் உரிமைகளை மறுத்தல், சிறுவர் உழைப்பை உறிஞ்சுதல் போன்றன யாவும் துஷ்பிரயோகங்களே. கடந்த காலங்களை ஒப்பிடும் போது 2012 இல் அதிக பட்சமாக 146 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனை விட வெளிச்சத்திற்கு வராத சம்பவங்களும் பல இருக்கலாம்.

கடுமையான அங்கவீனம் காரணமாக தம் அசைவிற்காய் பிறரில் தங்கி வாழும் 496 பிள்ளைகளும், மோசமான உளப்பாதிப்பால் வாடும் 204 சிறுவர்களும் எம் கவனத்திற்குரியவர்களே.

இது விதியா அல்லது சதியா என சிந்திப்பதை விடுத்து இவர்களும் வாழ்வில் சாதித்திட வழி சமைப்பதே எம் கடமையாகும்.

### திசை மாறிய பயணங்கள்

இலட்சியங்கள், எதிர்பார்ப்புக்களைத் தொலைத்து வாழும் இச் சிறுவர்களின் இன்றைய நிலைக்கான காரணிகளை இனங்காண்பது எதிர்காலத் திசைமாற்றங்களைத் தவிர்க்க உதவும்.

கடந்த கால யுத்தமும் அதனோடு இணைந்த நெருக்கடிகளுமே முதன்மைக் காரணியாக பல சிறுவர்கள் வாழ்வில் ஒட்டிக் கொண்டுள்ளது. போர் அனர்த்தத்தில் உறவுகளின் இழப்பு, அவயவ இழப்பு, நிரந்த வருமானமார்க்க இழப்பு, தொடர் இடப்பெயர்வுகளால் வாழ்விட இழப்பு என்பன பல சிறுவர்களின் வாழ்வைப் புரட்டிப்போட்டுள்ளது.

போதிய குடும்ப வருமானமின்மையும் மற்றொரு காரணியாகும். பொருத்தமான வேலை வாய்ப்பின்மை, முதன்மை உழைப்பாளியை இழந்திருத்தல் என்பவற்றுடன் சோம்பேறித்தனம், வரவுக்கு மீறிய செலவு, குடிபோதை போன்றவையும் வறுமைக்கு வலுச்சேர்க்கின்றன.

குடும்பப் பிறழ்வுகளும் , பிரிவும் மற்றொரு காரணியாகும். பெற்றோரின் குடும்பத்தகராறுகள், மனச்சிதைவுகள் போன்றன சிறுவர்கள் வாழ்வில் புயலாக வீசுகின்றன.


கற்றலில் நாட்டமின்மையும் சிறுவர் வாழ்வைத் திசை மாற்றும் காரணியாகும். பெற்றோரின் அக்கறையீனம்,சிறுவர்களிடம் உயர் இலட்சியமின்மை, பாடசாலைகள் - சமூகத்தில் பார பட்சத்திற்குள்ளாகுதல் போன்றன கற்றல் ஈடுபாட்டைக் குழப்புகின்றன.

பாரம்பரிய தொழில் வாய்ப்புக்கள் மற்றும் ஏனைய தொழில் ஈடுபாடு என்பனவும் முறைசார் கல்விமுறையிலிருந்து விலக வைக்கின்றன.

கூடா நட்பு மற்றும் பெற்றோரின் கட்டுப்பாட்டை இழத்தல் என்பனவும் தாக்கத்தை மட்டுமன்றி போதைப் பொருள் பாவனை, வன்முறை மற்றும் ஏனைய சீர்கேடுகளுக்கும் இட்டுச் செல்கின்றன.

பாடசாலை நேர்த்தில் மாணவர்கள் சீருடையுடன் வீதிகளில் திரியும் கலாசாரமொன்று அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இது பாடசாலை நிர்வாகத்தின் பலவீனமென பொலிஸார் கருதுகின்றனர்.

இது போன்ற நிலை வடமாகாணத்தின் வேறு மாவட்டங்களில் ஏற்பட்ட போது இவ்வாறு பாடசாலை நேரத்தில் வீதிக்கு வரும் மாணவரை பொலிஸார் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்வதுடன், அது குறித்த தகவலை பாடசாலை அதிபருக்கும், பெற்றோருக்கும் வழங்குவர். அவர்கள் பொலிஸ் நிலையம் சென்று மாணவரை அழைத்துச் செல்வர். இந்நடவடிக்கைக்கு கல்வித் திணைக்களமும் ஒத்துழைப்பு நல்கியது.



## அக்னி

இத்தகைய நடவடிக்கைகள் மாணவருக்கு தர்மசங்கடத்தை கொடுத்ததால் அவர்கள் பாடசாலை நேரத்தில் வெளியே செல்வதைத் தவிர்த்துக் கொண்டனர். நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இவ்வாறான ஒரு நடவடிக்கையை பொலிஸார் யாழ். மாவட்டத்திலும் மேற்கொண்டால் மாணவர்கள் தவறாக வழிநடப்பது கட்டுப்படுத்தப்படும். இளைய சமூகம் சீரழிவிலிருந்து காப்பாற்றப்படும்.

சிறுவர்களின் பிறழ்வுகள் குறிப்பாக சிறுவயதிலேயே கூடி வாழ்தல், பாலியல் ரீதியான பிறழ்வுகள், களவு மற்றும் மோசடிகளில் ஈடுபடல், போதைப் பாவனை போன்றவையும் சிறுவர்கள் வாழ்வு சீரழியக் காரணமாகின்றன. குறிப்பாக தம் வயதிற்கு மீறிய பெரியவர்களுடனான சிநேகிதம் எப்போதும் ஏச்சரிக்கையுடன் நோக்கப்பட வேண்டும்.

இன்று எமது உணவுப் பழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களால் நிரந்தரமான உடல் -உள நோய்த் தாக்கங்களுக்கும் சிறுவர்கள் உட்படும் விகிதம் அதிகரிக்கின்றது. இதுவும் சிறுவர்கள் முறைசார் கல்வி முறைமையிலிருந்து விலக காரணமாகும்.

இவ்வாறு பல காரணிகள் இன்று சிறுவர்கள் வாழ்வைத் தடம் மாற்றுகின்றன.

### மலருமா இவர்கள் வாழ்வு?

யாழ். மாவட்டத்தில் சுமார் 125000 பாடசாலை செல்லும் சிறுவர்களில் சுமார் 14000 பேர் ஆபத்தின் விளிம்பிலுள்ளோர் வகுதிகளுக்குள் உள்ளடங்குகின்றனர்?. இது சுமார் 11 வீதம் ஆகும். எனவே மேற்படி சிறுவர்களின் பிரச்சினைகளை மேலோட்டமாகப் புறந்தள்ள முடியாது.

இன்று சிறுவர்கள் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பிலான விடயங்களைக் கவனிப்பதற்கு பாடசாலைகள், அரச அலுவலங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் பல்வேறு விசேட பிரிவுகளும் ஆளணியினருமுண்டு. ஆயினும் பிரச்சினைகளின் தீவிரம் குறைந்ததாகத் தெரியவில்லை. தாமிருக்குமிடத்திற்கு பிரச்சினைக்குள்ளாகியோர் வரவேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாலேயே இந்நிலையேற்பட்டுள்ளது. மாறாக தேடிச் செல்லும் அணுகுமுறையை இவர்கள் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக கரையோரப் பிரதேசங்கள். மீள்குடியேற்றப் பிரதேசங்கள் ஆகியவற்றிலேயே அதிகளவான பிள்ளைகள் பாடசாலை செல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பிரதேசங்களில் கண்காணிப்பு அவசியம்.

ஆபத்தின் விளிம்பிலிருக்கும் சிறுவர்கள் மற்றும் பெற்றோருக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்கள், உளவள வழிகாட்டல்கள் தீவிரமாக்கப்பட வேண்டும்.

இடைவிலகிய மாணவர்களை மீளவும் பாடசாலைகளில் இணைப்பதென்பது எல்லாச் சந்தர்ப்ப ங்களிலும் பொருத்தப்பாடான விடயமாக அமையாது. மனரீதியாக முறைசார் கல்விக்குள் வரவிரும்பாத மாணவர்களை வலுக்கட்டாயமாக பாடசாலைகளில் சேர்ப்பதைவிட திறந்த பாடசாலைகள், தொழிற் பயிற்சி நிறுவகங்கள் போன்ற முறைசாரா நெறிகளுக்குள் உட்புகுத்துவதே சிறந்தது.

வறுமை, யுத்தப்பாதிப்பு போன்றவற்றால் பாதிப்புற்ற பிள்ளைகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை மேம்படுத்துவதனூடாக பிள்ளைகளின் துயரத்தைக் குறைக்க முடியும்.

பெற்றோரை இழந்த பிள்ளைகளை வசதியுள்ள குடும்பங்கள் தத்தெடுத்துத் தம் குடும்ப உறுப்பினராக உள்வாங்குவதனூடாக அவர்கள் வாழ்வில் வசந்தம் வீச வழி வகுக்கலாம். சிறுவர் இல்லங்களும் SOS நிறுவனம் போன்று குடும்பக்கட்டமைப்பு மிக்க முறைமையை யுருவாக்கி பிள்ளைகள் குடும்ப உணர்வில் இயல்பாக வளர வழி வகுக்கலாம்.

யுத்தத்தால் சிதைந்து சின்னாபின்னமாகிய ஜேர்மனி, ஜப்பான், வியட்நாம், கம்போடியா போன்ற நாடுகள் இத்தகைய அச்சுறுத்தலுக்குள்ளாகிய சிறுவர்களை மேம்பட வைத்த வழிவகைகளை நாமும் கையாளலாம்.



ஆபத்தின் விளிம்பிலிருக்கும் சிறுவர்களைப் பொறுத்தவரையில் சமூக கரிசனையே அதிகம் தேவைப் படுகின்றது. நாளை மலரும் மொட்டுக்கள் இவை கருகிட விடலாமோ.



# இது நம்ம கதைகள்... 24

## மண்வாசனை

இன்று எம்மிடம் சகல விதமான வசதிகளும் குவிந்து கிடக்கின்றன. அதற்கு மேலாக நவீன தொடர்பு சாதனங்களும் மலிந்து கிடக்கின்றன. ஆனால் 1990 இலிருந்து 1996 வரையிலான காலப்பகுதி யாழ். குடாநாடு மக்களுக்கு வாழ்க்கையில் புதுவிதமான நெருக்கடியைக் கொடுத்தது. வன்னிப் பெருநிலப்பரப்பு மக்களுக்கு அத்தகைய நெருக்கடிகள் இன்னும் அதிக காலம் தொடர்ந்தது.உள்நாட்டு யுத்தத்தின் தீவிரம் உணரப்பட்ட அந்தக் காலகட்டத்தில் இறுக்கமான பொருளாதார தடைகளும் நிலவியதே நெருக்கடிக்கான காரணமாகும்.

நெருக்கீடுகளும் நெருக்கடிகளும் தொடர்ந்தாலும் மக்கள் தம் சமயோசித செயற்பாடுகளால் அவற்றை சமாளித்த விதம் இன்னும் வியப்பையே தருகின்றது.

அக்காலத்தில் மின்சாரம் அறவேயில்லை. எரிபொருள் தட்டுப்பாடு கடுமையாகியது. அந்த வேளையில் பெருமளவு மக்கள் தொலைதூரப் பயணங்களுக்குக்கூட துவிச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்தப் பழகிக் கொண்டனர். மண்ணெண்ணெயில் மோட்டார் வாகனங்களை இயக்குவதற்கான தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டது. வடிசாராயம் கூட எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது.வெற்று ஜாம் போத்தல்களில் விளக்குகள் தயாரிக்கப்பட்டன. இவை குறைந்தளவு தேங்காயெண்ணெயில் எரியுமாறு வடிவமைக்கப்பட்டன. கொப்பேகடுவ விளக்குகள் என்று அடைமொழியும் சூட்டப்பட்டன. சவர்க்காரத்திற்குப் பதிலாக பனம் களி, சாம்பல் என உடை கழுவப் பயன்படுத்தப்பட்டன.




கடினமான வாழ்க்கைச் சூழலை எம் மக்கள் இலாவகமாகக் கையாண்டதைக் கண்டு உலகமே வியந்தது.ஆனால் இன்று வசதிகள் பெருகிய பின் கடினமான கால நினைவுகள் மறந்து போயின. சிறிய அசௌகரியத்தைக்கூட தாங்கும் வல்லமை தற்போது நம்மிடமில்லை. கடினமான வாழ்க்கைச் சூழலில் வாழ்வதற்கான எம்மவரின் எத்தணிப்புக்கள்- கண்டுபிடிப்புக்கள் எம்மை "நாசா" (NASA) வின் தரத்திற்கு அழைத்துச் சென்றன. ஆனால் இன்றைய எமது வாழ்வியலோ நாசமாகப் (NASAMAKA)போகிறது என்று முதியவர்கள் முணுமுணுப்பது கேட்கிறது.

அமெரிக்காவின் தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகமே "நாசா" என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. இது 1958 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1915 இல் உருவாகிய தேசிய வானூர்தியியல் ஆலோசனை அமைப்பின் ( NACA) விரிவாக்கமே "நாசா" ஆகும்.

பலவிதமான விண்வெளியோடங்களை வெற்றிகரமாக விண்ணிற்கனுப்பிய நாசாவிற்கு திடீரென ஒரு நெருக்கடி தோன்றியது. அது புதிதாக வடிவமைத்த அதி நவீன விண்வெளியோடம் விண்ணிற்கு ஏவப்படும் தருணத்தில் இயங்க மறுத்தது. பலவிதமான உத்திகளை நிபுணர்கள் மேற்கொண்ட போதும் அது இயங்கவில்லை. இறுதியாக வெளியாட்களின் உதவி கோரப்பட்டது. பல்வேறு நாடுகளின் நிபுணர்களும் முயற்சித்துப் பார்த்தனர். எவராலும் முடியவில்லை.

இறுதியாக நம்ம யாழ்ப்பாணத்து நபர் ஒருவர் முயற்சியில் இறங்கினார். விஞ்ஞானிகளிடம் விண்வெளியோடத்தை 45 பாகையில் வலப்புறம், இடப்புறமென்று மாறி மாறி சரித்து 5 தடவைகள் குலுக்குமாறு பணித்தார். அவர் சொல்வது விஞ்ஞான ரீதியான செயற்பாடு அல்ல என்று விஞ்ஞானிகளுக்குப் புரிந்தாலும், வேறு வழியின்மையால் அவ்வாறு செய்தனர். இப்போது Start பண்ணுங்கள் என்றார் நம்மவர். என்னதோர் ஆச்சரியம் விண்வெளியோடம் இயங்கத் தொடங்கியது.

ஊடகவியலாளர்கள் நம்மவரை சூழ்ந்து கொண்டனர். "பிரபலமான விஞ்ஞானிகளால் கூட முடியாத காரியம் உங்களால் எப்படி சாத்தியமாயிற்று" என்று கேட்டனர். நம்மவர் சொன்னார் "நம்மவூரில் இப்படித் தான் தினமும் என் பழைய மோட்டார் சைக்கிளை ஸ்ராட் பண்ணுறனான் "


**சொர்க்கமேயென்றாலும்- அது நம்மூரைப் போல வருமா.**

**மிருசுவிலூர் எப்.எக்ஸ்.அன்ரன்**

# முடிவில்லாமல் தொடரும் அரசியலமைப்பு முரண்பாடு

ஒரு நாட்டினுடைய அடிப்படைச் சட்டமாகவும் உயர்ந்த சட்டமாகவும் அடையாளப்படுத்தப்படுவது ஒரு நாட்டினுடைய அரசியல் அமைப்பாகும். ஆள்வோர் மற்றும் ஆளப்படுவோர் ஆகிய இரு பகுதியினரையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அரசியல் அமைப்பானது இலங்கையில் இன்று இயக்கப்பாடற்ற ஒரு நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் அரசியல் அமைப்பின் இதயப் பகுதி மீது கடுமையாக சிதைவு ஏற்பட்டிருக்கின்றது. இது அரசியல் அமைப்பை ஒரு தற்காலிக கோமா நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதனைக் காணலாம்.

ஒக்டோபர் 26 ஆம் திகதி அரசியல் அமைப்பானது தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. அசாதாரணமான முறையில் யாரும் எதிர்பார்க்காத ஒரு நேரத்தில் இடம்பெற்ற ஆட்சி மாற்றமானது கடுமையான அரசியல் அமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஒரு வாரத்திற்கு மேல் ஆகியும் இந்நெருக்கடி கூர்மையடைந்து செல்கின்றதேயொழிய நெருக்கடி நிலை குறைவடைவதாக தெரியவில்லை. எதிர்வரும் 14 ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதனால் அதுவரை இந்நெருக்கடி ஓர் போர்க் காலச் சூழலுக்கு ஒப்பானதாகவே இருக்கப்போகின்றது. அதன் பின்னரும் இந்நெருக்கடி தொடரவே வாய்ப்புள்ளது என்பதே தற்போதையை நிலைமை.



இங்கு இவ் அரசியல் அமைப்பு நெருக்கடி என்பது அரசாங்க கட்டமைப்புக்கு வெளியிலிருந்து ஏற்பட்ட ஒரு நெருக்கடி அன்றி நாட்டினுடைய முதல் குடிமகன் என விழிக்கப்படும் நாட்டின் ஜனாதிபதியே இந்நெருக்கடிக்கு காரணமானார் என்பதே ஆச்சரியம். அரசாங்கத்தின் முத்துறைக் கட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடியாகும். அரசாங்கத்திற்கு மூன்று நிறுவனங்களாக சட்டத்துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை என்பன காணப்படுகின்றன. இன்று நிர்வாகத் துறையில் அரசியலமைப்பு ரீதியாக ஏற்பட்டுள்ள சிதைவு நிலையானது. நாட்டின் ஜனநாயக நிறுவனமான சட்டத்துறையின் இயக்கத்தை செயற்கையாக தடுத்துள்ளது. சட்டத்துறையினூடாக இலகுவாகத் தீர்வினைத் தேடுவதன் மூலம் அரசியல் அமைப்பினை பாதுகாக்கக்கூடிய நிலை காணப்பட்டாலும் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியானது அதனைத் தடுத்து வைத்து ஜனநாயகத்தின் கீழ் இறக்கத்திற்கு வழிவிட்டுள்ளது.

இன்று ஏற்பட்டுள்ள இந்த அரசியலமைப்பு முரண்பாட்டிற்கு 2015 ஆம் ஆண்டு 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மூல யாப்பில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தமே காரணமாகும். 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் என்ற ஒரு தேசிய அரசாங்க முறையானது இலங்கையின் இரு பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து உருவாகியது. இதன்மூலம் நாட்டின் ஜனாதிபதியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேனவும் நாட்டின் பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவியேற்றுக் கொண்டனர்.

இதன்மூலம் இலங்கையில் தன்முனைப்பாட்சியினை ஏற்படுத்தி ஜனநாயக முறைமைக்கு சவால்விட்டுக் கொண்டிருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் அதிகாரங்களைக் குறைத்தும் பிரதமரின் அதிகாரங்களை அதிகரித்தும் மற்றும் சில ஜனநாயக மாற்றங்களுடனும் பாராளுமன்றின் பெரும்பான்மையோரின் ஆதரவுடன் அரசியல் அமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. யார் அவ்வாறான ஒரு திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்று மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்டு வந்தாரோ அவரே இன்று அத்திருத்தத்திற்கு முரணாக செயற்பட்டு அரசியல் அமைப்பு நெருக்கடியை தோற்றுவித்திருக்கின்றார்.

உண்மையில் 19 ஆவது அரசியல் அமைப்பின் 46 (2) உறுப்புரை மற்றும் 42 (4) உறுப்புரை ஆகியன பிரதமரின் பதவி வறிதாகும் சந்தர்ப்பங்களையும் ஒரு பிரதமர் நியமிக்கப்படும் முறையையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. எனினும் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் நாட்டினுடைய பிரதமரை ஜனாதிபதி பதவி நீக்க முடியும் என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. இவ்வாறான ஒரு நிலையிலேயே ஒக்டோபர் 26 ஆம் திகதி மாலையில் நடைமுறையில் இருந்த பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவினை பதவி



நீக்கி முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி புதிய பிரதமராக நியமித்ததுடன் அதற்கான உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தலையும் விட்டிருந்தார். இதுவே இன்றைய நிலைக்கான அடிப்படைக் காரணமாகும்.

இவ்வாறான ஒரு அசாதாரண ஒரு ஆட்சி மாற்றத்தை ரணில் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதோடு அவர் தன்னுடைய பிரதமர் பதவியை விட்டுக்கொடுக்கவுமில்லை. அரசியல் அமைப்புக்கு முரணாக ஏற்படுத்தப்பட்ட இம்மாற்றத்தை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தான் பாராளுமன்றத்தினைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்கும் வரை அலரி மாளிகையை விட்டு வெளியேற மாட்டேன் என்று அங்கேயே தங்கிவிட்டார். இங்கு இரண்டு விடயங்களில் தவறு நடைபெற்றுள்ளது. ஒன்று ஒரு பிரதமர் நியமனம், மற்றையது ஒரு புதிய பிரதமரை ஜனாதிபதி நியமித்தாலும் உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்கச் செய்வது. ஆனால் இதில் எதுவும் நடைபெறவில்லை.

நாட்டில் உள்ள பெரும்பான்மையோர் இந்த ஆட்சி மாற்றமானது அரசியலமைப்பிற்கு முரணாகவே நடந்துள்ளது எனக் குறிப்பிடும் பொழுது ஜனாதிபதியும் அவர் சார்ந்தோரும் அதனை மறுத்து அரசியலமைப்பிற்கு உட்பட்டே இவ் ஆட்சி மாற்றம் நடந்ததாகக் குறிப்பிடுகின்றனர். அவர்களின் விளக்கத்தின் படி தேசிய அரசாங்கம் கலையும் பொழுது அதனை மையமாகக் கொண்டு உருவாகிய அமைச்சரவையும் கலையும் என்ற வாதத்தினை முன்வைக்கின்றனர். ஆனால் இவ் வாதத்தினை பெரும்பான்மையானோர் ஏற்க மறுக்கின்றனர்.

இங்கு நாட்டினுடைய அரசியல் அமைப்பிற்கு வியாக்கியானம் கூறக்கூடிய அறிஞர்கள் காணப்பட்ட போதும் அவர்கள் மௌனமாகவே இருக்கின்றனர். சட்டமா அதிபர் கூட இவ்விடயத்தில் பார்வையாளராகவே மாறியிருக்கின்றார். சபாநாயகர் ஒருவரே இது தொடர்பாக தன் உத்தியோகபூர்வமான அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார். அதாவது இது முற்றிலும் அரசியல் அமைப்பிற்கு எதிரான ஒன்று என்றும் புதிய பிரதமரின் நியமனத்தை ஏற்க முடியாது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறு ஆளுக்கு ஆள் மாறி மாறி ஒவ்வொரு கருத்தைக் கூறிக்கொண்டு இருக்கின்றனர். அதற்கிடையிலோ இரண்டு கட்சிகளும் தங்களுக்கான பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக இறுதிக்கட்ட ஆளிழுப்பு வேலையை முடுக்கிவிட்டுள்ளனர். யார் யார் எந்தப் பக்கம் எப்போது போவார்கள் என்று தெரியாத ஒரு சூழ்நிலையில் தற்போது ஆட்சியின் தீர்மானிப்பு சக்தியாக கூட்டமைப்பு மாறியிருக்கின்றது. இதில் கூட்டமைப்பு தன்னுடைய நிலைப்பாட்டினை சில தினங்களுக்கு முன்னர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது. அதாவது ரணிலுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அது எடுத்துள்ளது. இதன்மூலம் அரசியல் நிலையானது மேலும் சூடு பிடித்துள்ளதைக் காணலாம்.

இலங்கை வரலாற்றில் அரசியலமைப்பு மீறப்படுதல் என்பது சோல்பரி யாப்புக் காலத்தில் இருந்தே தொடர்கதையாக இருந்தாலும் அவை அனைத்தும் இரு சிங்கள தேசிய கட்சிகளாலும் சிறுபான்மையினரின் உரிமைகளை மீறுவதற்காக நடைபெற்றதனால் அவற்றினால் சிறுபான்மை இனங்களே பாதிக்கப்பட்டன. அதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தங்களை தென்னிலங்கையில் பலமாக்கிக் கொண்டன. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியானது இலங்கை வரலாற்றில் புதியதும் இலங்கை வரலாற்றில் ஆழமாகப் பதியப் போகின்றதுமான ஒரு விடயமாகும். தற்போது ஏற்பட்டுள்ள அரசியலமைப்பு நெருக்கடியானது சிறுபான்மை இனங்களுக்கு எதிரானது அல்ல. மாறாக இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையிலும் நடைபெறுகின்ற ஒரு அதிகாரப் போட்டியாகும்.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள இவ் அசாதாரண நிலையின் மற்றோர் முகத்தினையும் இவ்விடத்தில் ஆராய வேண்டும். ஒக்டோபர் 26 ஆம் திகதி மாலை வரை வழமையாக இருந்த இலங்கையில் அரசியல் நிலையானது ஒரு இரவிற்குள் தலைகீழாக மாறிப்போனமை என்பது சாதாரணமாக ஏற்பட்டது அன்று. அது ஒரு பூகோள அரசியலின் ஒரு மற்றோர் வடிவம் என்றே கூறலாம். புவிசார் அடிப்படையில் இலங்கையானது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடத்திலேயே காணப்படுவதால் எப்பொழுதும் சர்வதேச அரசியலின் நலன்களுக்கு அது அகப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. தற்போதைய நிலை கூட அவ்வாறான சர்வதேச அர சியல் நலன்களின் ஒரு பிரதிபலிப்பென்றே ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தற்போதைய சூழலில் உலக அரங்கில் மேற்கத்தேய நாடுகளுக்கும் சீனாவிற்கும் இடையிலான ஒரு அதிகாரப் போட்டியின் அமைவிடமாக தெற்காசியாவில் இலங்கை இருந்து வருகின்றது. பிரதமர் ரணிலினுடைய அரசாங்கமானது பெரும்பாலும் இந்தியா மேற்கு சார்பு கொள்கையினைக் கொண்டிருப்பதனால் சீனாவால் இலங்கையில் தன் நலன்களை அடைய முடியாத ஒரு இக்கட்டான நிலையில் சீனாவின் ஒரு வேலையாகவே இவ் ஆட்சி மாற்றம் இடம் பெற்றதாகவே மேற்கு நாடுகளும் இந்தியாவும் பலமாகக் கருதுகின்றது. அதனை இங்கு முற்று முழுதாக மறுக்கவும் முடியாது.

ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றவுடன் வாழ்த்துத் தெரிவித்த நாடாக சீனா காணப்படுவதுடன் இலங்கைக்கான சீனத்தூதுவர் உடனடியாக அவரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்திருக்கும் அதேவேளை மேற்கத்தேய நாடுகள் குறிப்பாக 20 இற்கு மேற்பட்ட மேற்கத்தேய இராஜதந்திரிகள் ரணிலைச் சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றனர். அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. சபை, பொதுநலவாய அமைப்பு போன்றன இவ் ஆட்சி மாற்றமானது ஜனநாயகத்திற்கு மாறுபட்டது என்றும் ஜனாதிபதி



நாட்டின் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டதோடு இலங்கையில் சமகால அரசியல் நெருக்கடியில் தங்களை ஒரு பங்குதாரராக இணைத்தும் கொண்டுள்ளனர்.

மேற்கத்தேய இராஜதந்திரிகள் சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் போன்றோரை தொடர்ச்சியாக சந்தித்துக் கொள்வதுடன் கண்டனங்களையும் தெரிவித்துக் கொள்கின்றனர். மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை அவர்கள் ரணிலையே இன்றும் பிரதமராக ஏற்றுள்ளனர். இதன்மூலம் பூகோள அரசியலின் பூப்பந்தாட்ட மைதானமாக இலங்கை மாறியிருக்கின்றது. இலங்கை வரலாற்றில் எக்காலத்திலும் காட்டாத ஒரு கரிசனையினை மேற்கு நாடுகள் இவ்விடயத்தில் காட்டுவது ஆச்சரியமான ஒரு விடயமாகும். இலங்கை தங்களின் கையை மீறிச் சென்று விடுமோ என்ற அச்சம் மேற்கு நாடுகளுக்குக் காணப்படுகின்றது. ஏனெனில் தெற்காசியாவில் எந்தநாடு இலங்கையை தன் கட்டுக்குள் வைத்திருக்கின்றதோ அந்நாடே ஆசியாவின் தலைமையை வகிக்க முடியும் என்றளவில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவ அமைவிடம் காணப்படுகின்றது.

இதனாலேயே உலக நாடுகள் இலங்கையின் மீது தங்களுடைய இராஜதந்திர வலையினை விரித்துள்ளனர். இதற்காகவே அவர்கள் இலங்கையில் தம் சார்பான் ஆட்சியாளர்களை ஆட்சிக் கதிரையில் அமர்த்துவதற்கு தங்கள் செல்வாக்கினைப் பயன்படுத்துகின்றனர். இதனாலேயே உள்நாட்டில் பேசப்படுவதனை விட சர்வதேச அரசியல் மட்டத்தில் இலங்கையினுடைய சமகால நிலவரம் மிகவும் பிரதான பேசுபொருளாக மாறியிருக்கின்றது. இதன் மூலம் இப்பிரச்சினையானது பூகோள அரசியலின் ஒரு வடிவமாக ஊற்றெடுத்தது என்பதனை மறுக்க முடியாது. வெளிநாடுகளின் கரங்கள் இப்பிரச்சினையில் வலுவாகப் பயன்பட்டுள்ளது என்பதனை ஊகிக்க முடியும்.

எனவே இது தேசிய அரசியல் முரண்பாட்டின் பெறுபேறா அல்லது பூகோள அரசியல் நலன்களின் பெறுபேறா என்பதற்கு அப்பால் இவ் அரசியல் அமைப்பு முரண்பாடானது ஜனநாயக விழுமியங்களுக்குள் தீர்க்கப்படவேண்டும். சிறுபான்மையினம், பெரும்பான்மையினம் என்பதற்கு அப்பால் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் எல்லோரும் அரசியல் அமைப்பிற்கு உட்பட்டே வாழ்வதற்கு விருப்பம் கொண்டவர்கள். இவ் அரசியலமைப்பு முரண்பாடானது ஜனநாயகப் பாதையினூடான தீர்வினைக் கண்டு யாப்பிற்கு உட்பட வேண்டும். அதனை விடுத்து இவ் அரசியல் அமைப்பு முரண்பாடானது அதே திசையில் சென்று தீர்வினை எடுக்குமாயின் அதுவே இலங்கையின் ஜனநாயகம் பாழாய்ப் போவதற்குக் காரணமாக அமையும் என்பதுடன் இதன்மூலம் தெற்காசியாவில் கீழ்நிலை அரசியல் கலாசாரம் கொண்ட நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்படுவதற்கும் காரணமாகும் என்பது திண்ணம்.

எஸ்.கோகுலன், வட்டுக்கோட்டை

# குறைத்து மதிப்பிடப்படுகிறாரா ராயுடு?



அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பை போட்டிகளுக்கு வேகப்பந்து வீச்சில் புவனேஷ், பும்ராஹ் இணை தயாராக உள்ளது. உலகின் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களாக திகழ்ந்து வருகின்றனர்.

சுழற்பந்து வீச்சு இணையான குல்தீப் யாதவ், சஹாலும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். டொப் ஓடர் துடுப்பாட்டத்தை பொறுத்தவரை ஷர்மா, தவான், கோலி ஆகியோர் சாதனை மேல் சாதனை படைத்து உலகின் சிறந்த டொப் ஓடர் துடுப்பாட்ட வீரர்களாக இருந்து வருகின்றனர்.. ஆனால் இந்த மிடில் ஓடர் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை.

தற்போது விளையாடி வரும் மிடில் ஓடர் துடுப்பாட்ட வீரர்களில் டோனி மட்டுமே தனது உலகக் கோப்பை இடத்தை உறுதி செய்துள்ளார். அவர் 5 ஆம் இடத்தில் களமிறங்க வாய்ப்புகள் அதிகம். 4 மற்றும் 6ஆம் இடத்தில் களமிறங்க போகும் வீரர்கள் யார் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

கடந்த சில தொடரில் ராயுடு சிறப்பான பங்களிப்பை அளித்து வருகிறார். ரோஹித் மற்றும் கோலி இருவரும் உலகக் கோப்பையில் 4 ஆவது இடத்தில் ராயுடு விளையாடுவார் என்பதை உறுதி செய்துள்ளனர்.

ராயுடுவின் தகுதியையும், அனுபவத்தையும், புள்ளி விவரங்களையும் சற்று ஆராய்ந்து பார்த்தால் இது அவருக்கு மிகவும் தாமதமாக கிடைத்த வாய்ப்பாகவே கருதப்படுகிறது.

33 வயதான ராயுடு ஆந்திராவை சேர்ந்தவர். அண்டர் 15, 16, 17, 19 ஆகிய லெவல்களில் இந்திய அணிக்கு ஆடியுள்ளார். 2004 இல் பங்களாதேஷில் நடைபெற்ற அண்டர் 19 உலகக் கோப்பையில் இந்திய அணிக்கு அணித் தலைவராக இருந்தார். 2007இல் தொடங்கப்பட்ட ஐ.சி.ல். போட்டிகளில் சிறப்பாக விளையாடினார்.

இதன் மூலம் ஐ.பி.எல். 2010 ஆம் ஆண்டில் மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம் பெற்றார்.

2010 முதல் ராயுடு மும்பை இந்தியன்ஸ் அணியின் முக்கிய வீரராக சிறப்பாக செயற்பட்டு வந்தார். தொடக்க ஆட்டக்காரர் முதல் 7ஆவது நிலை வீரர் என அனைத்து இடங்களிலும் அணியின் தேவைக்கு ஏற்ப களமிறங்கினார். அணி இக்கட்டான சூழ்நிலையில் உள்ளபோது அணியை மீட்டு வெற்றி பாதைக்கு அழைத்துச் செல்வார்.

இதனால் அவருக்கு தேசிய அணியில் 2013இல் இடம் கிடைத்தது. வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் அசத்தினார். 2014இல் இலங்கைக்கு எதிரான போட் டியில் 118 பந்துகளில் 121* ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றி பெற செய்தார். தொடர்ந்து சிறப்பாக விளையாடியதால் 2015 உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் இடம் பிடித்தார் ராயுடு. ஆனால் 11 பேர் கொண்ட அணியில் விளையாட வாய்ப்பு கிட்டவில்லை.

2016இல் மூன்று போட்டிகளில் விளையாடி 103 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 2017இல் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. 2018இல் சென்னை சுப்பர் கிங்ஸ் மீண்டும் ஐ.பி.எல்.க்கு திரும்பிய போது அந்த அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டார். ஐ.பி.எல். 2018இல் 16 போட்டிகளில் விளை யாடிய அவர் 602 ஓட்டங்கள், 43 சராசரி, 1 சதம், 150 ஸ்ட்ரைக் ரேட் என அசத்தினார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கோப்பையை பெற முக்கிய பங்காற்றினார்.

2018இல் மீண்டும் சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து வாய்ப்பு கிடைத்தது. இந்த ஆண்டு இதுவரை 10 இன்னிங்ஸ்களில் 392 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சராசரி 56, ஸ்ட்ரைக் ரேட் 91 என இந்த வருடம் மிக சிறப்பாக ஆடினார். ஒரு நாள் போட்டிகளில் ராயுடுவின் சராசரி 52 ஆக உள்ளது.

விராட் கோலிக்கு பிறகு இந்திய அணியில் அதிக சராசரி கொண்ட வீரர் ராயுடு என்பது குறிப்பிடத்தக்கது. அவர் மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கிறார் என்பதே உண்மை. வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் நன்றாக விளையாடி வரும் ராயுடு அதிக அனுபவமும், சிறப்பான களத்தடுப்புத் திறமையையும் கொண்டவர்.

அவர் அடுத்த வருடம் நடக்க உள்ள உலகக் கோப்பை போட்டிகளில் இந்திய அணிக்கு முக்கிய பங்காற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# கிரிக்கெட்டின் சுப்பர் ஸ்டார் கோலி

ஒரு காலத்தில் உள்நாட்டு மைதானங்களிலும், துடுப்பாட்டத்திற்கு சாதகமான மைதானங்களிலும் மட்டுமே சிறப்பாக விளையாடுபவர் என்று இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சனால் விமர்சனத்துக்கு உள்ளானவர் விராட் கோலி. ஆனால் இந்த வாரத்தில் மட்டும் உலகின் மிகசிறந்த வீரர்களாக இருந்த பிரைன் லாரா, ஸ்டீவ் வாக், கிரேம் ஸ்மித் ஆகியோரிடமிருந்து மிகவும் அரிதான பாராட்டுகளை பெற்றுள்ளார் கோலி.

10 வருட கிரிக்கெட் வாழ்வில் சில இறக்கங்களையும், பல்வேறு சோதனைகளையும் கடந்தே இன்று உலகின் நம்பர் 1 துடுப்பாட்ட வீரராக உருவெடுத்துள்ளார் கோலி. 2008-ல் அறிமுகமான கோலி 2014 வரை சிறந்த துடுப்பாட்ட வீரராக மூன்று விதமான போட்டிகளிலும் திகழ்ந்து வந்தார். அந்த நிலையில் 2015-ஆம் ஆண்டு அவருக்கு சோதனை காலமாக அமைந்தது. 2015இல் டெஸ்ட் போட்டிகளில் 43, ஒரு நாள் போட்டிகளில் 37, இருபது-20 இல் 22 என சராசரி அமைந்து இருந்தது. இது ஓரளவு நல்ல சராசரி தான் என்ற போதிலும் விராட் கோலியின் தகுதிக்கு அது குறைவாக இருந்தது.

ஆப் ஸ்டம்புக்கு வெளியே செல்லும் பந்துகளை ஆடுவதில் அதிகமாக தடுமாறினார் கோலி. தன்னுடைய பலவீனங்களை கண்டறிந்து அதை நிவர்த்தி செய்ய தீவிரமாக பயிற்சியில் ஈடுபட்டார் கோலி. அந்த காலகட்டத்திற்கு பிறகு மிகசிறந்த வீரராக உருவெடுத்தார். இன்று யாரும் தனக்கு அருகில் கூட வரமுடியாத அளவுக்கு தன்னுடைய திறமைகளை வளர்த்து நம்பர் 1 இடத்தில் உள்ளார். இதற்கு அவருடைய விடா முயற்சியும், கடின உழைப்பும், அவர் கிரிக்கெட்டின் மீது கொண்ட அன்பும் தான் காரணம்.

தற்போது நடந்து முடிந்த மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் மட்டும் பல்வேறு சாதனைகளை படைத்தார்.

ஒருநாள் போட்டிகளில் 205 இன்னிங்க்ஸ் மட்டுமே எடுத்துக் கொண்டு அதிவேகமாக 10,000 ஓட்டங்களை குவித்த வீரர் என்ற பெருமையை பெற்றார்.

உலகின் மிகசிறந்த பந்துவீச்சாளர்களை தன்னுடைய துடுப்பாட்டத்தில் மூலம் நிலைகுலைய செய்தவர்.

அதிகமான இலக்குகளை எதிர்கொண்டு ஆடும் போட்டிகளில் இவர் சதம் அடித்து சுலபமாக வெற்றி பெற வைத்து உள்ளார். இதனால் "சேஸ் மாஸ்டர்" என்ற பெயரை பெற்றார்.

கப்டனாக இருப்பவர்கள் துடுப்பாட்டத்தில் சரியாக கவனம் செலுத்த முடியாமல் தடுமாறுவார் கள். ஆனால் கோலி அதற்கு விதிவிலக்கு. அதிக பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு அணியை வெற்றி பாதைக்கு அழைத்து செல்வதில் வல்லவர். ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 8,000 மற்றும் 9,000 ஓட்டங்கள் எடுத்த வீரரும் ஆவார்.

அதிவேகமாக 5000, 6000 மற்றும் 7000 ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் இரண்டாம் இடத்தில் தென்னாபிரிக்காவின் ஹசீம் அம்லாவிற்கு அடுத்தபடியாக உள்ளார்.

ஒரு தொடரில் ஒரு உலக சாதனை படைப்பதே பெரிய காரியம். ஆனால் கோலி தான் விளையாடும் ஒவ்வொரு போட்டியிலும் பல்வேறு உலக சாதனைகளை படைத்து வருகிறார். டான் பிராட்மேனின் 99.99 சராசரி சாதனையை தவிர அனைத்து சாதனைகளையும் முறியடிப்பார் கோலி என்று அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் வாக் தெரிவித்துள்ளார். பெரிய காயமடையாமல் இருந்தால் அனைத்து சாதனைகளையும் படைப்பார் என்றும் அவர் கூறியுள்ளார.

இன்று உலக கிரிக்கெட் அதிகளவு சுப்பர் ஸ்டார்கள் இல்லாமல் தவித்து வருவதாகவும், சுப்பர் ஸ்டாராக கோலி டெஸ்ட் கிரிக்கெட்டை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வார் எனவும் கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய தென் ஆபிரிக்காவின் முன்னாள் அணித் தலைவர் கிரேம் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கோல்ப் தொடர்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்ட லாரா, கோலியின் தனித்தன்மை வியக்கத்தக்கது என்றும், இந்த கால கட்டத்தில் கிரிக்கெட்டின் தலைவர் கோலி தான் எனவும் தெரிவித்தார்.

# அழகிய தமிழ்ப் பெண்

மேளக்கச்சேரியின் சத்தம் காதைப் பிளக்கிறது. அழகான ஆடை உடுத்தி திருமணத்துக்கு தயாராகின்றனர். பக்கத்து வீட்டு மாலதி இன்னும் சில மணித்தியாலங்களில் மணமகளாகப் போகும் சந்தோசத்தில் ஆடை, ஆபரண அலங்காரங்களுடன் மொட்டவிழ்ந்த மலர்போல் அழகாகக் காட்சியளிக்கிறாள். வருவோரை வரவேற்பது போல் வாசலிலே இருமருங்கும் பச்சை வாழை மரங்கள் பழுத்த வாழைக்குலைகளுடன் கட்டப்பட்டுள்ளன. இன்னும் கொஞ்ச நேரத்தில் மாப்பிள்ளை வந்துவிடுவார். ஆரவாரம் களை கட்டி விட்டது. லக்சுமிக்கு மனம் கனக்கத் தொடங்கியது. இவ்வாறு ஒரு நாளில் தானே தனது மகள் ரேவதியும் மணமகளாக காட்சியளித்தாள். மன நெருடலை உணர்ந்தவளாய் உள்ளே சென்றவள் பொழுது விடியாதவளாக தலைமுதல் கால்வரை போர்வையால் போர்த்திப் படுத்திருக்கும் தன் மகளை வேதனையோடு நோக்கினாள்.

பெண் பிள்ளையின் வாழ்வு என்பது வயிற்றில் நெருப்பைக் கட்டியது போன்றுதான். வாழ்க்கைத் துணையை தேடிக் கொடுத்தாலும் சில வேளைகளில் பெற்றோருக்கு பெண் பிள்ளைகள் சுமையாகி விடுகின்றனர். திருமண வயதையடைந்த ரேவதிக்கு ஆசை ஆசையாக வரன் பார்த்து ஆடம்பர மேடையில் மங்கள வாத்தியங்கள் புடை சூழ திருமணத்தை நிறைவேற்றிய பெற்றோர் நிம்மதியடைந்திருந்த வேளை ஆறாம் மாதமே வாழாவெட்டியாக பிறந்த வீட்டுக்கு வந்திருந்தாள் ரேவதி. அதிர்ச்சியடைந்த பெற்றோர் பலமுறை முயன்றும் சேர்த்து வைக்க முடியாமல் தோற்றுப் போயிருந்தனர். மகளின் மணமுறிவை தாங்க முடியாத தந்தை மரணத்தைத் தழுவிக் கொண்டார். ஆறாத ரணகாயத்தோடு வாழாவெட்டியான மகளைத் தாங்கியவளாய் வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கிறாள் லக்சுமி. வருடங்கள் ஆறாகி விட்டன.



படுக்கையை விட்டெழுந்த ரேவதி தாயின் மன நிலையைப் புரிந்து கொண்டு குற்ற உணர்வால் குறுகிப் போனாள். எந்தத் தாயும் பெற்ற பிள்ளையின் சந்தோசத்துக்கு மாறாக கண்ணீரை விரும்பமாட்டாள். இதற்கு லக்சுமி மட்டும் விதிவிலக்கல்ல. தனது திருமண வாழ்வை மீட்டுப் பார்த்தாள். ராஜன் ஒரு பரத நாட்டியக் கலைஞன். ரேவதியை பல எதிர்பார்ப்புகளோடு வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டவன். அவன் தமிழ்த்தாயை மனதார நேசித்தவன். தனது மனைவி சேலை உடுத்து, மஞ்சள் பூசி, பூச்சூடி, குங்குமம் தரித்து எழில் கோலத்தோடு வாழ வேண்டும் எனக் கனவு கண்டவன். ராஜனின் மனதில் குடி கொண்ட விருப்பங்களுக்கு எதிர்மாறான குணம் கொண்டவளாகவே ரேவதி காணப்பட்டாள். தமிழ்ச்சேலை உடுத்துவது அவளுக்கு அருவருப்பானதொன்றாக இருந்தது. தமிழ்ப்பண்பாட்டை அடியோடு வெறுப்பவளாக வேற்றுக் கலாசாரத்தையே முழுமையாக விரும்பினாள். நவீனத்துவத்தில் நளினமாகவே வாழ விரும்பினாள். அதுமட்டுமல்ல ராஜன் ஒரு சிறந்த கலைஞன். அவனிடம் நடனக்கலை பயில வரும் பெண் பிள்ளைகள் மேல் சந்தேகம் கொண்டு நித்தம் சண்டை பிடிப்பாள். மொத்தத்தில் கொள்கைகள், பழக்க வழக்கங்களில் இரு வேறு துருவங்களாக வாழ்ந்தனர். மனமுடைந்த ராஜன் செய்வதறியாது திகைத்தான். தன்னை வளர்த்து சமுதாயத்தில் தனக்கென ஒரு அடையாளத்தை ஏற்படுத்தித்தந்த கலையைக் கொன்று போடுபவளாக வாழ்க்கைத் துணை அமைந்ததை எண்ணி ஆண்டவனை நொந்தான். முடிவு மணமுறிவாகி பிரிந்து வாழும் நிலை ஏற்பட்டது.

கண்களில் வழியும் விழி நீரைத் துடைத்த ரேவதி அவசரமாக வெளியேறினாள். மன்னிப்புக்கேட்டு நல்லதொரு தமிழ்ப் பெண்ணாக வாழப்போவதாக மனதுக்குள் கற்பனை பண்ணிப் புறப்பட்டாள். காற்றாய்ப் பறந்தவள் ராஜனின் வீட்டுக் கதவைத் தட்டினாள். பலமுறை தட்டிய்பின் அழகிய பெண் ஒருத்தி கதவைத் திறந்தாள். "ராஜன் இருக்கிறாரா? ராஜனை ஒருதடவை பார்க்க வேண்டும்" என்றாள். இல்லை. ராஜன் பரத நாட்டிய கலை நிகழ்வு ஒன்றுக்கு சென்றுள்ளார். வர நேரமாகும் என்ற அப்பெண்ணின் முகத்திலும் வார்த்தையிலும் தமிழ் மணம் கமகமத்தது. "நீங்கள்...என்றவளை நான் திருமதி ராஜன்" என்ற பதில் சம்மட்டி கொண்டு தாக்கியது.

உலகமே சுற்றியது ரேவதிக்கு. பூச்சூடிப் பொட்டிட்டு சேலை உடுத்து நின்ற அந்தத் தமிழ்ப் பெண் மட்டுமே அவளது கண்களில் ஒளியாகத் தெரிந்தது. உலகமே இருண்டு விட்டவளாக நடக்கவே சக்தியற்றவள் ஆனால். ஆடம்பர மோகத்தில் ஆருயிர் கணவனை வதை செய்ததையும் சந்தேகம் கொண்டு நித்தம் நித்தம் சண்டை போட்டதையும் மனக் கண் முன் நிறுத்தி அழுதாள். தன் கையில் கிடைத்த அழகிய மலர் போன்ற வாழ்க்கையை கசக்கி எறிந்து விட்டேனே என்ற துன்பத்தோடு வீட்டுக்கு விரைந்தாள். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. கிடைக்கின்ற வாழ்க்கையை மகிழ்வோடு ஏற்று வாழ வேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் சில தவறுகளை சீர் செய்து வாழ வேண்டுமே தவிர, அழகான வாழ்க்கைக்கு களங்கத்தை ஏற்படுத்தி விட்டால் மிஞ்சுவது கண்ணீரே. ஆடம்பரமும் அலங்கோலமும் அகம்பாவமும் சந்தேகமும் குடும்ப வாழ்வை நாசமாக்கி விடும். அன்பும் அரவணைப்பும் புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்புமே இல்லறத்தின் அத்திபாரம். இதனை உணர்ந்து வாழ வேண்டியது பெண்ணின் கடமை. தலைக்கனம் கொள்வதோ சந்தேகத்தால் சண்டையிடுவதோ நிம்மதியைத் தராது. மாறாக, கேள்விக் குறியான வாழ்க்கையையே தந்துவிடும்.

**உடுவிலூர் கலா**

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உலகம் சுற்றும் வாலிபன்
இயற்றியவர் : வாலி
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



நிலவு ஒரு பெண்ணாகி
உலவுகின்ற அழகோ
நீரலைகள் இடம்மாறி
நீந்துகின்ற குழலோ

மாதுளையின் பூப்போலே
மலருகின்ற இதழோ
மாதுளையின் பூப்போலே
மலருகின்ற இதழோ
மானினமும் மீனினமும்
மயங்குகின்ற விழியோ

நிலவு ஒரு பெண்ணாகி
உலவுகின்ற அழகோ
நீரலைகள் இடம் மாறி
நீந்துகின்ற குழலோ
நீந்துகின்ற குழலோ

புருவமொரு வில்லாக
பார்வையொருக் கணையாக
புருவமொரு வில்லாக
பார்வையொருக் கணையாக
பருவமொரு களமாகப் போர்
தொடுக்கப் பிறந்தவளோ
குறு நகையின் வண்ணத்தில்
குழி விழுந்த கன்னத்தில்
குறு நகையின் வண்ணத்தில்
குழி விழுந்த கன்னத்தில்
தேன் சுவையைத் தான் குழைத்து
கொடுப்பதெல்லாம் இவள் தானோ

பவளமென விரல் நகமும்
பசுந்தளிர் போல் வளை கரமும்
தேன் கனிகள் இருபுறமும்
தாங்கி வரும் பூங்கொடியோ
ஆழ்கடலின் சங்காக
நீள் கழுத்து அமைந்தவளோ
ஆழ்கடலின் சங்காக
நீள் கழுத்து அமைந்தவளோ
யாழிசையின் ஒலியாக
வாய்மொழி தான் மலர்ந்தவளோ

செந்தழலின் ஒளி எடுத்து
சந்தனத்தின் குளிர் கொடுத்து
பொன் தகட்டில் வார்த்து வைத்த
பெண்ணுடலை என்னவென்பேன்
மடல் வாழைத் துடையிருக்க
மச்சம் ஒன்று அதிலிருக்க
மடல் வாழைத் துடையிருக்க
மச்சம் ஒன்று அதிலிருக்க
படைத்தவனின் திறமை எல்லாம்
முழுமை பெற்ற அழகியென்பேன்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 157

## வீரமான ஆரோக்கியம் (BRAVE HEALTH)




"அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பது இல்லையே, உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே" என்ற பாரதியாரின் பாடலை வாயாரப்பாட அனைவர்க்கும் மன தார விருப்பம். அனைவரும் கருத்தூன்றி பாடும் பொன்வரிகளும் இவை.

எனவே இப்பாடலின் வரிகளின் பொருள் அனைவர்க்கும் விருப்பமானது என்று தானே அர்த்தம். இந்த அச்சம் என்பதன் எதிர்ப்பதம் தானே அனைவருக்கும் விருப்பமானது. அந்த எதிர்ப்பதம் என்ன? "வீரம்" (BRAVE) என்பதே அந்த அருமையான சொல் அல்லது அதனுள் கொண்ட உணர்வு ஆகும். வீரம் என்றால் நோவை, ஆபத்தை நாம் எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்றதையே வெளிக்காட்டுகிறது. (Ready to face and endure danger/pain or showing courage) ஆரோக்கியம் என்றால் உடல், உள, ஆன்மீக, சமூக நன்னிலையான வாழ்க்கையைக் குறிக்கின்றது.

எம் ஒவ்வொருவருக்கும் இன்று வீரமான ஆரோக்கியம் தேவைப்படுகின்றது. இந்த வீரத்தை எப்படி நாம் எம் அனைவரின் ஆரோக்கிய வாழ்விற்காக பயன்படுவது? பயன்படுத்தலாமா? ஆம் நிச்சயம்.

தொற்றா நோய்களற்ற வாழ்க்கை. இன்று சிறியோர் முதல் பெரியோர் வரை உடற் பருமன் அதிகரித்தல், குருதிச்சோகை, இதய நோய், கொலஸ்ரோல் அதிகரிப்பு, உயர்குருதி அமுக்கம், சலரோகம், சிறுநீரகப்பாதிப்பு, புற்றுநோய், பிள்ளைப் பேறின்மை, வீதி விபத்துக்களின் விபரீதங்கள், போன்ற அதிகளவு நோய்கள் எம்மைப் பயமுறுத்தும் நோய்களாக உருவெடுத்துள்ளன.

அதிகளவானோருக்கு இந்நோய்கள் ஒன்று அல்லது பல காணப்படுகின்றது. இதனால் இவர்கள் வாழ்க்கையில் இவர்களது குடும்பத்தில் பல்வேறு விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்படுகின்றன. வருமானத்தின் ஒருபகுதி மருத்துவ செலவிற்கும், நோய் நிதானப் பரிசோதனைகளுக்கும் பயன்படுத்துகின்றது.

வாழ்க்கையில் உழைத்து, களைத்து, அனுபவித்து, ஓய்ந்து முதியவர்களிற்கு உடல்நிலை பாதிப்படைதல் என்பது இயற்கையாக ஏற்கக்கூடியதாக இருப்பினும் இவ்வயதிற்குக் குறைந்தோர்க்கு தொற்றா நோய் ஏற்பட பல காரணங்கள் காரணமாகலாம். பெரும்பாலும் வாழ்க்கைமுறை, உணவுப்பழக்கங்களே காரணமாகி அமைகின்றன. இன்று அறுபது வயது வரையாவது தொற்றா நோய் ஏற்படாது வாழ்தல் என்பதுதான் வீரமான ஆரோக்கியமாகும்.



இந்நிலை ஒவ்வொருவரினதும், ஒவ் வொரு குடும்பத்தினரதும், சமூகத்தினதும் பொறுப்பும் கடமையுமாகும்.

- மதுபானம், புகையிலை, சிகரெட், போதைப்பொருள் பாவனையற்ற வாழ்க்கை இவை நான்கும் உடலுழைப்பால் உளக் களைப்பால் பெறப்பட்ட எம் வருமானத்தை வீணாக்குகின்றது. உடலியல், உளவியல் நோய்களை உருவாக்குகின்றது. சமூக ஆன்மீக வாழ்க்கையை சிதைவடையச் செய்கின்றது. தனிநபரையும் அவர்தம் குடும்பத்தையும், அவர் சார்ந்த சமூகத்தையும் அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும். எம் வருங்காலச் சந்ததியாகிய இளைஞர்களும், சிறுவர்களும் இதனைப் பின்பற்ற முயல்கின்றனர். அழிவுப்பொருட்களாகிய மதுபானம், சிகரெட், புகையிலை, போதைப் பொருட்களை பாவிக்கமாட்டோம் என்ற முடிவை ஒவ்வொருவரும் எடுக்க வேண்டும்.

வியாபாரிகள் மேற்கூறிய பொருட்களை எம் வியாபார நிலையங்களில் விற்பனை செய்து வருமானம் பெற்றுவாழ்தல் நல்லது அல்ல என்று விற்பனை செய்யாது இருத்தல் வேண்டும். ஒருவர்/ ஒரு குடும்பம் விற்பனை செய்து வருமானம் பெற்று பலரை/பல குடும்பங்களை சீரழிக்கும் இந்தச் செயலை விட்டு மாற்றுத்தொழிலை தேர்ந்து வாழலாம்.

தனிமனிதனதும் குடும்பத்தினதும் சமூகத்தினரினதும் ஒற்றுமையான ஆரோக்கியமான சிந்தனையும் நடவடிக்கையும் மேற்கூறிய தீய ஆரோக்கியமற்ற நிலையிலிருந்து விடுபட உதவும். இந்த ஒரு நேரிய நல்ல நோக்குடன் வாழ்வது வீரமான ஆரோக்கிய வாழ்க்கையாக ஒவ்வொருவருக்கும் எம் சமூகத்திற்கும் ஏற்புடையதாக அமையும்.

- விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவரும் அதிவேக அதிஉச்ச பயனைப் பெறுவதற்காக வேண்டாத நச்சான இரசாயனப்பொருட்களைப் பாவிப்பதிலிருந்து விலகிய வாழ்க்கை வேண்டாத இரசாயனப் பொருட்களின் அதீத பாவனையே இன்று சிறுநீரக பாதிப்பு, புற்றுநோய், தோல்நோய் போன்றவற்றிற்கு காரணம் என அறியப்பட்டிருக்கின்றது.

எனவே இயற்கையான பாதிப்பற்ற கிருமிநாசினிகள், பசளை பயன்படுத்தல் என்பது விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரினதும் வீரமான ஆரோக்கிய வாழ்க்கை என்றே கொள்ளலாம்.

- சமூகவிரோதச் செயல்களிலிருந்து விலகிய வாழ்க்கை, திருட்டுச்செயல், வாள் வெட்டு, மற்றவர்களை, உடலால், உளத்தால், சொல்லால் புண்படுத்தல், பிரிவுகளிடையே சண்டையிடல், வீட்டுக் கழிவுகளை வீதியில் வீசுதல் போன்ற செயல்களை தவிர்த்தல் வேண்டும்.
- மற்றவர்கள் உள்ளத்தை புண்படுத்தாத உரையாடல், அவர்கள் கருத்துக்களை செவிமடுத்தல், நல்லதும் நீண்ட ஆரோக்கியமானதுமான நோக்கமுள்ள முடிவுகளை எடுத்தல், நேர்மையாக வாழ்தல், உள நலத்தை, மனநிலையை என்றும் நன்னிலையில் பேணல் போன்றவற்றிற்கு இன்று வீரம் தேவைப்படுகின்றது. இந்த வீரம் ஆரோக்கியமான உளநலத்தைப் பேண அவசியமானது.
- பணத்தை நல்லவழியில் முகாமைப்படுத்தல், வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்துகொள்ளல், நற்பணிகளை செய்தல், சமய,மொழி கலாசார விழுமியங்களை பின்பற்றி எம் இளையவர்களுக்கு, பிள்ளைகளுக்கு, சிறுவர்களிற்கு வீட்டில், குடும்பத்தினுள், சமூகத்தினுள், வேலைத் தளங்களில் இவற்றைப் பகிரல், உறவுகளைப் பேணுதல் என்பன முக்கியமானதும் ஒவ்வொரு மனிதனினதும் சமூக ஆன்மீக வாழ்க்கையில் நன்னிலையையும் உருவாக்கும் இந்நிலை வீரமான சமூக ஆன்மீக ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழியமைக்கும்.

நாம் வீரத்திற்குரிய கடவுளாகிய துர்க்கையை வழிபாடு செய்யும் கலாசாரம் கொண்ட சமூகம். முந்நூற்று அறுபத்தைந்து நாட்களில் பத்து நாட்கள் பலன்கள் பல வேண்டி, வீரமும் வேண்டி விரதமிருக்கும் சமூகம் நாம்.விசேடமாக ஆயுத பூசை எனும் விழாவே கொண்டமைந்த சமூகம் நாம். வீரம் எமக்கு பரம்பரை ஏனெனில் முறத்தால் புலியை விரட்டிய பெண் வாழ்ந்த புராதன பரம்பரை நாம்.இந்த வீரப்பெண்கள் தான் எம் தாய்மார்கள். "மாதா, பிதா, குரு,தெய்வம்" என்பது நம் ஆன்றோர் வாக்கு. அன்னையர் ஆற்றல் அளப்பரியது. இங்கு இந்த மாதாவிற்கு இருக்கும் வலு ஆற்றல் ஒவ்வொரு குடும்பதால் நன்றாக பயன்பாட்டால் வழிபடுத்தினால் வீரமான ஆரோக்கியம் நிச்சயம். பிதாவின் வழியிலும் பல வழிகாட்டல் அவசியம். பாடசாலையில் ஆசிரியர்,மதத்தலங்களில் குருமார் அனைவரின் அன்புக்கட்டளைக்கு யார்தான் மாறமாட்டார்கள் வீரமான ஆரோக்கியத்தை நோக்கி.

எம் அனைவரினதும் வீரமான ஆரோக்கியம் ஒன்று சேர்க்கப்படல் வேண்டும். வீரமான ஆரோக்கிய வாழ்வினூடாகவும் ஒழுக்கமான கல்வியறிவினூடாகவும் எம் சமூகத்தை கால வேக ஓட்டத்திற்கும், அதிவேக தொழில்நுட்ப விருத்திக்கும் இணையாக நல்லதான சரியான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எம்மை மாற்றி நாமும் வாழ்ந்து எம் சமுதாயத்தை வீரமான ஆரோக்கிய வாழ்வு வாழ உழைப்போம். ஒன்றுபட்டால் உண்டு வீரமான ஆரோக்கிய வாழ்வு.

**திருமதி.சதானந்தி நந்தகுமாரன்**
**சிரேஷ்ட போதானாசிரியர்**
**தாதியக்கல்லூரி**

www.cinec.edu
CINEC CAMPUS
MARINE ELECTRO TECHNICAL OFFICER
கப்பலில் சேவைக்கு அதிகம் தேவைப்படும் தொழில் தகமை



"Over 70 + placement tie ups with leading Shipowners in the World"
28

ETO கடேட் உத்தியோகத்தர் (Cadet officer) உள்வாங்குவதற்கான தகுதி / நுழைவுக்கான தேவை

- வயது ஆகக் குறைந்தது 23 வருடங்கள்.
- க.பொ.த உயர் / தரம் - விஞ்ஞான அல்லது கணிதத்துறையில் ஒரு பாடம் (கணிதம் அல்லது பௌதீகம்) அல்லது தொழில்நுட்ப துறையில் கணிதவியலில் ஒரு பாடம் சாதாரண சித்தியடைந்திருத்தல் அவசியம்.
- க.பொ.த சா / தரம் - ஆங்கிலத்தில் திறமை சித்தி உட்பட 6 பாடங்களில் சாதாரண சித்தியடைந்திருத்தல் அவசியம்.

36 மாதகால பயிற்சியில் சித்தியடைந்த பின் சி.ஓ.சி (COC) சான்றிதழ் பெறும் பயிலுனர், கப்பற்றுறைக்கான மின் பொறியியல் டிப்ளோமா சான்றிதழையும் பெற்றுக்கொள்ளலாம்.


தற்பொழுது உள்வாங்குவதற்கான அடுத்த பயிலுனர் தெரிவு ஆரம்பம்.

Training and Employment for CINEC Cadets Provided by

077 4 467 034

+94(011) 241 3500 / 4486 400

# அதிகாரத்தின் உச்ச வரம்பைத் தொட்ட
# ஆட்சிக் கலைப்பு



இலங்கையினுடைய பாராளுமன்றம்தற்போது ஜனாதிபதியால் கலைக்கப்பட்டுள்ளது .

அண்மையில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட ஒரு தளம்பல் நிலையை தொடர்ந்து ஏற்பட்ட ஸ்திரமற்ற அரசியல் நிலைமைகளின் பின்னணியில் தற்பொழுது பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்திருப்பது முக்கியமான ஒரு பேசுபொருளாக இலங்கை மாத்திரமல்லாது கடல் கடந்து உலக அரசுகளின் பேசுபொருளாக மாறியிருக்கிறது.

அந்தவகையில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி நான்கரை வருடங்களுக்குள் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது என்ற சட்ட சரத்து வரைமுறைகள் காணப்படுகின்ற போதும் 19ஆம் திருத்தச் சட்டத்துக்கு முரணானது என்றாலும் அதனையும் மேவி அவரினால் முடிவு தன்னிச்சையாக துணிகரமாக எடுக்கப்பட்டுள்ளது என்றால் இது சாதாரணமாக ஒரு இரவில் எடுத்து விடப்பட்டுள்ள முடிவு அல்ல.


அதற்கும் மேலாக பல கால ஆலோசனைகள் பல சட்ட வல்லுநர்களின், பல ஜனாதிபதி சட்டத்தரணிகள், நீதி அரசர்கள்ஆலோசனைகளுக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதில் சந்தேகம் இருக்க முடியாது.

2015ஆம் ஆண்டு ஒரு பொது வேட்பாளராக மக்கள் மத்தியில் நீதியை நிலைநாட்ட போவதாக கூறிக் கொண்டும் சர்வாதிகாரம் பொருந்திய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன் என்றும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன இன்று ஒட்டுமொத்த இலங்கையர்களையும் தலைகுனியும் அளவிற்கு உலக அரங்கிலே மாற்றி இருக்கிறார் என்றால் சர்வாதிகாரம் பொருந்திய நிறைவேற்று அதிகார முறை ஒழிக்கப்பட்டது என்ற சந்தேகம் எந்த குடிமகனுக்கு இருந்தால் அவன் போன்ற பைத்தியக்காரன் உலகில் இல்லை.

உண்மையில் கூட்டு அரசாங்கத்தில் ரணிலுக்கும் மைத்திரிக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக ரணில் சார்ந்தவர்களை பழிவாங்கவேண்டும் என்ற காழ்ப்புணர்ச்சிக்கு அப்பால் ஒட்டுமொத்த இலங்கை அரசியலையும் தூக்கி வாரிப் போட்டு விடும் அல்லது இலங்கையின் அரசியல் ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டு வருவது அனைவரும் அவதானிக்கத்தக்கது.

தற்பொழுது நாட்டில் மைத்திரிபால சிறிசேனவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவும் ஒரு இரவில் முடிவு எடுக்கப்பட்டவை அல்ல என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் கடந்த 26ஆம் திகதி அன்று பிரதமரை திடீரென மாற்றியது மட்டுமல்லாது தனது எதிரியாகக் கருதப்பட்ட மகிந்த தரப்புடன் கைகோர்த்து இயங்கும் நிலையை எடுத்ததோடு மட்டுமல்லாமல் அமைச்சர்களையும் நியமிக்கும் அந்த பின்னணியில் இன்று பாராளுமன்றத்தை கலைக்கும் ஒரு முடிவை எடுத்திருக்கிறார் என்றால் அவர் நிறைவேற்று அதிகாரத்தின் உச்ச வரம்பை தொட்டிருக்கிறார் என்பது புலனாகிறது.



தற்பொழுது ஏற்பட்டு வரும் அரசியல் நடவடிக்கைகள் காய் நகர்த்தல்கள் மைத்திரி,மகிந்த தரப்பில் நன்கு திட்டமிடப்பட்ட காய்நகர்த்தல்கள் ஆகவே காணப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் நன்கு கால அவகாசத்துடன்முன்னே திட்டமிடப்பட்ட அரசியல் நகர்வுகளாகவே காணப்படுகின்றன. ஏனெனில் அரசியல்வாதிகள், எதிர்பார்க்காத சமயத்திலும் நாட்டு மக்கள் எதிர்பார்க்காத சமயத்திலும் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக அறிவித்துவிட்டு அவர்கள் சார்ந்தவர்களை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டு அவருக்கு ஆதரவு திரட்டும் முகமாக நாடாளுமன்றத்தை 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது ஒரு இராஜதந்திர நடவடிக்கையாக, திடீர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டது. இவை அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளாகும்.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட அந்த காலப்பகுதிக்குள் தங்களுக்கு தேவையான பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க பாராளுமன்ற உறுப்பினர்களை எங்கிருந்தெல்லாம் திரட்டி விட முடியுமோ அங்கெல்லாம் திரட்டும் நடவடிக்கைகளில் இரு தரப்புமே போட்டா போட்டியாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

எனினும் மைத்திரி-மகிந்த கூட்டுக்கு பெரும்பான்மையை நிரூபிப்பதில் ஏற்பட்ட சட்ட சிக்கல் காரணமாக எதிர்வரும் 14ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகின்ற போது எப்படியாவது மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பு நடந்து விடும் என்ற காரணத்தினாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கடைசி அஸ்திரமாக இன்று பாராளுமன்றம் கலைக்கப்படுகின்ற நிகழ்வு அவர் நிறைவேற்று அதிகார முறைமையை உச்ச வரம்பில் நின்று அந்த முடிவை எடுத்திருக்கிறார்.

இது எல்லாம் முன்னரே வரைவு படுத்தப்பட்ட முன்னரே கூடிய ஆராயப்பட்ட நிகழ்வுகளின் தொடர்கதையாகவே தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

முதலில் புதிய பிரதமரை அமைப்பது. பின்னர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பது, அதன் பின்னர் அந்த கால அவகாசத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முனைவது, பெரும்பான்மையை நிரூபிக்க தவறும் பட்சத்தில் பாராளுமன்றத்தை கலைப்பது என அனைத்துமே ஒரு நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்வுகளின் தொடர்ச்சியாக அமைந்துவிடுவதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது.

அண்மையில் பிரதமராக நியமிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியது போல எனக்கு தேர்தல் ஒன்றின் மூலம் பிரவேசிப்பது நாங்கள் எதிர்பார்க்கின்ற விடயம் என்று அறிவித்திருந்தார்.

எனவே தேர்தல் ஒன்றை எதிர்நோக்க வேண்டுமாயின் அதாவது அண்மையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தாமரை மொட்டு சின்னம் அதிகளவில் வெற்றி அடைந்தமை யாவரும் அறிந்த ஒரு விடயம்.

அந்த வகையில் திடீரென்று தேர்தலை எதிர் நோக்குகின்ற போது மகிந்த தரப்பு அதிகூடிய இடங்களை கைப்பற்றும். அதனால் அறுதிப் பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அதன் மூலம் தனிப்பெரும்பான்மை பெற்று மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அரசமைக்க சுதந்திரமாக மேற்கொள்ளலாம் என்ற எண்ணப்பாட்டில் இன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டது என்பது வெளிப்படை.

ஆக இன்றைய இலங்கை அரசியல் களம் மைத்திரி- மகிந்த தரப்பின் திட்டமிடப்பட்ட சரியான நிகழ்ச்சி நிரலில் பயணித்துக் கொண்டு இருப்பது கண்கூடு.

சோகம் என்னவென்றால் புதிய அரசியலமைப்பு முயற்சியின் மூலம் தமிழர்களின் தீர்க்கப்படாத பிரச்சினையை இந்த இலங்கைத் தீவில் நிரந்தரமாக தீர்த்து விடலாம் என்று நல்லாட்சி அரசாங்கம் என்ற ஒன்றை உருவாக்க பக்கபலமாக இருந்த தமிழர்களின் நிலை தான் இன்று கடவுளுக்கும் ஏற்படாத ஒரு நிலை.


மதுசூதன்

# facebook சிறு துளி

நல்ல வெயில். லொறிகளும் பேருந்துகளும் சென்றும், வந்தும் கொண்டிருந்த அந்த தார் வீதியில் வயதான மனிதர் ஒருவர் தள்ளாடி தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தார். தாகம் வாட்டியது. நா வறட்சியால் தண் ணீர் எங்காவது கிடைக்குமா என்று கண்கள் அலைபாய தேடிக் கொண்டிருந்தார்.

சற்று தூரத்தில் ஒரு பழக் கடை கண்ணில் பட அங்கு சென்றவர் கொஞ்சம் தாகத்திற்கு தண்ணீர் கிடைக்குமா? என்று கேட்டார். தண்ணீர் இல்லை. காசு இருந்தால் ஜூஸ் தருகிறேன் என்று கடைக்காரர் சொன்னார். ஐயா என்னிடம் ஜூஸ் வாங்கும் அளவுக்கு பணம் இல்லை. கொஞ்சம் தண்ணீர் கொடுத்தால் போதும் நான் போய் விடுகிறேன்.

அன்று கடைக்காரருக்கு சரியாக வியாபாரம் ஆகவில்லையோ என்னவோ. அந்த கோபத்தில் இருந்திருப்பார் போலிருக்கிறது. அதெல்லாம் கிடையாது. போங்கள் இங்கிருந்து என்று விரட்டி விட்டார்.



பெரியவர் தம்பி தாகத்திற்கு தண்ணீர் தர மறுக்கிறாய். எதையும் வியாபாரமாய் நினைக்காதே. இது ஒரு புண்ணிய காரியமல்லவா? தண் ணீர் கிடையாது போங்கள் இங்கிருந்து. மீண்டும் விரட்டி விட்டார்.

அப்பொழுது கிழிந்த ஆடையுடன் ஒரு சிறுவன் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஐயா, என் வீட்டிற்கு வாருங்கள், தண்ணீர் தருகிறேன். என்று சொல்லி அவரை அழைத்து சென்றான்.

அவன் வீடு என்று சொன்னது வீதியோரத்தில் போடப்பட்டிருந்த ஒரு பந்தல். அவ்வளவு தான். அது கித்தான் பையால் மூடப்பட்டு அதற்குள் ஒரு பெண் இருந்தாள்.

இந்த சிறுவன் அந்த பெண்ணிடம் அம்மா இவருக்கு ரொம்ப தாகமாய் இருக்கிறது; கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் என்றான். அந்த பெண் நாமோ இங்கு பிச்சை எடுப்பவர்கள். நம்மிடம் தண் ணீர் வாங்கி குடிப்பாரா என்று கேட்டாள். ஏன் அம்மா அப்படி கேட்கிறீர்கள்? அந்த பெரியவர் கேட்டார். ஐயா நாங்கள் இந்த வீதியோரம் தங்கியிருப்பவர்கள். நன்றாக இருந்தவர்கள் தான். இவன் அப்பா இறந்து விட்டதால் கிராமத்தை விட்டு பிழைப்பதற்கு இங்கு வந்தோம். இவனோ சிறுவன். எனக்கோ உடல் நிலை சரியில்லாத நிலைமை.

அதனால், வறுமையின் காரண மாய் பிச்சை எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களிடம் ஒரு உடைந்த அலுமினிய குவளை மட்டுமே இருக்கிறது. அது போக ஒரு பிளாஸ்டிக் குடம் இருக்கிறது.. அதற்குள்தான் தண்ணீர் இருக்கிறது. அந்த குவளையில் கொடுத தால் குடிப்பீர்களா? என்று தான் கேட்டேன்.

அம்மா தாராளமாய் கொடு குடிக்கிறேன். சொன்னவர் அந்த பெண் கொடுத்த குவளை தண்ணீரை பிடித்து குடித்தவர். மெல்ல தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அம்மா மிக்க நன்றி. இந்த உதவிக்கு நான் ஏதாவது செய்ய வேண்டும். ஆனால் என்னிடம் ஏதாவது இருக்கிறதா பார்க்கிறேன். தனது சட்டைபை, உடைகள் எல்லாவற்றையும் தடவி பார்த்தார். ஒரு ரூபாய் நாணயம் இருந்தது. அதை எடுத்தவர் தம்பி என்னிடம் ஒரே ஒரு ரூபாய் மட்டுமே இருக்கிறது. ஆனால் இந்த ஒரு ரூபாய் பிச்சை காசு என்று நினைத்து விடாதே. இந்த காசு மூலம் உன் வாழ்க்கையே மாறிவிட வாய்ப்பு உண்டு. சொன்னவர் அந்த காசை பையனிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து நடந்தார்.

அந்த பெண்ணும், பையனும் யோசித்து நின்றனர். இது வரை அவர்களுக்கு நிறைய பேர் சில்லறை காசுகளை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதை பிச்சையாகத்தான் நினைத்து கொடுத்திருக்கிறார்கள்இஇவர் மட்டும் காசை கொடுத்து உன் வாழ்க்கையை மாற்றிவிடும் என்று சொல்லி செல்கிறாரே. யோசனையிலேயே அன்று நாள் முழுவதும் இருந்தனர்.

மறு நாள் அந்த பையன் ஒரு முடிவு செய்து அந்த பழக்கடைக்கு சென்று எலுமிச்சம்பழம் ஒரு ரூபாய்க்கு எவ்வளவு கிடைக்கும் என்று கேட்டான். அவர் ஐம்பது பைசா வீதம் இரண்டு கிடைக்கும் என்றார். ஒரு ரூபாய்க்கு இரண்டு பழம் வாங்கி வந்தான். அடுத்து இவர்கள் வைத்திருந்த குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீர் பிடித்து வந்தான். பின் இவர்கள் வைத்திருந்த உப்பு கொஞ்சம் எடுத்து தண்ணீரில் கலக்கி அதற்குள் இரண்டு எலுமிச்சம் பழங்களை பிழிந்தான்.

அந்த குடத்தை வெளியில் கொண்டு வந்து வைத்து. ஒரு தாளில் "தாகம் எடுப்பவர்கள் குடிக்கலாம்" எழுதி அந்த குடத்தில் ஒட்டி வைத்து ஒரு அட்டையும் மூடி வைத்து அதன் மேல் அந்த நசுங்கிய அலுமினிய குவளையும் வைத்தான்.

அந்த பகுதியில் கூலி வேலை செய்பவர்களும் நிறைய இருந்தனர். அவர்களுக்கு அந்த ஜூஸ் கடை. என்பது எட்டாக்கனிதான். இந்த குடத்தை பார்த்தவுடன் தன் கையில் வைத்திருந்த சில்லறை காசுகளை போட்டு விட்டு குடித்து விட்டு சென்றனர்.

மதியம் மேல் அந்த சிறுவன் குடத்தை வந்து பார்த்த பொழுது அதில் சில்லறை காசுகள் இருந்தன. எடுத்து எண்ணிபார்க்க மூன்று ரூபா ய்க்கு மேல் இருந்தது.

மீண்டும் பழக்கடைக்கு வந்தவன் எலுமிச்சம்பழங்களை வாங்கி பிழிந்து குடத்தில் தண்ணீர் பிடித்து உப்பை போட்டு கலக்கி வைத்தான்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1554

Search for people, places and things

### சுரேஸ்குமார்

நன்றாகப் பழகும் அனைவரும் நண்பர்கள் இல்லை என்ற சிறுதெளிவு இருந்தால் போதும்



சில ஏமாற்றங்களும் பல துரோகங்களும் வராது தவிர்க்கலாம்

### ரவிராஜ்

ஒருவரை இறுதிவரை முழுமையாக நம்பும்போது



மிகச்சிறந்த நண்பரோ அல்லது மிகச்சிறந்த பாடமோ கிடைக்கின்றது

### திலீபன்

நம் நாட்டில் என்றும் மாறாத இனம்



எந்த வயதிலும் உழைக்கும் ஒரே இனம் ஏழை இனம்

### கோகுலன்

இழந்தது கால்களை மட்டும்தான் நம்பிக்கையை அல்ல



உயிருள்ளவரை ஊருக்கே சோறு போடுவேன்- விவசாயி

### நிமல்ராஜ்

பிறருக்குப் பிடிக்க வேண்டும் என்று நம் சுயமிழந்து வாழ்வதை விட



எமக்கு பிடித்தது போல் திமிருடன் வாழ்ந்துவிட்டு போகலாம்

### குணசீலன்

எஞ்சிய உணவுகளை குப்பைத் தொட்டியில் போடாதீர்கள்



இதுபோன்ற ஏழைகளின் கைகளில் கொடுங்கள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




தளபதி விஜய் மற்றும் முருகதாஸ் கூட்டணி மீண்டும் இணைகிறது என்றால் எவ்வளவு பெரிய எதிர்பார்ப்பு இருக்கும் என்பது தெரியும். அதை சர்கார் படம் பூர்த்தி செய்ததா? வாருங்கள் பார்ப்போம்.

ஒரு டெப் கம்பனியின் CEO வாக இருக்கும் சுந்தர் (விஜய்) இந்தியா வருகிறார். இந்தியாவில் இருக்கும் மற்ற கம்பனிகளே அவர் என்ன செய்யப் போகிறார் என்று பயப்படுகின்றன.

ஆனால் அவர் ஓட்டு போட தான் இங்கு வந்தார் என தெரிந்து நிம்மதி அடைகின்றன.

வாக்குச்சாவடி செல்லும் போது விஜயின் ஓட்டை யாரோ கள்ள ஓட்டு போட்டு விட்டார்கள் என தெரியவர நீதிமன்றத்திற்கு செல்கிறார் விஜய்.

தன் ஒரு ஓட்டை பதிவு செய்தபின் தான் தேர்தல் முடிவு அறிவிக்கப்படவேண்டும் என வழக்கு போட்டு அதில் வெற்றியும் பெறுகிறார்.

அதன் பின் ராதாரவி ஒரு சந்திப்பில் விஜய்யை மிக மோசமாக விமர்சிக்க, கோபமான விஜய் மீடியாவை தூண்டிவிட்டு, கள்ள ஓட்டுக்கு தங்கள் வாக்கை பறிகொடுத்த இலட்சக் கணக்கானவர்களை நீதிமன்றத்தில் வழக்கு போட வைத்து, அதையே காரணம் காட்டி மறுதேர்தல் வேண்டும் என கேட்கிறார்.

கடைசி நிமிடத்தில் பதவி யேற்பு விழா ரத்து செய்யப்பட்ட கோபத்தில் அவரை கொல்ல முயற்சி நடக்க, நானே அடுத்த தேர்தலில் போட்டியிடுகிறேன் என கிளம்புகிறார்.

அதில் வரும் தடைகளை எப்படி சமாளித்தார் என்பது தான் மீதி "சர்கார்".

"கேள்வி கேட்டால் தான் பதில் கிடைக்கும், நான் கேள்வி கேட்கிறேன்?" என தைரியமாக தமிழ்நாட்டில் உள்ள சமகால பிரச்சினைகளை பேசியுள்ள விஜய்யும், படத்தின் திரைக்கதையும் தான் சர்கார் படத்தின் மிகப்பெரிய பிளஸ்.





வில்லனாக பழ. கருப்பையா, ராதாரவி நடிப்பு மிரட்டல். பழ. கருப்பையாவின் மகளாக வரும் வரலக்ஷ்மி வார்த்தையிலேயே மிரட்டுகிறார். நிஜ வில்லன் அவர்தான். "அவன் கார்ப்பரேட் கிரிமினல், நான் கருவுளையே கிரிமினல்" போன்ற அவரது பஞ்ச் செம.

கீர்த்தி சுரேஷ் எதற்கு இருக்கிறார் என்று தெரியாத அளவுக்கு ஒரு கதாபாத்திரம். ஒரு சில காட்சிகளில் வரும் யோகிபாபுவும் பெரிதாக ஜொலிக்கவில்லை.

சண்டை காட்சிகள் வடிவமைத்தது ராம்-லக்ஷ்மன் என்பதால், அதில் தெலுங்கு சினிமா போல கொஞ்சம் ஓவர்டோஸ். விஜய் அதிலும் தெறிக்கவிட்டுள்ளார். மொத்த படத்தையும் தாங்கி நின்ற தளபதி விஜய்.

கருத்தை திணிக்காமல் சமூகத்திற்கு தேவையான கருத்தை பதிவு செய்த முருகதாஸின் திரைக்கதை. ஏ. ஆர். ரகுமானின் பின்னணி இசை.

குறிப்பிடும்படி படத்திற்கு நெகட்டிவ் விடயங்கள் இல்லை என்றாலும், படத்தின் வேகத்தை அப்படியே குறைத்து சிம்டாங்காரன் மற்றும் OMG பொண்ணு பாடல்களை தவிர்த்திருக்கலாம்.

மொத்தத்தில் சர்கார் விஜய்யின் தீபாவளி சரவெடி.




விஷன் கெயார் ஹியரிங் சொலூஷனிடமிருந்து உலகின் முதல் தர செவிப்புலன் கருவித் தெரிவுகள்
**அருகிலுள்ள விஷன் கெயார் கிளைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.**

அழையுங்கள் 076 855 49 76

VISION CARE HEARING SOLUTIONS

**விஷன் கெயார் ஒப்டிகல் சேர்விஸ் பிரைவட் லிமிட்டெட்**
இல. 06, வோட் பிளேஸ், கொழும்பு 07

கிளைகள்: கொழும்பு, காலி, குருநாகல், இரத்தினபுரி, பண்டாரவளை, கண்டி, மாத்தறை, அநுராதபுரம்,தம்புளை, திருகோணமலை, மொனராகலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நீர்கொழும்பு, களுத்துறை, கம்பஹா, குளியாப்பிட்டிய, பாணந்துறை, மாலபே, கொழும்பு-ரேஸ்கோர்ஸ்